விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 புரட்டாதி 28 திங்கட்கிழமை (14.10.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 299

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# இலங்கைக்கு வந்துள்ள சனல் 4 ஊடகவியலாளர்

## அச்சத்தில் அரசாங்கம்

(கொழும்பு)

**பிரித்தானிய சனல் 4 தொலைக்காட்சி நிறுவனத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஒருவர் இலங்கைக்கு வந்துள்ளதாக வெளியான தகவல்களை அடுத்து இலங்கை படைத்துறை வட்டாரங்கள் கடந்த வாரம் உஷார் அடைந்திருந்ததாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.**

சனல் 4 தொலைக்காட்சியின் குறிப்பிட்ட ஊடகவியலாளர் கொழும்பிலுள்ள ஒரு அடுக்கு மாடிக் கட்டிடத்தில்தங்கியுள்ளதாக புலனாய்வு அமைப்புகள் தீவிரவாத விசாரணைப் பிரிவுக்குத் தகவல் வழங்கியிருந்தனர்.

இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் குறிப்பிட்ட ஊடகவியலாளர் தனிப்பட்ட காரணங்களுக்காக அடிக்கடி இலங்கைக்கு வந்து செல்வது தெரியவந்துள்ளது.

அதேவேளை, இலங்கை தொடர்பான தகவல்களை திரட்டும் நோக்கில் குறிப்பிட்ட ஊடகவியலாளர் இலங்கை வந்தாரா என்பதை உறுதிப்படுத்தும் முயற்சியில் பாதுகாப்பு அதிகாரிகள் விசாரணைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிகட்டப் போரின் போது இலங்கைப் படைத்தரப பினரால் மேற்கொள் ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்களை சனல் 4 தொலைக்காட்சி அம்பலப்படுத்தி வருகின்றது.

பொதுநலவாய அரசியல் தலைவர்களின் மாநாடு கொழும்பில் அடுத்த மாதம் இடம் பெறவுள்ள நிலையில், சனல் 4 தொலைக் காட்சி மேலும் புதிய போர்க்குற்ற

20-ம் பக்கம் பார்க்க

## யாழ்தேவி மோதி இருவர் பலி

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த யாழ்தேவி புகையிரதத்தின் முன் பாய்ந்து தாயொருவர் தனது ஒரு பிள்ளையுடன் தற்கொலை செய்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று பகல் ஒரு மணியளவில் இடம்பெற்றதாக மத்திய புகையிரதக் கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

தாய் ஒருவர் தனது இரண்டு பெண் பிள்ளைகளுடன் ஓடும் புகையிரதத்தின்

20-ம் பக்கம் பார்க்க

# சவுத் புளொக்கில் முக்கிய மாற்றம்

## புதிய இந்தியச் செயலர் நடவடிக்கை

(கொழும்பு)

இந்திய வெளிவிவகார செயலாளராக கடந்த பெப்ரவரி மாதம் பதவியேற்றிருந்த சுஜாதா சிங் சவுத்புளொகல்முக்கிய மாற்றஙகளை செய்யவுள்ளதாக புதுடில்லி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை, பங்களாதேஷ், மியான்மார் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளின் விவகாரங்களைக் கையாளும பிஎஸ்எம் பிரிவில்முக்கிய மாற்றஙகள் செய்யப்படவுள்ளதாக இவ்வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.



இதன்படி பி.எஸ்.எம். பிரிவு இரண்டாக பிரிக்கப்பட்டு இலங்கை, மாலைதீவு ஆகிய நாடுகளின் விவகாரங்களைக் கையாள்வதற்கு ஒரு பிரிவும் மற்றும் மியான்மார், பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் விவகாரங்களைக்கையாள் வதற்கு இன்னொரு பரிவும் தனித்தனியான உருவாக்கபடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நான்கு நாடுகளுக்குமான இந்தியாவின் உதவி கடந்த ஐந்து ஆண்டுகளில் கணிசமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. பங்களாதேஷுக்கான நிதியுதவி ஒரு பில்லியன் டொலரினாலும், இலங்கைக்கான நிதியுதவி 100 மில்லியன் டொலரினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பி.எஸ்.எம். பிரிவுக்கு தற்போது பொறுப்பாகவுள்ள இணைச் செயலாளர் ஹர்ஷ்வர்த்தன் சிரிங்லா பாங்கொக்குக்கான இந்தியத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவின் உள்ளகப் புலனாய்வுப் பிரிவின் தலைவராக இருந்தவரும், முன்னாள் பிரதமர் இந்திரா காந்திக்கு மிக நெருக்கமாக இருந்தவருமான ரி.வி.ராஜேஸ்வரின் மகள் சுஜாதா சிங் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-8)

# மாகாண கடற்தொழில் அமைச்சர் முல்லைத்தீவுக்கு திடீர் விஜயம்

## கொந்தளிப்பு அழிவுகளை பார்வையிட்டார்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற் கொந்தளிப்பால் பாதிப்படைந்த பிரதேசத்திற்கு மாகாண கடற்தொழில் அமைச்சர் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை விஜயம் செய்து ஏற்பட்ட அழிவுகள் தொடர்பில் ஆராய்ந்துள்ளனர்.

கடற் கொந்தளிப்பினால் பாதிப்படைந்த முல்லைத்தீவின் கள்ளப்பாடு, தீர்த்தக்கரை, தியோகுநகர் ஆகிய பகுதிகளுக்குச் சென்று அழிவுகள் தொடர்பில் பார்வையிட்டுள்ளனர். வடமாகாண கடற்றொழில் அமைச்சராக நியமிக்கப்பட்ட பாலசுப்பிரமணியம் டெனிஸ்வரன் முதற் தடவையாக இந்த பயணத்தை

20-ம் பக்கம் பார்க்க

## மன்னார் ஆயர் வேண்டுகோள்

# சத்தியப்பிரமாண நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டது

(கொழும்பு)

முல்லைத்தீவில் நடைபெறவிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒனபது உறுப்பினர்களதும் பதவியேற்பு வைபவம்மன்னார் ஆயரின் வேண்டுகோளையடுத்து ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இது குறித்து வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் வெளியிட்ட அறிக்கையிலும் தெரிவித்துள்ளதாவது,

இன்று 14ஆம் திகதி முல்லைத்தீவில் நடைபெறவிருந்த வடக்கு மாகாணசபையின் ஒன்பது உறுப்பினர்களின் பதவிப்பிரமாணம் தொடர்பாக மன்னார் ஆயர் என்னுடன் கலந்துரையாடினார்.


தற்பொழுது கூட்டமைப்பிற்குள் ஏற்பட்டுள்ள மனத்தாங்கல்கள் தீர்க்கப்பட வேண்டியதும் தீர்க்கப்படக் கூடியதும் ஆகும்.

ஆகவே இன்று நடைபெறவுள்ள பதவிப்பிரமாணத்தை நீங்கள் ஒத்திவைத்து அதனை மாகாண சபையின் தொடக்கத்தின்போதோ அல்லது அதற்கு முன்பாகவோ செய்வதினூடாக கூட்ட

20-ம் பக்கம் பார்க்க

# இணைந்து செயற்படுவது குறித்து கூட்டமைப்பிற்கு நிதானம் தேவை

## விக்கிரமபாகு ஆலோசனை



(கொழும்பு)

இனவாதம் கொண்ட அரசுடன் இணங்கிச் செயற்படுவது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகுந்த நிதானத்துடனும், தீவிர கவனத்தோடும் இருக்க வேண்டும என்று நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

அரசு நேர்மையாகச் செயற்படின அதனுடன் இணைந்து செயற்படத் தயார்என தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அறிவித்துள்ள கருத்தை வரவேற்றுள்ள விக்கிரமபாகு, இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசின் செயற்பாடுகள் திருப்தி கரமானதாகக் காணப்பட்டால் அதனுடன் இணைந்து செயற்படத் தயார் என அறிவித்துள்ளமையானது உண்மையில் வரவேற்கத்தக்க ஒன்றாகும். மூன்று தசாப்தக் காலத்திற்குப்

20-ம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் கல்வி வலய அதிபர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்கள், இன்று மூன்றாம் தவணைப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் எண்ணிக்கை அடங்கிய விபரங்களை இன்று காலை 10 மணிக்கு முன்னதாகத் தத்தம் கோட்டங்களில் ஒப்படைக்குமாறும்,

கோட்டங்கள் அந்த விபரங்களை இன்று பிற்பகல் 2 மணிக்கு முன்னதாக யாழ். கல்வி வலய அபிவிருத்திப் பிரிவில் ஒப்படைக்குமாறும், பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். மாணிக்கராசா கேட்டுள்ளார். (ந)

# நல்லூர் கோட்டத்தில் இலவச பாடநூல்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகள் 2014-ஆம் ஆண்டிற்குரிய தரம் 1,2,3, 4,5,6,9,10 மாணவர்களுக்கான இலவசப் பாடப் புத்தகங்களில் ஒரு பகுதியை இன்று காலை நல்லூர்க் கோட்டத்தில் பெற்றுக் கொள்ளலாம் என நல்லூர்க் கோட்ட பதில் கல்விப் பணிப்பாளர் எஸ்.சண்முககுமார் அறிவித்துள்ளார். (ந)

# கன்னி அமர்வு; 25-ஆம் திகதி

வடமாகாணசபையின் முதலாவது அமர்வு எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக் கிழமை நடைபெறவுள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். யாழ்.கைதடியில் அமைந்துள்ள வட மாகாண சபைக் கட்டடத்தில் இந்த அமர்வு இடம்பெறும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

வடமாகாண சபையின் முதலாவது தேர்தல் கடந்த மாதம் 21ஆம் திகதி நடைபெற்றது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூன்றிலிரண்டு பெரும் பான்மை பலத்தைத் தாண்டி சரித்திர வெற்றி பெற்றிருந்தது. இந்தச் சபையின் முதலமைச்சராக ஓய்வு பெற்ற முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டார். அத்துடன் தவிசாளராக யாழ். மாநகரசபையின் முன்னாள் ஆணையாளர் சீ.வீ.கே. சிவஞானம் நியமிக்கப்பட்டுள்ளார். இந் நிலையில், தவிசாளர் சிவஞானத்தின் தலைமையில் வடமாகாண சபையின் கன்னி அமர்வு எதிர்வரும் 25-ஆம் திகதி நடைபெறவுள்ளது. (எ-8)




பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ ஆனைப்பந்தி மெதடிஸ்ட் மிஷன் வித்தியாலயத்தில் தரம் 05-இல் கல்வி கற்கும் **துஷ்யந்தன் தேனினி**ன்

**அபிராம்**

கடந்த 2013 புலமைப்பரிசில் பரீட்சையில் 185 புள்ளிகளைப் பெற்று எமக்கும் எமது பாடசாலைச் சமூகத்துக்கும் பெருமை சேர்த்ததையிட்டு அக மகிழ்வதோடு அவரது கல்விப் பயணம் மேலும் சிறப்புற எல்லாம் வல்ல இறைவனின் ஆசிர்வாதம் கிடைக்க வாழ்த்துகின்றோம். மேலும் இவற்றுக்காக ஊக்கம் அளித்த அதிபர் மற்றும் அல்லும் பகலும் அயராது உழைத்த ஆசிரியை **திருமதி விமலேந்திரன் நிஷாந்தினி** மற்றும் அனைத்து ஆசிரியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

(4170)

வாழ்த்துபவர்கள் :
தாத்தா, அம்மம்மா, மாமா
பெரியப்பா, பெரியம்மா


# யானையிடமிருந்து தப்பியவர் முதலையிடம் அகப்பட்டார்

யானையின் தாக்குதலிலிருந்து தப்பித்துக்கொள்ளும் முகமாக ஆற்றில் பாய்ந்த இளைஞர் ஒருவரை முதலை கடித்துக் குதறியுள்ளது.

கரடியனாறு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உறுகாமம், மஞ்சாடிச்சோலை காட்டுப்பகுதியில் உள்ள சிப்பிமடு ஆற்றிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பி.செல்வகுமார் (வயது 27) என்ற இளைஞரையே முதலை இவ்வாறு கடித்துக் குதறியுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இந்த இளைஞர் தனது மாட்டுப் பட்டிக்குச் சென்று பால் கறந்து கொண்டிருந்தபோது, அங்கு வந்த காட்டு யானை ஒன்று இவரை துரத்த ஆரம்பித்துள்ளது. இந்த நிலையில், யானையின் தாக்குதலிலிருந்து தப்பித்துக்கொள்ளும் முகமாக வேகமாக ஓடிய இந்த இளைஞர் அருகிலிருந்த சிப்பிமடு ஆற்றில் குதித்துள்ளார். இதன் போது ஆற்றில் இருந்த முதலை இந்த இளைஞரைக் கடித்துக் குதறியுள்ளது.

இவரின் கூக்குரல் சத்தம் கேட்டு ஓடிவந்தவர்கள், இந்த இளைஞரை முதலையின் வாயிலிருந்து மீட்டு வைத்திய சாலையில் அனுமதித்துள்ளனர். உடனடி யாக கரடியனாறு பிரதேச வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட இந்த இளைஞர், பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலைத தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-8)

# ஏடு தொடக்கல்

(யாழ்ப்பாணம்)

துர்க்காதேவி தேவஸ்தான ஏடு தொடக்குதல் வைபவம் இன்று முற்பகல் 9 மணிக்கு விஷேட பூசையுடன் ஆரம்பமாகவுள்ளது.

ஏடு தொடக்குதல் நிகழ்வை தேவஸ்தான தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஆரம்பித்து வைக்கவுள்ளார். (எ-5)

## மரண அறிவித்தல்

திருமதி
**லோகரூபி சுரேஷ்குமார்**



அன்னை மடியில் 19.11.1983 — இறைவன் அடியில் 10.10.2013

கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கு காரைக்காலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லோகரூபி சுரேஷ்குமார் 10.10.2013 வியாழக்கிழமையன்று இறைபதமடைந்தார். அன்னார் சபாரத்தினம் - சீதாலஷ்மி தம்பதியரின் அன்பு மகளும் அப்புத்துரை சரோஜினிதேவி தம்பதிகளின் அன்பு மருமகளும், சுரேஷ்குமாரின் அன்பு மனைவியும்,

மோகனதாஸ் (மோகன் - புத்தளம்), குகனதாஸ் (குகன் - கோண்டாவில்), கௌரி (கனடா), கமலதாஸ் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சிவகுமார் (சுவிஸ்) சுகந்தன் (லண்டன்) அன்புக்கரசி (நோர்வே), நிரஞ்சனா (ஜேர்மனி), காஞ்சனா (கனடா), ஸ்ரீரஜனி (புத்தளம்), காஞ்சனா (கோண்டாவில்) ஸ்ரீகரன் (கனடா) ஆகியோரின் மைத்துனியும் பத்மாவதி, தர்சினி, சூரியகுமார், யோகேஸ்வரன், கலியுகவரதன் ஆகியோரின் சகலியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.10.2013) திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
அ. சுரேஷ்குமார் (கணவர்)

இணுவில் கிழக்கு,
காரைக்கால்.

(4771)

# வேகமாகச் சென்ற ஆட்டோ வயோதிபரை மோதி தடம்புரண்டது

வேகக்கட்டுப்பாட்டை இழந்த ஆட்டோ பாதையில் பயணித்தவரை மோதியதில் வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இவ் விபத்துச் சம்பவம் நேற்று இரவு 7 மணியளவில் யாழ். கே.கே.எஸ் வீதியில் யாழ். இந்துக்கல்லூரிக்கு அருகில் இடம் பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தினைச் சேர்ந்த ஏ. மரியதாஸ் (63) என்ற வயோதிபரே தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி வீதியில் குறித்த வயோதிபர் குறுக்காக கடந்து செல்ல முற்பட்டுள்ளார்.

அவ்வேளையில் யாழிலிருந்து வேகமாக சென்ற ஆட்டோ பிரஸ்தாப நபரை சடுதியாக மோதி தடம்புரண்டு கவிழ்ந்துள்ளது.

எனினும் ஆட்டோ சாரதி எவ்வித காயங்களுமின்றி உயிர் தப்பியுள்ளார்.

வீதியில் பயணித்த வயோதிபர் தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்தார்.

ஆட்டோவின் மிதமிஞ்சிய வேகமே இவ் விபத்திற்கு காரணம் என நேரில் பார்த்தவர்கள் குற்றம் சாட்டினர்.

ஆட்டோ தடம் புரண்ட வேளையில் வீதியின் நடுவே பொறிக்கப்பட்டிருந்த வீதி வெளிச்சக் குறியீட்டு அலகு ஒன்று தூக்கி வீசப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு வந்த யாழ். போக்குவரத்து பொலிஸார் இவ்விபத்து தொடர்பில் ஆட்டோ சாரதியிடம் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். (எ-8)

## மரண அறிவித்தல்

திருமதி
**சபாரத்தினம் அம்பிகாவதியம்மா**



அராலி கிழக்கு வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், திருநாவற்குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சபாரத்தினத்தின் அன்பு மனைவியார் திருமதி சபாரத்தினம் அம்பிகாவதியம்மா அவர்கள் 11.10.2013 வெள்ளிக்கிழமையன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற கந்தையா, அமுதம்மா அவர்களின் அன்பு மகளும், சாந்தி, சருமதி, சுமதி, சுரேஸ்(கச்சேரி, வவுனியா), சுதன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் புவனேஸ்வரன், குகபாலன், குமரகுரு, கலைவாணி (கச்சேரி, வவுனியா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சுதாகர்(பிரான்ஸ்), சரோஜினி, சஞ்சிகா, பகிர்தா, நிரஞ்ஜா, குணாநிதி, விசாகன்(பிரான்ஸ்), ஜீவாணி, பிரதீபன், குமரமிதுனா, யசிந்தினி, டிரோஷன், டிஷாந்தன், அக்ஷனா, மவிஷ்னா ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 14.10.2013 இன்று திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பத்தினியார் மகிழங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்:
மகன்: ச.சுரேஸ்
(கச்சேரி, வவுனியா)

397, 3-ம் ஒழுங்கை
திருநாவற்குளம்
வவுனியா, 024-2222929

(சி-5177)




யாழ்ப்பாணக் கம்பன் கழகம் நடாத்தும்

**நிலாக் கால நிகழ்வு**

இடம் : கம்பன் கோட்டம், நல்லூர்.
காலம் : 15.10.2013 செவ்வாய்க்கிழமை
நேரம் : மாலை 5.00 மணி

| | |
|---|---|
| மங்கல விளக்கேற்றல் | திரு. வி. சுந்தரமூர்த்தி (தியாகி அறக்கொடை நிலையம்) |
| கடவுள் வாழ்த்து | செல்வி சோ. ஹம்சத்வனி தற்காலிக விரிவுரையாளர் (இசைத்துறை) யாழ். பல்கலைக்கழகம் |
| வரவேற்புரை | திரு. லோ. துஷிகரன் |
| தலைமையுரை | திருமதி மீரா அருள்நேசன் உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்த்துறை) வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம் |
| நிகழ்வு | பட்டி மன்றம் |

'கம்பன் புகழ் பாடிக் கன்னித் தமிழ் வளர்ப்போம்'

| | | | |
|---|---|---|---|
| த. ஜெயசீலன் பெருந்தலைவர் | லோ. துஷிகரன் தலைவர் | அ. வாசுதேவா செயலாளர் | கி. கிருபானந்தா பொருளாளர் |

**பட்டி மண்டபம்**

நடுவர்
கம்பவாரிதி இ. ஜெயராஜ்

இலக்கியக் களங்களில் சமுதாயச் சாதனைகளைப் பெரிதும் சாதித்தது.

கூட்டுமுயற்சியே
- கலாநிதி ஸ்ரீ பிரசாந்தன்
- திரு. அ. வாசுதேவா
- திரு. கு. புரந்தன்

தனிமுயற்சியே
- திரு. ந. விஜயசுந்தரம்
- திரு. ச. லலீசன்
- திரு. ந. ஐங்கரன்

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

(இ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## சகுனமும் சங்கடமும்

ஒரு கடைக்குப் போனேன். ஐந்து ரூபா பணத்தை எடுத்து ஒரு தினசரி பத்திரிகை தரும்படி கேட்டேன்.

அவர் உடனே அங்கே அடுக்கி வைத்திருந்த பத்திரிகைக் கட்டிலிருந்து ஒன்றை எடுத்து என் கையிலே கொடுத்தார். வாங்கிக் கொண்டேன். மீதி பணத்தையும் எடுத்து என் கையிலே கொடுக்காமல் எதிரிலே இருந்த பலகையிலே வைத்தார். அவரது கையிலே கொடுக்கவில்லை. எப்போதுமே இப்படியாகத்தான் செய்து கொள்வார். நானும் எடுத்துக் கொள்வேன்.

இவர் ஏன் இவ்வாறாக செய்கிறார் என்பது சந்தேகம்.

ஒருநாள் அவரிடமும் இதைக் கேட்டுவிட்டேன்.

"நீங்கள் உங்கள் கடைக்கு வந்து பொருட்கள் வாங்குபவர்களுக்கு மிகுதி சில்லறை கொடுக்கும் போது பலகையிலேயே வைக்கிறீர்கள்...கையிலே கொடுப்பதில்லை.ஏன் அப்படி?" என்று கேட்டேன்.

"பணத்தை கையிலே கொடுத்தால் நம்மிடமுள்ள 'இலட்சுமி' போய்விடுவாள்" என்றார்.

அதாவது பணம் செலவாகிவிடும் என்பது'அர்த்த மாகும்.

இன்னொரு நண்பர். அவர் ஒரு நாள் வழக்கத்துக்கு மாறாக மிகவும் சோகமாக அமர்ந்திருந்தார்.

ஏன் இப்படி கப்பல் கவிழ்ந்தது போல அமர்ந்திருக் கிறீர்கள்? என்று கேட்டேன்.

''கப்பல் கவிழ்ந்தால்கூட இப்படி கவலைப்படமாட்டேன். வேறொன்று நடந்து விட்டது" என்றார்.

"என்ன?" என்று கேட்டேன்.

''என் உச்சம் தலையிலே பல்லி ஒன்று விழுந்து விட்டது'' என்றேன்.

"அதற்காகவா இப்படியாக ஒரு யோசனை?" என்று ஆச்சரியப்பட்டேன்.

ஆமாம்... பல்லி உச்சந்தலையிலே விழுந்தால், பலன் என்ன என்று பஞ்சாங்கத்திலே பார்த்தேன். 'மரணம்' என்றுள்ளது. இவ்வாறு கூறிவிட்டு தொடர்ந்து யோச னையில் ஆழ்ந்தார்.

இப்படியும் ஒருவர் இருக்கிறார்.

எனது அலுவலகத்திலே வேலை பார்க்கும் சக நண்பர் அலுவலகத்தினுள் நுழையும் போது வலது காலை வைத்துத்தான் உள் நுழைவார்.

என்றாவது ஒருநாள் தவறுதலாக இடது காலை வைத்து உள்ளே வந்து விட்டார் என்றால், அன்று முழு வதும் அவரது மனம் சங்கடப்பட்டுக் கொண்டேயிருக் கும்.எந்த வேலையையும் சரியாக செய்யமாட்டார்.

பூனை குறுக்காகப் போனால் சகுனம் சரியில்லையென்று நினைப்பவர்கள் இருக்கிறார்கள். ஆனால், ஒருவர் எப்படி தெரியுமா? அவர் வீட்டைவிட்டு வெளியிலே புறப்படும் போது அயல் வீட்டில் உள்ள வானொலியில் "மியாவ்... மியாவ் பூனைக் குட்டி '' என்று பாட்டு சத்தம் கேட்டால்கூட போதும் சகுனம் சரியில்லை என்று பிரயாணத்தை 'கான்சல்' செய்திடுவார்.

அளவுக்கு மீறின சகுன நம்பிக்கைகள் இருக்கிறது. இதனுடன் பயமும் சேர்ந்து கொண்டால் எப்படி இருக்கும். வாழ்க்கையையே தடுமாற வைத்துவிடும். சிலர் காய்கறி வெட்டுவதற்கு கத்தியைக் கையிலே எடுக்கும் போதுகூட நேரம் சரியாக இருக்கிறதா என்று பார்த்துக் கொள்வார்கள். அப்படி பார்த்துத்தான் ஆரம்பிப்பார்கள்.

"அறிவு" தான் "மனதிற்கு" ஆசிரியராக இருக்க வேண்டும். அப்போதுதான் வாழ்க்கை எனும் படகில் நிம்மதியாக ஓட முடியும்.

அறிவு–மனம் சொல்வதைக் கேட்க ஆரம்பித்து விட்டால் இடைஞ்சல் தான்.

ஒருவருக்கு ஏழாம் நம்பர் தான் இராசியான நம்பர். 7 ஆம் திகதி தான் எந்தக் காரியத்தையும் ஆரம்பிப்பார். ஏழு எழுத்து வருவது மாதிரி பெயரை மாற்றி வைத்துக் கொண்டார்.

ஏழு மணிக்குத்தான் தினமும் எழும்புவார்.

ஏழாம் நம்பர் வீட்டில்தான் குடியிருக்கிறார்.

கல்யாணமும் ஏழாம் திகதிதான் பண்ணிக் கொண்டார்.

அவர் ஒருநாள் குதிரைப் பந்தயத்திற்குப் போனார்.

குதிரையின் பெயரைக்கூட ஏழு எழுத்தில் அமைந்திருப்பது போல பார்த்து பணத்தைக் கட்டினார்.

பந்தயம் நடந்தது. "என்ன ஆச்சு சேர்?" என்று கேட்டார்கள்.

அதற்கு அவர் "நான் பணம் கட்டிய என்னுடைய குதிரை ஏழாவதாக வந்து சேர்ந்தது" என்றார் சோகத்துடன்!

. தென்கச்சி கோ சுவாமிநாதன்

# காணாமற்போனோர் தொடர்பான விபரங்களை பதிவு செய்யலாம்

(யாழ்ப்பாணம்)

யுத்த காலத்தில் காணாமற்போனோர்கள் தொடர்பான விண்ணப்பங்களை ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு அனுப்புவதற்காக விபரங்கள் திரட்டும் பணி இன்று முதல் எதிர் வரும் 18 ஆம் திகதி வரை ஐந்து மாவட்டங்களிலும் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் கடந்த 1990ஆம் ஆண்டு முதல் கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள ஒரு ஆணைக் குழு அமைக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் திருமதி நவநீதம்பிள்ளை அம்மையாரும் இவ்வாணைக்குழுவை வரவேற்றுள்ளார். மேற்படி ஆணைக் குழு இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு ஊடகங்கள் ஊடாக அறிவித்துள்ளது.

ஆகவே மேற்படி விடயம் தொடர்பாக மக்களின் நலன் கருதி ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கின்ற வடமாகாண காணாமற்போன உறவுகளின் குடும்பங்களின் சங்கம் காணாமற்போனோர்களின் பெயர்களைப் பதிவு செய்து ஜனாதிபதியினால் அமைக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவுக்கு அனுப்பும் முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது. அதற்கு தங்களுடைய பூரண ஒத்துழைப்பை நல்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் மன்னார் பிரஜைகள் குழு இம்முயற்சிக்கு பூரண ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்கி வருகிறது.

வடமாகாணம், காணாமற் போன உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்கத்தின் தலைமைச் செயலகம் மன்னார் பிரஜைகள் குழுவில் இயங்கி வருகிறது.

இதன்படி பின்வரும் இடங்களில் குறிப்பிடப்பட்ட திகதியில் காணாமற்போனவர்களின் உறவுகள் அனைவரும் வருகை தந்து காணதமற்போனோர் தொடர்பான பெயர்களைப் பதிவு செய்து தங்கள் உறவுகளின் சார்பாக நாங்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பின்வரும் இடங்களில் குறிப்பிடப்பட்ட திகதியில் விபரங்கள் காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை திரட்டப்படும்.

இதன்படி இன்று யாழ்ப்பாணத்தில் இலக்கம் 81, குரு சோவர் வீதியிலுள்ள அருட்கடல் இல்லத்திலும் நாளை செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் பழைய மக்கள்வங்கிமுன்பாகவுள்ள மேய்ப்புப்பணிஇல்லத்திலும் நாளை மறுதினம் புதன் கிழமைமுல்லைத்தீவுமாவட்டத்தில் புதுக்குடியிருப்பு வற்றாப்பளை 10 ஆம் வட்டாரத்திலுள்ள மாகாண சபை உறுப்பினர் கனக சுந்தர சுவாமியின் வதிவிடத்திலும் விபரங்கள் திரட்டப் படும்.

இதேவேளைஅன்றைய தினம் முல்லைத்தீவு மாவட்டத்துக்குட்பட்ட கள்ளப்பாடு வடக்கு பொது நோக்கு மண்டபத்திலும் விபரம் திரட்டல் நடைபெறும் என அறிவிக் கப்பட்டுள்ளது.

மேலும் வவுனியாவில் இறம்பைக் குளம் புனித அந்தோனியார் ஆலய வளாகத்தில் 17 ஆம் திகதியும் மன்னாரில் புனித செபஸ்ரியார் பேராலயத்தில் 18 ஆம் திகதியும் விபரங்கள் திரட்டப்படவுள்ளதாகவும் மேலதிக தகவல்கள் அறிய விரும்புவர்கள் 023 222 2038, 0771139897 என்ற இலக்கங்களூடாக மன் னார் பிரஜைகள் குழு அதிகாரி தே.பி.சிந்தாத்துரையிடம் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ–6)

# வடக்கு மாகாணசபையிலுள்ள அமைச்சுக்களின் பொறுப்புக்கள்

வடமாகாணசபையின் முதலமைச்சர் மற்றும் ஏனைய அமைச்சர்களுக்கான அமைச்சுப் பொறுப்புக்கள் குறித்த விபரம் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி வடமாகாண சபையின் முதலமைச்சர் கனகசபாபதி விஸ்வலிங்கம் விக்கினேஸ்வரன், நிதி திட்டமிடல் சட்டமும் ஒழுங்கும், காணி வீதி அபிவிருத்தி, மின்சக்தி, வீடமைப்பு, நிர்மாணம், கூட்டுறவு, அபிவிருத்தி , சமூக சேவைகள் மற்றும் புனர்வாழ்வளித்தல், தொழிற்துறை, தொழில் முனைவோர் மேம்பாடு, சுற்றுலா, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், உணவு வழங்கலும் விநியோகமும் போன்ற அமைச்சுப் பொறுப்புக்களை கொண்டுள்ளார்.

ஏனைய அமைச்சர்களான வடமாகாண விவசாய அமைச்சர்கள் பொன்னுத்துரை ஐங்கரநேசன், விவசாயமும் கமநல சேவைகளும் கால் நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், சுற்றாடல் அமைச்சு பொறுப்புக்களையும் வடமாகாண கல்வி அமைச்சர் தம்பிராசா குருகுலராஜா, கல்வி கலாசார அலுவல்கள், விளையாட்டு, இளைஞர் விவகார அமைச்சுப் பொறுப்புக்களையும் வடமாகாண சுகாதார அமைச்சர் பத்மநாதன் சத்தியலிங்கம் சுகாதார சேவை, சுதேச மருத்துவ அமைச்சு பொறுப்புக்களையும் வடமாகாண உள்ளூராட்சி அமைச்சர் பாலசுப்பிரமணியம் டெனிஸ்வரன் மீன்பிடி, போக்குவரத்து, கைத்தொழில் வர்த்தக வாணிப முயற்சி, கிராம அபிவிருத்தி அமைச்சு பொறுப்புக்களையும் முன்னெடுத்து செல்லவுள்ளனர். (அ–5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 30 | 40 |
| உருளைக்கிழங்கு | 140 | 100-120 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 70 | 100 |
| தக்காளி | 80 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 60 |
| கோவா | 50 | 60 | 70 |
| கரட் | 40 | 40 | 100 |
| பூசணி | 25 | 30 | 50 |
| புடோல் | 40 | 60 | 80 |
| வாழைக்காய் | 40 | 30 | 50 |
| சின்ன வெங்காயம் | 180 | 100-160 | 200 |
| பெரிய வெங்காயம் | 110 | 120 | 120 |
| பாகற்காய் | 140 | 80 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 40 | 40 | 70 |
| பயற்றங்காய் | 160 | 120 | 100 |
| லீக்ஸ் | 70 | 110 | 120 |
| பீற்றூட் | 15 | 15 | 40 |
| கறிமிளகாய் | 60 | 60 | 100 |
| முருங்கைக்காய் | 40 | 100 | 160 |
| போஞ்சி | 90 | 90 | 120 |
| கீரை – 1 பிடி | 20 | 15 | 30 |
| தேசிக்காய் | 450 | 400 | 500 |
| [illegible] | 60 | 50 | 40-50 |
| இராசவள்ளி | [illegible] | 80 | 120 |

# இராசி பலன்

14.10.2013
(புரட்டாதி 28, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
தசமி பிற்பகல் 12.01 மணிவரை
திருவோணம் காலை 6.26 மணிவரை
அவிட்டம் பின்னிரவு 5.06 மணிவரை
இராகுகாலம் 7.32-9.02 மணிவரை
சுபநேரம் 12.02-1.32 மணிவரை
கேதாரகௌரி விரதாரம்பம்
விஜயதசமி, அமிர்தசித்தம்

**மேடம்** தொலைபேசி மூலம் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**இடபம்** பக்குவமாக நடந்து பாராட்டு பெறுவீர்கள், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, புதிய திட்டங்கள் கைகூடும்.

**மிதுனம்** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை, தொழில் வளர்ச்சியில் சிறுதடை தாமதங்கள் ஏற்படலாம், பிரயாண பயமுண்டு.

**கடகம்** முன்னேற்றம் கருதி பயணமொன்றை மேற்கொள்வீர்கள், எளிதில் உணர்ச்சி வசப்படுவதை தவிர்ப்பது நல்லது, புதிய பொருட் சேர்க்கையுண்டு, கௌரவமான நாள்.

**சிங்கம்** கடன் சுமை குறைய புதிய வழிவகை செய்து கொள்வீர்கள், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், நன்மையான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கன்னி** தொட்ட காரியம் வெற்றி பெறும், பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சொந்தங்களால் ஆதாயமுண்டு.

**துலாம்** அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், யோகமான நாள், தாய் வழியில் அனுகூலமுண்டு, கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** இனிய அனுபவங்கள் ஏற்படலாம், விருந்தினர் வருகையுண்டு, உடன் பிறப்புக்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், அந்நிய சந்திப்புண்டு.

**தனுசு** வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும், சிலர் கௌரவக் குறைவாக நடந்து கொள்ளலாம்.

**மகரம்** வழிபாட்டின் மூலம் மகத்துவம் காண்பீர்கள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புக்கள் வந்து சேரலாம், தேவையற்ற கற்பனையை வளர்த்துக் கொள்வீர்கள், சயன சுகமுண்டு.

**கும்பம்** மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறும் நாள், ஒரு வேலையை முடிக்க ஒன்றுக்கு மேற்பட்ட தடவை அலைய நேரிடலாம், குடும்ப பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது.

**மீனம்** செல்வாக்கு மேலோங்கும் நாள், பிரியமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வழிபாட்டால் மகிழ்ச்சி காண்பீர்கள், நண்பர்களின் சந்திப்புண்டு, காரிய அனுகூலமுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவாலை எதிர்நோக்கியுள்ள வாகன லீசிங் சந்தை

## சந்தை நிபுணர் தகவல்

இலங்கையின் வாகன லீசிங் சந்தையானது கடந்த சில வருடங்களாகவே சவால்களை எதிர் நோக்கி வருவதாக முன்னணி சந்தை நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார். இந்த நிலைக்கு பிரதான காரணியாக தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்படும் வாகன இறக்குமதி தீர்வுகள் மற்றும் வரி விதிப்புகள் போன்றன காரணமாக அமைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

கடந்த சில வருடங்களில் தொடர்ச்சியாக பல விஸ்தரிப்பு நடவடிக்கைகளில் முதலீடுகளை மேற்கொண்டுள்ள வாகன லீசிங் சேவை வழங்குநர்கள் இந்த சவால்கள் நிறைந்த சூழ்நிலைகளின் காரணமாக பெருமளவு பின்னடைவை எதிர்நோக்கியுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

வரிகளில் குறைப்பு ஏற்பட்டிருந்ததை தொடர்ந்து, குறித்த இரண்டு வருட காலப்பகுதியில் பெருமளவானோர், வாகனங்களில் முதலீடுகளை மேற்கொண்டிருந்தனர். அத்துடன் லீசிங் பெற்றுக் கொள்வதிலும் பெருமளவு ஆர்வத்தை வெளிப்படுத்தியிருந்தனர். ஆனாலும் வரிவிதிப்பு அதிகரிப்பட்டதை தொடர்ந்து, வாகனங்களின் கேள்வி குறைவடையத் தொடங்கியதுடன், லீசிங் துறையும் பின்னடைவை எதிர்நோக்கியுள்ளது. இந்த நிலையில் துறையில் காணப்படும் போட்டிகரத்தன்மையும் ஒரு காரணியாக அமைந்துள்ளது என பீபிள்ஸ் மேர்ச்சன்ட் ஃபினான்ஸ் பிஎல்சியின் பணிப்பாளர் கோவிந்தசாமி ரமணன் தெரிவித்திருந்தார்.

# அமல் கப்ரால் வரவு

யுனிலீவர் சிறிலங்கா நிறுவனத்தின் வெளிச்செல்லும் தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான அமல் கப்ரால், சிலோன் பிரைவரிஸ் பணிப்பாளர் சபையில் இணைந்து கொள்ளவுள்ளார்.

நவம்பர் மாதம் 1-ம் திகதி முதல அமுலுக்கு வரும் வகையில் நிறைவேற்று அதிகாரமில்லாத சுயாதீன பணிப்பாளர் நியமனம் வழங்கப் பட்டுள்ளது.

பொது நிர்வாகம் மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை ஆகிய துறைகளில் சுமார் 3 தசாப்தங்களுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ள கப்ரால், யுனிலீவர் நிறுவனத்தின் பங்களாதேஷ், இந்தியா மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகளில் பணியாற்றியுள்ளார்.

# DFCC வங்கியின் புதிய நியமனம்

DECC வங்கியின் புதிய பிரதம நிறைவேற்று அதிகாரியாக அர் [ { ன் பெர்ணான்டோ கடந்த முதலாம் திகதி முதல் நியமிக்கப் பட்டுள்ளார். இதுவரை காலமும் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக செயற்பட்ட நிஹால் பொன்சேகா தமது ஓய்வு குறித்து கடந்த ஜனவரி மாதம் அறிவித்திருந்தமையை தொடர்ந்து இந்த புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் அர ; [ { ன் பெர்ணான்டோ வங்கியின் பதில் பிரதம நிறைவேற்று அதிகாரியாக பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவர் வங்கியியல் துறையில்சுமார்28 வருடகாலஅனு பவத்தை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# கிளி.யில்.கொள்வனவு நிலையம்; கார்கில்ஸ் நிறுவனம் உத்தேசம்

## 2 ஆண்டுகளை கடந்து அளவெட்டி கொ/வு நிலையம் வெற்றிநடை





காகீல்ஸ் சிலோன் பி.எல்.சி. யானது இன்று அகில இலங்கை ரீதியில் மிகவும் வளர்ந்துள்ள ஒரு நிறுவனமாகும்.

குறிப்பாக வட பகுதியை பொறுத்த வரையில் ஏ9 நெடுஞ்சாலை சீரான காலத்தில் இருந்து இன்று வரை அபரமிதமான வளர்ச்சியை காகீல்ஸ நிறுவனம் அடைந்துள்ளது.

மேலும் காகீல்ஸ் ஆனது 2010-ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை உள்ளூர் விவசாயிகளிடம் இருந்து பல வகையான மரக்கறிகளையும், பழவகைகளையும் நேரடியாக கொள்வனவு செய்து தனது 227 food city மூலம் விற்பனை செய்து வருகின்றது.

ஆரம்பத்தில் விவசாயிகளின் களத்தில் கொள்வனவு செய்த நிறுவனம், கொள்வனவைக் கூட்டும் வகையில் 22.09.2011-ல் அளவெட்டியில் தனியான மரக்கறி மற்றும் பழ கொள்வனவு நிலையத்தை திறந்து இன்று ஏறக்குறைய 4 ஆயிரம் கிலோகிராம் மரக்கறி மற்றும் பழ வகைகளை தினமும் கொள்வனவு செய்து வருகிறது.

இது மட்டுமன்றி உள்ளூர் விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக பல் வேறு வகையான செயற்பாடுகளை செய்தும், செய்வதற்கும் உத்தேசித்தும் வருகின்றது.

1. விவசாயிகளுக்கு நேரடி மற்றும் மறைமுக தொழில் வாய்ப்பு
2. விவசாயிகளின் குழந்தைகளின் கல்விக்கான பகுதி ஒத்துழைப்பு.
3. விவசாயிகளுக்கான விசேட காப்புறுதி திட்டம்.
4. அறுவடைக்கு பின்னரான இழப்புக்களைக் குறைப்பதற்கான பிளாஸ்ரிக் கூடைகள் இலவச விநியோகம்.
5. இலவச விதைகள் விநியோகம் (Seed Distrbution)
6. Sonaka மற்றும் Shared (விதை அற்ற திராட்சை இனம்) அறிமுகம் செய்தமை.

மேலும் விவசாயிகளின் முன்னேற்றம் கருதி கிளிநொச்சி மாபெரும் பழ வகைகள் மற்றும் மரக்கறி கொள்வனவு நிலையம் ஒன்றையும், பழரச உற்பத்திக்கான ஆரம்ப பதனிடல் பகுதியும் மிக விரைவில் திறப்பதற்கு உத்தேசித்து உள்ளது.

இவ்வாறான சமூக பொறுப்புடன் கூடிய செயற்பாடுகள் மூலம் விவசாயிகளின் நன்மதிப்பை பெற்று காகீல்ஸ் சிலோன் பிஎல்சி வளர்ந்து நிற்கின்றது.

Cargills
My Company. My Country.

# கொமர்ஷல் வங்கியின் அஷ்சீவர் நடைமுறைக் க/கு

கொமர்ஷல் வங்கி Achiever என்ற பெயரில் ஒரு புதிய நடைமுறைக் கணக்கை அறிமுகம் செய்துள்ளது. இலங்கையின் இளைய தலைமுறை தொழில் முயற்சியாளர்களும், நிறைவேற்று அதிகாரிகளும் தமது நிதி கொடுக்கல் வாங்கல்களைக் கையாள பிரத்தியேகமாக இந்தக் கணக்கு அறிமுகம் செய்யப் பட்டுள்ளது.

COMMERCIAL BANK

மாதாந்தம் 50 ஆயிரம் ரூபாவை அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை வருமானமாய் பெறும் 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட நிறைவேற்று அதிகாரிகள் இந்த Achiever கணக்கை திற்ந்து கொள்ள முடியும்.

இந்த கணக்கு வைத்திருக்கும் ஒருவர் தனது சம்பளத்தில் அல்லது வருமானத்தில் இரு மடங்கை இந்தக் கணக்கின் மூலம் மேலதிக பற்று வசதியாகப் பெற முடியும். இதன் உச்ச கட்டத் தொகை 300, 000 ரூபாவாக இருக்கும். உத்தரவாதம் அளிப்போர் இன்றி கடன் மற்றும் லீசிங் வசதிகள் என்பனவற்றையும் பெற்றுக் கொள்ளலாம். மேலும் இந்தக் கடன்களுக்கு தற்போதுள்ள வட்டி வீதத்திலும் பார்க்க ஒரு வீதம் குறைவாகவே வட்டி அறவிடப்படும் என்றும் வங்கி அறிவித்துள்ளது.

# கொமர்ஷல் வங்கி திறந்திருக்கும்

நாளை மறுதினம் 16-ம் திகதி புதன்கிழமை ஹஜ் பெருநாள் தினத்தன்று நாடு முழுவதும் உள்ள கொமர்ஷல் வங்கியின் 59 கிளைகள் வாடிக்கையாளர்கள் நன்மை கருதி திறந்திருக்கும் என அறிவிக் கப்பட்டுள்ளது.

அத்தோடு அன்றைய தினம் காலை 9 மணி முதல் மதியம் 1 மணி வரையில் சேவைகளை வழங் கும். ஹஜ் பெருநாள் தினம் அரச வங்கி வர்த்தக விடுமுறை தினமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் வங்கியின் 365 நாள் திறந்திருக்கும் கிளை மற்றும் கட்டுநாயக்கவில் 24 மணி நேரமும் திறந்திருக்கும் கிளை என்பனவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# செப்ரெம்பர் பணவீக்கம்

தொகைமதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களத்தினால் கணிக்கப்பட்டவாறான கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணினால் (2006 ₤07=100) அளவிடப்பட்டவாறான பணவீக்கம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் முன்னைய மாதத்தின் 6.3 சதவீதத்திலிருந்து 2013 செப்ரெம்பரில 6.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு குறைந்த உணவு விலைகளே முக்கிய காரணமாகிறது.

ஆண்டுச் சராசரி பணவீக்க வீதமும் முன்னைய மாதத்தில் பதிவு செய்யப்பட்ட 8.0சதவீதத்திலிருந்து 2013செப்ரெம்பரில் 7.8 சதவீதத்திற்குத் தொடர்ந்து நானகாவது மாதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

ஆண்டிற்கு ஆண்டு அடிப்படை மற்றும் ஆண்டுச் சராசரி அடிப்படையிலானமையப் பணவீக்கம் 2013 ஓகத்தின் முறையே3.1 சதவீதம் மற்றும் 5.9 சதவீதத்திலிருந்து 2013 செப்ரெம்பரில் முறையே 3.0 சதவீதத்திற்கும் 5.7 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தது.

## மைக்ரோ கார்ஸ் நிறுவனத்துடன் ஒன்றிணையும் செலான் வங்கி




செலான் வங்கியானது அண்மையில் மைக்ரோ கார்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தின் குத்தகைப் பங்காளராக கைகோர்த்துள்ளது. இதன்மூலம் நாடெங்கிலும் இருக்கின்ற அந்நிறுவனத்தின் வாடிக்கையாளர்களுக்கு மனமகிழ்ச்சியைத் தரும் குத்தகை (லீசிங்) வசதிகள் மற்றும் வங்கியூடான காப்புறுதி சேவைகளையும் வழங்குகின்றது. இப்போது முதற்கொண்டு, மைக்ரோ கார்ஸ் வாடிக்கையாளர்கள் அனைவரும் செலான் வங்கியினது குத்தகை வசதிகளை நாடாளாவிய ரீதியிலுள்ள வங்கியின் 150 சேவை நிலையங்களுள் ஏதாவது ஒன்றின் ஊடாக பெற்றுக கொள்ளக் கூடியதாக இருக்கும்.

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 129.50 | 132.76 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 206.28 | 212.81 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 174.15 | 180.43 |
| சுவிஸ் பிராங் | 141.21 | 146.80 |
| கனேடிய டொலர் | 123.83 | 128.43 |
| அவுஸ்திரேலிய டொலர் | 121.76 | 126.71 |
| சிங்கப்பூர் டொலர் | 103.20 | 106.88 |
| ஜப்பான் யென் | 1.30 | 1.35 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.13 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.71 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# கடந்த வாரம் பங்குச்சந்தை

கொழும்பு பங்குச்சந்தை கொடுக்கல் வாங்கல்களை பொறுத்தமட்டில் கடந்த வாரம் மொத்தப் புரள்வு பெறுமதி தொடர்ச்சியாக அதிகரித்த பெறுமதியை பதிவு செய்திருந்தது. ஆனாலும் கடந்த ஏழு வாரங்களாக தொடர்ச்சியாக உயர்வான பெறுமதியை பதிவு செய்திருந்த போக்கு சரிவை எதிர்நோக்கியிருந்தது.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அதிகளவு பங்கு கொள்வனவில் கடந்த வாரம் தமது ஆர்வத்தை வெளிப்படுத்தியிருந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை பங்குச் சந்தை நடவடிக்கைகள் நிறைவடையும் பொழுது, அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 5,947.42 ஆகவும், S&P சிறிலங்கா 20 சுட்டி 3283.62 ஆகவும் அமைந்திருந்தன.

ஒக்டோபர் 07ஆம் திகதி யுடன் ஆரம்பமான கடந்த வாரத் தின் இறுதியில் மொத்த பங்கு புரள்வு பெறுமதியாக ரூ. 3,292,715, 605 அமைந்திருந்தது. கடந்த வாரம் மொத்தமாக 42,392 பங்கு கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெற்றன. இதில் உள்நாட்டு கொடுக்கல் வாங்கல்கள் 42,392 ஆகவும் வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்கள் 1,151 ஆகவும் பதிவாகியிருந்தன.

கடந்த வார கொடுக்கல் வாங்கல நடவடிக்கைகளில் சுவர்ண மஹால் ஃபினான்ஸ், சொஃப்ட்லொஜிக் கெப்பிட்டல், என்விறிசோர்சஸ் (உரிமை), லீ ஹெட்ஜஸ் மற்றும் த ஃ.பினான்ஸ் கம்பனி (சாதாரண) போன்றன முதல் ஐந்து சிறந்த இலாபமீட்டிய பட்டியலிடப்பட்ட கம்பனிகளாக பதிவாகியிருந்தன.

லேக் ஹவுஸ் பிரின்டர்ஸ், பீசி ஹவுஸ், ஹியுஜே, செரண்டிப் லாண்ட் மற்றும் ஆசரி சென்ரல் போன்ற நிறுவனங்களின் பங்குகள் அதிகளவு நஷ்டமீட்டியதாக பதிவாகியிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மக்களின் உயர்வுக்கு இந்தியா என்றும் உதவும்

## இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கம்

வடக்கு மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த மாகாணசபை எடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் இந்தியா தனது முழுமையான ஆதரவை வழங்கும் என அந்நாட்டின் யாழிலுள்ள துணைத்தூதரகத்தூதுவர் வி.மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

வடக்குமாகாணசபையின் ஆளும்கட்சிஉறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு கடந்த 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் இடம் பெற்றது. இதில் கலந்து கொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் சரித்திர புகழ்பெற்ற இந் நாளில் உங்களுடன் ஒன்றாக இருப்பதையிட்டு, நான் மகிழ்ச்சியடைகின்றேன். இலங்கை வரலாற்றில் தனியாக வடக்கு மாகாணத்துக்கென தேர்தல் வெற்றிகரமாக நடத்தப்பட்டு மாகாண சபை உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் செய்யும் நாள் மிகவும் முக்கியமானதாகும் என்பதை நாம் மறக்க முடியாது.

இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் வெற்றி பெற்று ஆட்சி அமைத்ததற்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும், ஒன்றுபட்ட இலங்கைக்குள் இலங்கை அரசாங்கமும் வடக்கு மாகாண சபையும் இணைந்து வடக்கு மாகாண மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யவும் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் எடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் இந்தியா பூரண ஆதரவு வழங்கும் என்பதை உறுதிப்படத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றும் தொழில் வர்த்தகம் சம்பந்தமாகவும் மக்கள் தொடர்பு சம்பந்தப்பட்ட அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் வடக்கு மாகாண சபை எடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் ஆதரவு வழங்குவோம்.

எனவே, வடக்கு மாகாணசபை உயர்ந்த வெற்றிபெற அனைவரும் பாடுபடவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் பதிலளிக்க அமைச்சர்கள் இருப்பதில்லை

## ஜனாதிபதியிடம் சபாநாயகர் முறைப்பாடு

பாராளுமன்ற அமர்வின் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது பதிலளிப்பதற்கு அமைச்சர்களோ பிரதியமைச்சர்களோ சமூகமளிப்பதில்லை. இது தொடர்பில் கவனம் செலுத்துமாறு சபாநாயகர் சமல்ராஜபக்ஷ ஜனாதிபதியிடம் முறையிட்டார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த வெள்ளிக்கிழமை பாரளுமன்றத்துக்கு வருகை தந்த போதே சபாநாயகர் நேரடியாக ஜனாதிபதியிடம் இந்த வாய்மூல முறைப்பாட்டை முன்வைத்தார்.

பிரதான நடவடிக்கைகளின் பின்னர் (கோப்) பொது நிறுவனங்கள் பற்றிய பாராளுமன்ற குழுவின் அறிக்கை மீதான இரண்டாம் நாள் விவாதம் இடம்பெற்றுக் கொண்டிருந்தது.

இதன்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சபைக்குள் பிரவேசித்தார். அப்போது எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவும் கம்பஹா மாவட்ட எம்.பியுமான ஜோன் அமரதுங்க உள்ளிட்ட எம்.பி.க்கள் சிலர் மேசையில் தட்டி ஆரவாரத்துடன் வரவேற்றனர்.

ஏனைய தினங்களில் ஜனாதிபதி பாராளுமன்றத்துக்குள் சமுகமளிக்கும் சந்தர்ப்பங்களில் ஆளும் கட்சி எம்.பிக்களும் பிரதி அமைச்சர்களும் அமைச்சர்களும் சபையில் பிரசன்னமாகியிருப்பர்.

எனினும் வெள்ளியன்று ஜனாதிபதி சமூகமளித்த சந்தர்ப்பத்தில் ஆளும் கட்சியின் தரப்பில் மிகக் குறைவான உறுப்பினர்களே சமுகமளித்திருந்தனர். (அ-2)

# வித்தியாரம்பம்

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் ஐ.ஏ.ரி.சித்திரப்பயிற்சி நிறுவனத்தின் சித்திரவித்தியாரம்ப நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அந் நிறுவனத்தில் நடைபெறவுள்ளன. (அ-5)

# நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய இந்து மாணவர் மன்றத்தினால் நடத்தப்படும் வாணிவிழா இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் மன்றத் தலைவர் ர.தர்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன்போது மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறும். (அ-5)






# நவராத்திரி பாமாலை

நித்தம் அருள் தருவாய் தாயே



வேண்டும் வரம் எமக்களித்து
வாழ்வு தந்திடும் தாயே
பயத்தை விரட்ட வீரத்தையும்
வாழ்வு செழிக்க செல்வத்தையும்
அறிவைப் புகட்ட கல்வியையும்
எமக்களித்த தாயே சக்தியவள்
சிறப்புடனே நாம் வாழ
வேண்டும் வரம் தந்திடுவாள்
நவராத்திரி நாளாம் இந்நாளில்
நவநாளை கொண்டாடுவோம்
நிலையாத வாழ்வு வாழ்வதற்காய்
நிறைய அருள் தந்தனையே தாயே
உன் புகழ் ஓங்க நித்தம் உனை வேண்ட
நித்தம் அருள் தருவாய் தாயே!

மாதங்கி குபேரமூர்த்தி (தரம் -5A) யா/இணுவில் இந்துக்கல்லூரி)

# லசந்த கொலை குறித்து தடையின்றி விசாரணை

(கொழும்பு)

சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்ரம துங்க தொடர்பான விசாரணைகள் எந்தவித தடங்கலுமின்றி சுயாதீனமாக முன்னெடுக் கப்படுவதாக ஆளும் தரப்பு பிரதம கொறடா அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித் துள்ளார்.

லசந்த விக்ரமதுங்கவின் கொலை தொடர் பில் ரவி கருணாநாயக்க எழுப்பிய வினாவு க்கு ஆளும் தரப்பு சார்பாக பதிலளித்த அவர், கொலை தொடர்பான விசாரணையில் அச ட்டை காட்டப்படவில்லை. இக்கொலை சம் பவத்தை மூடி மறைக்க நாம் முயலவில்லை.

இந்த சம்பவம் தொடர்பில் 4 பேர் இது வரை கைதாகியுள்ளனர். விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன. (அ-2)


**Organ, Guitar, புல்லாங்குழல் வகுப்புகள்**

சினிமாப் பாடல்களுக்கான Notes விற்பனைக்குண்டு.

கரவீணா இசை மன்றம், 4, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்

T.P.0777031293

(4167)



**கல்யாண மாலை**

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1981 இந்து (V)
நட்சத்திரம்: பூசம் 2
கி.பா: 72 செவ்: 8ல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L
வெளிவாரி பயிலுநர் நீதிமன்ற ஊழியர் (அரச)
தொ.இ:B839

பிறப்பு: 1979 இந்து (V)
நட்சத்திரம்: சதயம் 4
உயரம்: 5'5"
கி.பா: 27.25 சூரி, செவ் 9ல்
தகைமை/ தொழில்: A/L, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
தொ.இ:B840

பிறப்பு: 1976 இந்து (V)
நட்சத்திரம்: அச்சுவினி 2
கி.பா:35 செவ்:12ல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: (பட்டதாரி) அரச உயர்பதவி
தொ.இ:B847

பிறப்பு: 1977 இந்து (V)
நட்சத்திரம்: திருவோணம் 3
கி.பா: 24.25 உயரம்: 5'11"
தகைமை/தொழில்: Bsc (IT Consultant)
தொ.இ:B1107

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1982 இந்து (KO)
நட்சத்திரம்: பரணி 2
கி.பா:03 செவ்: 2ல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:A/L
தொ.இ:G1194

பிறப்பு: 1982 இந்து RC (V)
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Following Bsc Degree Operation Officer
தொ.இ:G1130

பிறப்பு: 1984 இந்து (V)
நட்சத்திரம்: அவிட்டம் 1
கி.பா :8.75
தகைமை/தொழில்: சித்த வைத்திய பட்டதாரி (சித்த வைத்தியர்)
தொ.இ:G1133

பிறபபு: 1988 இந்து (V)
நட்சத்திரம்: மூலம் 4
கி.பா :23.5 செவ்: 2ல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L
தொ.இ:G1136

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**

(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணி விழாவும் மலர் வெளியீடும்


(யாழ்ப்பாணம்)

யா/ கோப்பாய் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையின் முன்னாள் அதிபரும் தென்மராட்சிக் கல்வி வலய ஓய்வுநிலைப் பிரதிக் கல்விப் பணிப்பாளருமாகிய ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்த மூர்த்தியின் மணிவிழாவும் ஸ்ரீஸ்கந்தநாதம் மலர் வெளியீடும் எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை கலை 9 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணி மண்டபத்தில் யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரைகளை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் மற்றும் யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜஸ்ரீன் பி.ஞானப்பிரகாசம் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

ஸ்ரீஸ்கந்தநாதம் மலரை ஹற்றன் நஷனல் வங்கி சங்கானைக் கிளை முகாமையாளர் ம.தயாகரன் வெளியிட்டு வைக்க வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக ஓய்வு நிலைத் தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராசா ஆற்றவுள்ளார். அத்துடன் ஆய்வுரையும் இடம்பெறும்.

முதற் பிரதியை யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி ஓய்வு நிலை அதிபர் அ.பஞ்சலிங்கம், சிறப்புப் பிரதியை ஊரெழு வீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலன சபைத் தலைவர் க.சண்முகநாதன் ஆகியோர் பெற்றுக் கொள்ளவுள்ளனர். (அ-7)




# வடக்கு மாகாண சபை முதலமைச்சரிடம் முஸ்லிம்கள் 3 கோரிக்கை முன்வைப்பு

**(யாழ்ப்பாணம்)**

**வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் யாழ்.முஸ்லிம்கள் 3 கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். யாழ்.பெரிய முஹறதீன் ஜும்மா பள்ளி வாசலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.**

அவற்றில், எதிர் வரும் காலங்களில் முஸ்லிம்-தமிழ் உறவுகள் ஒன்றிணைந்து உரிமைக்காக பாடுபடல் வேண்டும்.

முஸ்லிம் மக்கள் தொடர்பில் எந்தவொரு வேலைத்திட்டமாகவிருந்தாலும் வடக்கு மாகாண சபையின் எமது பிரதிநிதியான அயூப் அஸ்மின் ஊடாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

முடியுமாகவிருந்தால் எமது பகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகம் ஒன்றைத் திறந்து வைத்தல் ஆகிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இதற்கு பதிலளித்த முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்,

முஸ்லிம் மக்களுக்கான நடவடிக்கைகள் தொடர்பில் நாம் வடக்கு மாகாணசபை உறுப்பினர் அயூப்அஸ்மினூடாகவே முன்னெடுப்போம்.

முஸ்லிம் மக்களுக்கான நடவடிக்கைகள் தொடர்பில் முஸ்லிம் பிரதிநிதி யொருவரூடாக முன்னெடுப்பது சிறந்ததாகும்.

ஒருகாலத்தில் நாம் மதங்களால் பிரிக்கப்பட்டிருந்தோம். ஆனால் இன்று அவ்வாறில்லை. அந்த வகையில் தமிழ்-முஸ்லிம்கள் இணைந்து செயற்படுவோம்.

நான் அரசியலுக்கு வருவதற்கு முன்னதாகவே முஸ்லிம்களுக்காக குரல் கொடுத்தவன் என்ற வகையில் நான் தொடர்ந்தும் முஸ்லிம்களுக்காக குரல் கொடுப்பேன். மாவட்ட ரீதியாக எமது கட்சியின் அலுவலகம் ஆரம்பிப்பதற்கு யோசனை ஏற்கனவே முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், முஸ்லிம்களுக்கு என பிரத்தியேக கட்சி அலுவலகம் ஒன்று ஆரம்பிப்பதில் தவறில்லை.எனமுஸ்லிம் மக்களின் கோரிக்கை களுக்கு சாதகமாக பதிலளித்தார் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் (அ-4)

# 10 ஆயிரம் ரூபா தண்டம்

(கரணவாய்)

கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட இருவரை தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து பருத்தித்துறை நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

துன்னாலை தெற்குப் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, கடந்த 8 ஆம் திகதி நெல்லியடி பொலிஸாரினால் குறித்த இரு நபர்களும் கைது செய்யப்பட்டு, பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரணை செய்த நீதவான், இரு நபர்களையும் தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு கூறி விடுதலை செய்துள்ளார். (அ-9-60)

# பொது மக்களுக்கு இடையூறு; இளைஞர்களுக்கு அபராதம்

(கரணவாய்)

மதுபோதையுடன் நின்று பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்த இரு இளைஞர்களை தலா 6 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 9 ஆம் திகதி புதன்கிழமை இரவு இந்த இரு இளைஞர்களும் மது போதையில் நெல்லியடி மத்திய பேருந்து நிலையம் முன்பாக நின்று பொது மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்பட்டதையடுத்து நெல்லியடி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களையும் நெல்லியடிப் பொலிஸார் நேற்றுமுன்தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

இதனையடுத்து குறித்த இரு இளைஞர்களையும் நீதவான் எச்சரித்ததுடன், இருவரையும் தலா 6 ஆயிரம் ரூபா குற்றப் பணம் செலுத்துமாறும் உத்தரவிட்டார். (அ-9-60)



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் மாவை.சேனாதிராஜா ஆகியோர் கொண்ட குழுவினர் யாழ்.பெரிய முஹறதீன் ஜும்மா பள்ளிவாசலுக்கு வழிபாட்டிற்கு சென்றபோது வரவேற்கப்படுவதையும் கலந்துரையாடலில் ஈடுபடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- உ.சாளீன்)

சட்டவிரோதமாக

# மின்சாரம் பெற்ற ஐவருக்கு பிணை

(கரணவாய்)

கரவெட்டி, கரணவாய், மண்டான் ஆகிய பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெற்ற ஐவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

நெல்லியடிப் பொலிஸாரும் இலங்கை மின்சார சபையின் விசேட குழுவினரும் இணைந்து கடந்த 10 ஆம் திகதி நடத்திய சோதனையின் போதே மேற்குறித்த பிரதேசங்களிலிருந்து ஐவர் கைதாகியுள்ளனர்.

குறித்த 5 பேரும் சட்டவிரோதமான முறையில் மின்சாரத்தை பெற்று வந்துள்ளனர். இவர்களை நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிமன்ற பதில் நீதவானின் வாசஸ் தலத்தில் நெல்லியடிப் பொலிஸார் ஆஜர்படுத்தியுள்ளனர்.

இந் நபர்களை விசாரித்த பதில் நீதவான் எதிர்வரும் 25 ஆம் திகதி நீதிமன்றில் அவர்களை ஆஜராகுமாறும் தற்பொழுது பொலிஸ் பிணையில் செல்லுமாறும் உத்தரவிட்டார். (அ-9-60)

# சில சிங்கள ஊடகங்கள் தமிழருக்கு எதிரானவை

## த.தே.கூ. ஊடக பேச்சாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சிங்கள ஊடகங்கள் சில தமிழ் மக்களுக்கு எதிராகவே செயற்பட்டு வருகின்றன என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

கூட்டமைப்பிற்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளது என தென்னிலங்கை ஊடகங்களினால் கூறப்படுகின்றமை தொடர்பில் ஊடகப் பேச்சாளரிடம் கேட்டபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அன்று தொடக்கம் இன்றுவரை சிங்கள ஊடகங்களில் மிகப் பெரும்பாலான ஊடகங்கள் தமிழ் மக்களுக்கு எதிராக செயற்பட்டு வருவதோடு, இனவாதத்தை தூண்டுவது போன்றும் செய்திகளையும் வெளியிட்டு வருகின்றன.

தமிழர்ககளுக்கு பிரச்சினைகள் ஏற்படுகின்ற போது தமிழ் ஊடகங்கள் ஒன்று கூடி சிங்களம், ஆங்கில ஊடகங்கள் வேறுமாதிரியாக செய்திகளை வெளியிடுகின்றன.

ஆகவே சிங்கள ஊடகங்கள் எம்மை விமர்சிப்பது தொடர்பில் நாம் பெரிதாக அலட்டிக்கொள்ளத் தேவையில்லை என்றார். (அ-4)




# நான் அரசியலுக்கு வருவேன் என கனவு கூட கண்டதில்லை

(யாழ்ப்பாணம்)

நான் அரசியலுக்கு வருவேன் என கனவு கூட கண்டதில்லை என வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களுக்கு பணியாற்ற வேண்டியது எனது கடமை என்ற சிந்தனையே என்னை அரசியலுக்குள் கொண்டு வந்தது.

அரசியலுக்குள் நுழைவது தொடர்பில் எவ்வித உடன்பாடும் எனக்கு இல்லாத போதிலும் மக்களின் நலன்களுக்காக அரசியலுக்குள் வருவதற்கு நான் சம்மதித்தேன்.

எனினும் நான் அரசியலுக்குள் வருவேன் என கனவு கூட கண்டதில்லை என்றார் முதலமைச்சர். (அ-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழீழத்தை ஆளவே மக்கள் அக்கறை கொண்டுள்ளனர்

## மாவை எம்.பி முழக்கம்

(யாழ்ப்பாணம்)

**தமிழீழத்தில் வாழவும் ஆளவும்தான் தமிழ் மக்கள் அக்கறை கொண்டுள் ளனர் என்பதை வடக்கு மாகாணசபைத் தேர்தலின் ஊடக மறுபடியும் மிகத் தெளிவாக மக்கள் வெளிப்படுத்தியுள்ளனர் என்பதை யாரும் மறந்து விடக் கூடாது என தமிழ் தேசியக் கூட்ட மைப்பின் பொதுச் செயலாளரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப் பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.**

வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்களின் பதவிப் பிரமாண நிகழ்வு கடந்த 11 ஆம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த வைபவம் கடந்த காலங்களில் எமது மக்களின் மனங்களில் ஆழமான காயங்கள் ஏற்பட்டதன் விளைவாக பொங்கி எழுந்ததன் பலனாகும்.

ஜனநாயக பாரம்பரியத்தில் இப்போது தான் ஒரு ஒளிக்கீற்று எமக்கு தென்படுகின்றது.

ஏனெனில் முன்னர் இந்த நாட்டில் ஜனநாயகம் இருந்திருக்குமாயின் நாம் இத்தகைய அழிவுகளைச் சந்தித்திருக்க வேண்டியிருந் திருக்காது.

எமது மக்கள் தங்களுக்குரித்தான இறைமைகளின் அடிப்படையிலும் சுயநிர்ணய உரிமை தத்துவ அடிப்படையிலும் வாக்குரிமையை தங்களுடைய திடசங்கற்பத்தை எப்பொழுதும் தெளிவாக பிரயோகிக்க தவறியதில்லை.

அதைத்தான் இந்த வடக்கு மாகாண சபைத் தேர்தலிலும் என்றுமில்லாத வகையில் எமக்கு ஏற்பட்டுள்ள சர்வதேச சந்தர்ப்பத்தில் எமது மக்கள் மிகத் தெளிவாக பிரயோகித்துள்ளனர்.

இந்த சத்தியப்பிரமாண வைபவத்தில் சத்தி யப்பிரமாணம் எடுத்துக் கொள்ளும் மாகாண சபை உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் மக்கள் இது வரையில் அனுபவித்த துன்பங்களி லிருந்து விடுபடுவதற்கு அந்த மக்களின் எண்ணங்களை இதயத்தில் தாங்கி அழிந்து போன அம்மக்களின் வாழ்வையும், அழிந்துபோன தேசத்தின் பொருளாதாரத்தையும் மீளக் கட்டியெழு ப்பவும் நம்முடைய கொள்கை கோட்பாடு களை மனதில் நிறுத் திக்கொண்டு உறுப் பினர்கள் செயற்பட வேண்டும்.

எங்களுடைய தேசத்தில் நாங்கள் இன்னமும் அடக்குமுறைக்குள்ளும் ஒடுக்குமுறைக்குள்ளும் இருக்கின்ற போதிலும் தமிழ்த் தேச மக்கள் எப்பொழுதுமே தமது இறைமையை எந்த அரசியல் அமைப்புக்கோ ஆட்சி அமைப்பிற்கோ கொடுக்கவில்லை என்பதை மனதில் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

இந்த நாட்டில், ஆட்சியில் உள்ளவர்கள் இராணுவத்தின் ஊடாக தேர்தலில் எமது மக்கள் தமது ஜனநாயக உரிமையைப் பயன்படுத்துவதற்குகூட தடையாக இருந்தனர்.

ஆயினும் அவற்றைப் பொறுத்துக் கொண்டு இருந்த மக்கள் எழுச்சியுடன் வாக்களித்ததற்கு காரணம் நாம் ஜனநாயக வாதிகளாகத்தான் இருக்க விரும்புகின்றோம்.

எம்முடைய நிலத்தில் எம்முடைய மண்ணில் எம்முடைய தமிழீழத்தில் வாழவும் ஆளவும் தான் அக்கறை கொண்டுள்ளோம் என்பதை மிகத் தெளிவாக உலகத்துக்கு வெளிப்படுத்துவதற்குத்தான் என்பதை யாரும் மறந்து விடக் கூடாது.

மேலும் எங்களுடைய எண்ணம் எங்களுடைய எழுச்சி எங்களை நாங்களே ஆள வேண்டும் என்கிற அந்த உறுதியை யாரும் அழித்துவிடவும் முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)




யாழ்.வைத்தீஸ்வரா கல்லூரியின் ஆசிரியர் தின நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. பழைய மாணவர் சங்கத்தின் உப தலைவர் பேராசிரியர் மா.சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண கோட்டக் கல்வி அதிகாரி சு.சண்முககுமார் கலந்து சிறப்பித்தார்.

# மரண அறிவித்தல்

## திரு.தியாகராஜா பாலசிங்கம்

**(சீனூர் அலுவலகத்தின் இளைப்பாறிய ஊழியர்)**



யாழ்ப்பாணம் நீராவியடியை பிறப்பிடமாகவும் வடமராட்சி கரணவாயை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. தியாகராஜா பாலசிங்கம் 11.10.2013 வெள்ளிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் தியாகராஜா- இராசமணி தம்பதியரின் அன்பு மகனும், தர்மலிங்கம்-ஈஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், மேனகையின் அன்புக் கணவரும் , விஜெந்தி, மல்லிகா (லண்டன்), ஜெசிலா (லண்டன்), சுசிலா(ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சந்தனத்தேவன், லிங்கேஸ்வரன் (லண்டன்),தயாளன் (லண்டன்), உதயகுமார் (ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற மனோன்மணி, கிருஸ்ணசாமி (அவுஸ்திரேலியா), மயில்வாகனம் (கொழும்பு), காலஞ்சென்ற செல்வராஜா (கொழும்பு), புஸ்பவதி (கொழும்பு), கந்தசாமி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்ற பாலசுந்தரம், மனோன்மணி (அவுஸ்திரேலியா) சந்தானலட்சுமி (கொழும்பு), செல்வராணி (கொழும்பு), பரமேஸ்வரன் (கொழும்பு), கௌரி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், அஜந்தன், மிருனாளினி, நிலாஜினி, வினோதா (லண்டன்), வித்திகா (லண்டன்), வினுஷன் (லண்டன்), கவீனா (லண்டன்), கயீந் (லண்டன்), பிரணவன் (ஜேர்மன்), பிரவீன் (ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் 15.10.2013 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக வெல்லன் கிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**சித்தம்பாதி, கரணவாய், கரவெட்டி.**

**தகவல்:- குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலும் 20 எம்பிகளுக்கு பிரதியமைச்சர் பதவி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 9 பேருக்கு கடந்த வாரம் பிரதியமைச்சு பதவிகள் வழங்கப்பட்ட நிலையில் இந்த வாரம் மேலும் 20 அரசாங்கம் மற்றும் பங்காளிக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பிரதியமைச்சு பதவிகள் வழங்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீகாம்பரம், ராதாகிருஸ்ணன், பிரபாகணேசன் ஆகியோர் முன்னிலை பெற்றுள்ளதாக தெரியவருகின்றது.

இதேவேளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இரண்டு பேரும் பிரதி யமைச்சர்களாகின்றனர் என்றும் அடுத்ததாக சுதர்சினி பெர்னாண்டோபுள்ளே, சாந்த பண்டார, அருந்திக்க பெர்ணான்டோ ஜனக வக்கும்புர, ரஞ்சித் சொய்ஸா, மனுஷ நாணயக்கார போன்றோருக்கும் பிரதியமைச்சு பதவிகள் வழங்கப்படவுள்ளதாகவும் கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# காலாவதியான பால்மா பைக்கற்றுகள் மீட்பு

பாவனைக்கு உதவாத நிலையில் காலா வதியான குழந்தைகளுக்கான ஆயிரத்து 10 பால்மா பைக்கற்றுகளை நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

காலாவதியான திகதிக்கு மேல் புதிய திகதி ஒட்டப்பட்டு சந்தைப்படுத்துவதற்கு தயாராக வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

சீதுவையிலுள்ள தனியாருக்கு சொந்தமான களஞ்சியசாலையை நேற்று முன்தினம் முற்றுகையிட்ட நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகள் அங்கே விநியோகிப்பதற்கு தயாராகவிருந்த உணவுப் பொருட்களை சோதனையிட்ட போதே காலாவதியான குழந்தைகள் பால்மா வகைகளையும் குறித்த அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர். (அ-2)

# விசேட தேவையுடைய மாணவர் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கல்வி வலய விசேட கல்வித் தேவையுடைய மாணவர்களின் சித்திர, ஆக்கத் திறன் கண்காட்சி நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு யாழ். கோப்பாய் மகா வித்தியாலயத்தில் யாழ்ப்பாணப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.அருணாகிரிநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ் வலயக்கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமார், சிறப்பு விருந்தினராக கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் ஆ.இரவீந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-7)




# மாயக்கண்ணாடி

முன்னொரு காலத்தில் ஓர் அரசன் இருந்தான். அவனுக்கு மூன்று புதல்வர்கள் இருந்தார்கள். முதல் இரண்டு பிள்ளைகளும் சாமர்த்தியம் மிகுந்தவர்கள். மூன்றாவது பிள்ளை மட்டும் சற்று சாமர்த்தியம் குறைந்தவன். தந்திரம் அறியாதவன். இரக்ககுணம் கொண்டவன். இந்த காரணங்களினால் அவனை மற்ற இரு சகோதரர்களும் மதிப்பதில்லை. அவனை முட்டாள் என்றே அவர்கள அழைத்தனர். அவனுக்கு எதுவும் தெரியாது அவனால் எந்த ஒரு வேலையையும் செய்து முடிக்க முடியாது என்று அரசனும் நம்பினான்.

இப்படி இருந்துவரும் நாளில் அரசனுக்கு ஒரு கவலை ஏற்பட்டது. ஒரு நாள் அவன் தன் முகத்தைக் கண்ணாடியில் பார்த்தான். காது ஓரங்களில் நரை முடி தென்பட்டது. தனக்கு வயதாகி வருவதை உணர்ந்தான். தான் முதுமை அடைவதை அவனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அவனது அறிவு உடலுக்கு வயதாவதை சுட்டிக்காட்டிய போதிலும் அவனது மனம் அதை ஒப்புக்கொள்ள மறுத்தது.

என்னிடம் ஏராளமான செல்வம் இருக்கிறது. யானை, சேனை, பரிவாரங்கள் இருக்கின் றன. கோட்டை கொத்தளம், அரியணை, அந்தப்புரம் ஆகியவை இருக்கின்றன. பத்து மன்னர்களிடம் இருக்கும் தங்கத்தைவிட அதிக அளவு தங்கம் என் கஜானாவில் சேமித்து வைத்திருக்கிறேன். அப்படிப்பட்ட என்னை முதுமை நெருங்குவதா? கூடாது. அதை எப்படியாவது தடுத்து நிறுத்த வேண்டும் என்று யோசித்தான்.

உடனே தனது முதல் இரண்டு பிள்ளைகளை அழைத்தான். அவர்களிடம் இளவரசர்களே, எனக்கு வயதாகிவருகிறது. உடலில் நரை தோன்ற ஆரம்பித்துவிட்டது. இதை நான் விரும்பவில்லை என்றான்.

அப்பா, நரை தோன்றுவதும் வயதாவதும் இயற்கை அல்லவா? என்றான் மூத்தவன்.

இருக்கலாம். இருந்தாலும் இதை நான் விரும்பவில்லை. முதுமையைப் மாற்றி என்றும் இளமையோடு இருக்க விரும்புகிறேன். அதற்கு வழி இருக்கிறதா அப்பா? இருந்தால் சொல்லுங்கள். உங்களுக்காக எதை வேண்டுமானாலும் நாங்கள் செய்யக் காத்திருக்கிறோம் என்றான் இரண்டாவது பிள்ளை.

சொல்லுகிறேன். நான் சிறுவனாக இருந்த போது மாயக்கண்ணாடியைப் பற்றிக் கேள்விப் பட்டு இருக்கிறேன். அந்தக் கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்த்துக்கொண்டவர்களை முதுமை நெருங்காதாம். அதோடு அவர்கள் என்றும் இளமையாக இருப்பார்களாம். நீங்கள் இருவரும் உடனே புறப்பட்டு அந்த மாயக் கண்ணாடி எங்கே இருந்தாலும் அதைக் கொண்டு வாருங்கள். எவ்வளவு தங்கம் வேண்டுமானாலும் எடுத்துக்கொண்டு புறப்படுங்கள் என்றான்.



அப்பா, மாயக்கண்ணாடியை நிச்சயம் நாங்கள் கொண்டு வருவோம். எங்களுக்கு ஆறு குதிரைகள் பூட்டிய தேரும் ஒரு மூட்டை நிறைய தங்கக் காசுகளும் கொடுத்து அனுப்புங்கள் என்றனர் இரண்டு பிள்ளைகளும்.

அரசன் அவர்கள் கேட்டவற்றை சந்தோஷத்தோடு கொடுத்து அனுப்பினான். அவர்கள் இருவரும் அன்றே புறப்பட்டுச் சென்றனர்.

தனது சகோதரர்கள் இருவரும் மாயக்கண்ணாடியைத் தேடி நாட்டை விட்டுச் சென்றதை அறிந்தான் கடைசி இளவரசன். நேராக தந்தையிடம் சென்றான்.

அரசே, நானும் என் சகோதரர்களைப் போல மாயக் கண்ணாடியைத்தேடிச்செல்ல விரும்புகிறேன் என்றான்.

இதைக் கேட்டு அரசன் சிரித்தான். மாயக்கண்ணாடியைத் தேடிச் செல்வது என்பது சாதாரண செயல் அல்ல. அதற்கு அறிவும் திறமையும் வேண்டும். நீ ஒரு முட்டாள். வெகுளி, ஒன்றும் தெரியாதவன். அப்பேற்பட்ட சாதனைகளுக்கு நீ லாயக்கில்லை. அதனால்தான் நான் உன்னை அழைக்கவில்லை. வேளா வேளைக்கு நான்றாக சாப்பிட்டவிட்டு அரண்மனையில் ஓய்வு எடுத்துக்கொள். நீ அதற்குத்தான் லாயக்கு என்றான் அரசன் கிண்டலாக.

அப்பா என்னைக் குறைவாக மதிப்பிடாதீர்கள். சிறு துரும்பும் பல் குத்த உதவும். இறைவனின் படைப்பில் எதுவுமே குறைந்ததோ அல்லது தாழ்ந்ததோ இல்லை என்றான்.

இந்த உபதேசம் எல்லாம் எனக்கும் தெரியும். நீ போய் உன் வேலையைப் பார்.

அப்பா எனக்கும் ஆறு குதிரைகள் பூட்டிய ரதமும் தங்கக் காசுகளும் கொடுங்கள். அண்ணன்களைப் போல நானும் மயாக்கண்ணாடியைத் டேிப் போகிறேன் என்றான் முட்டாள் இளவரசன்.

அதெல்லாம் கொடுக்க முடியாது. உன்னை நம்பி ஆறு குதிரைகளையும் தங்கக் காசுகளையும் கொடுக்க மாட்டேன். வேண்டுமானால் நீயே உன் செலவில் சென்று மாயக்கண்ணாடியை கொண்டு வா அப்போது உனக்கு என் ராஜ்ஜியத்தில் பாதியைத் தருகிறேன்.

அப்படியே செய்கிறேன். நான் மாயக் கண்ணாடியைத் தேடிப்போவது, உங்களிடம் இருந்து நாட்டை அடைவதற்கோ இல்லை. உங்கள் விருப்பப்படி நீங்கள் இளமையாகத்தான் என்றான் முட்டாள் இளவரசன்.

அவனை ஆச்சரியத்தோடு பார்த்தான் அரசன். முட்டாள் இளவரசன் தன் கையிருப்பில் இருந்த சொற்பப்பொருளை எடுத்துக் கொண்டான். ஒரு சிறிய மட்டக் குதிரையை விலைக்கு வாங்கி அதில் தனக்குத் தேவையான பொருட்களை வாங்கி ஏற்றிக்கொண்டு புறப்பட்டான்.

சில மணிநேர பயணத்திற்குப் பிறகு அவன் ஓர் ஊர் எல்லையில் இருக்கும் விடுதியை அடைந்தான். அங்கே எப்போதும் குடியும் கும்மாளமும் அமர்க்களப்படும். அதிகம் பொருள் வசதி உள்ளவர்களே அங்கே தங்க முடியும். அந்த உணவு விடுதி வாசலில் ஆறு குதிரைகள் பூட்டிய ரதம் நிற்பதைப் பார்த்தான்.

அடடா! அண்ணன்கள் இங்கேதான் இருக்கிறார்களா? உள்ளே சென்று அவர்களைச் சந்தித்தால் வழிச் செலவிற்குப் போதுமான பொருள் வாங்கிக் கொள்ளலாம் என்று எண்ணமிட்ட முட்டாள் இளவரசன் தனது மட்டக் குதிரையை வெளியே நிறுத்தி விட்டு விடுதிக்குள் சென்றான். (தொடரும்)

## 10.2013 14 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1066- லண்டன் ஹாஸ்டிங்ஸ் என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் முதலாம் வில்லியமின் படைகள் இரண்டாம் ஹரோல்ட் மன்னனைக் கொன்றனர்.
- 1322-ஸ்கொட்லாந்தின் முதலாம் றொபேர்ட் பைலாண்ட் என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் லண்டனின் இரண்டாம் எட்வேர்ட் மன்னனைத் தோற்கடித்தான். ஸ்கொட்லாந்தின் விடுதலையை எட்வேர்ட் ஏற்றுக் கொண்டான்.
- 1586- ஸ்கொட்லாந்தின் முதலாம் மேரி லண்டனின் முதலாம் எலிசபெத்துக்கு எதிராக சதி மேற்கொண்டதாக குற்றஞ்சாட்டப்பட்டாள்.
- 1806-முதலாம் நெப்போலியன் புரூசிய இராணுவத்தை தோற்கடித்தான்.
- 1888- Roundhay Garden Scene என்ற முதலாவது அமையும் படத்தை லூயிலெ பிரின்ஸ் தயாரித்தார்.
- 1903- யாழ்ப்பாணத்தின் SS Jaffna என்ற பயணிகள் கப்பல் நெடுந்தீவுக்கு பயணித்தது.
- 1912-முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி தியொடோர் ரோசவெல்ட் விஸ்கொன்சின் மாநிலத்தில் வைத்து சுடப்பட்டார்.
- 1925-டமாஸ்கசில் பிரெஞ்சுக் காரர்களுக்கெதிரான போராட்டம் ஆரம்பமானது.
- 1926- சிறுவர் நூல் வின்னீ-த-பூ (Wionnie thepooh) வெளியிடப்பட்டது.
- 1933- நாசி ஜெர்மனி தேசங்களின் அணியில் இருந்து விலகியது.
- 1939- இரண்டாம் உலகப்போர்: ஜெர்மனியின் நீர்மூழ்கிக் கப்பல் பிரித்தானியக் கடற்படையினரின் ரோயல் ஓக் என்ற போர்க் கப்பலைத் தாக்கி மூழ்கடித்தது. 800 மாலுமிகள் கொல்லப்பட்டனர்.
- 1948- இலங்கையின் முதலாவது நாடாளு மன்றம் கூடியது.
- 1956- இந்தியத் தலித் தலைவர் அம்பேத்கர் தனது 3 இலட்சத்து 85 ஆயிரம் ஆதரவாளர்களுடன் பௌத்தத்திற்கு மதம் மாறினார்.
- 1964- லியோனிட் பிரெஷ்னெவ், சோவியத் ஒன்றியத்தின் ஜனாதிபதியாகவும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் நாயகமும் ஆனார். நிக்கிட்டா குருசேவ் பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.
- 1964- ஐக்கிய அமெரிக்காவின் மனித உரிமைப் போராளி மார்ட்டின் லூதர் கிங்க அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றார்.
- 1968- விண்ணிலிருந்தான முதலாவது நேரடி தொலைக்காட்ச்சி அஞ்சல் அப்பலோ 7 விண்கலத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்டது.
- 1987- டெக்காசில் ஜெசிக்கா என்ற 18 மாதக் குழந்தை ஒன்று கிணற்றில் வீழ்ந்தது. 58 மணி நேரத்தின் பின்னர் இது உயிருடன் மீட்கப்பட்டது. இந்த மீட்புப் போராட்டம் தொலைக்காட்சியில் நேரடியாகக் காண்பிக் கப்பட்டது.

### பிறப்புக்கள்

- 1643- முதலாம் பகதூர் ஷா, இந்தியாவின் முகலாய மன்னன் (இ.1712)
- 1884- சி.டபிள்யூ.டபிள்யூ கன்னங்கரா, இலங்கையின் இலவசக் கல்வியை அறிமுகப்படுத்தியவர். சட்டத்தரணி (இ.1969)
- 1890- ருரைட் டி, ஐசனாவர், ஐக்கிய அமெரிக்காவின் 34-வது குடியரசுத் தலைவர் (இ.1969)
- 1942- சிவசங்கரி, தமிழக எழுத்தாளர்

### இறப்புக்கள்

- 1981- கே.பி.ஹரன், தமிழ்ப் பத்திரிகையாளர் (பி.1906)
- 2005- சுந்தர ராமசாமி, தமிழ் எழுத்தாளர் (பி.1931)
- 2009- சி.பி.முத்தம்மா, இந்தியப் பெண் சாதனையாளர் (பி.1924)

சிறப்பு நாள்

உலகத் தர நிர்ணய தினம்

### சி.பி. முத்தம்மா

சி.பி. முத்தம்மா இந்தியக் குடியுரிமைப் பணித் தேர்வில் வெற்றியடைந்த முதல் பெண். இந்தியாவின் முதல் பெண் வெளியுறவுத்துறை அதிகாரியாக 1949 இல் பணியில் சேர்ந்தவர். சென்னைக் கல்லூரிகளில் பட்டம் பெற்றவர். இந்திய ஆட்சிப் பணிகளில் பெண் அதிகாரிகளுக்கு எதிராக உள்ள விதிகளை மாற்றப் பாடுபட்டவர்.

ஆண்கள் மட்டுமே ஆட்சி செய்துகொண்டிருந்த வெளியுறவுத்துறையில் பணிபுரிய விரும்பி வெளியுறவுத் துறையில் பணிபுரியும் அளவு கடந்த ஆர்வத்தோடு பணியில் சேர்ந்த முத்தம்மா ஒவ்வொரு கட்டத்திலும் பலவிதமான பாலியல் பாகுபாடுகளுக்கு ஆளாக நேர்ந்தது. எனவே, இந்த் பால் பாகுபாடுகளைக் களைய நீதிமன்றம் உதவ வேண்டும் எனவும் கோரி உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

வழக்கை விசாரித்த நீதிபதி பாலியல் பாகுபாடு நிறைந்த விதிகள் நீக்கப்பட்டதாக வெளியுறவுத் துறையின் சார்பில் அளிக்கப்பட்ட பிரமாணப் பத்திரத்தை ஏற்றுக்கொண்டார். முத்தம்மாவின் தகுதி, பதவி உயர்வுக்கு ஏற்றதாக இருக்கிறதெனக் கூறி பதவி உயர்வு அளித்த வெளியுறவுத்துறை அவரை ஹேகில் இந்தியத் தூதராக நியமித்தது.

வரலாற்றுச் சிறப்பு மிகுந்த இத்தீர்ப்பு ஆணாதிக்கக் கருத்துக்கள் கொண்ட விதிகள் திருத்தியெழுத வாய்ப்பாக அமைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித சக்தி மகத்தான சக்தி



**ஆன்மீகம் 06**

வாழ்க்கையை வெறும் பொருள் தன்மை சார்ந்து உணர்ந்து வைத்திருப்பவர்கள்தான் ஒரு மனிதனை உடல் நோயிலிருந்தோ, பொருளாதாரத் தொல்லையிலிருந்தோ விடுவிப்பதையே மிகப்பெரிய சாதனை என்று கருதுகிறார்கள். பொருள் தன்மை சார்ந்த கண்ணோட்டத்திலிருந்து விடுபட்டு உள்நோக்கி வளர்வதற்கு பெயர்தான் விடுதலை என்பதாகும்.

அதேபோல் இன்று அதிகாரப் பலம் அதிகம் இருக்கிற சூழ்நிலையில் யோகம், தியானம் போன்றவை எந்த அளவிற்கு உதவும் என்ற கேள்வியும் எழுந்திருக்கிறது. வெளிச் சூழலில் பொருளாதார பலமும் அதிகார பலமும் வளர்ந்திருக்கிறது என்பது உண்மையானால், எப்போதும் இருந்ததை விட இப்போதுதான் ஆன்மீகத்திற்கான அவசியம் ஏற்பட்டிருக்கிறது. பணம், பதவி, அதிகாரம், சுகபோக வாழ்க்கை போன்றவற்றை எல்லாம் மனிதன் ஏன் தேடிப் போகிறான் என்றால், ஆனந்தமாக இருக்க வேண்டும் என்று அடிப்படையில் அவனுக்குள் ஒரு வேட்கையிருக்கிறது. அதற்கென்று பலவிதமான முயற்சிகளை மனிதன் மேற்கொள்கிறான்.


உலக இன்பங்களையே ஆனந்தம் என்று ஒரு எல்லைவரை கருதிக் கொண்டிருக்கிறான். சிலருக்கு பணம் சேர்ப்பது இன்பம். சிலருக்கு பெரிய அதிகாரத்தை அனுபவிப்பது இன்பம். சிலருக்கு களியாட்டங்களில் ஈடுபடுவது இன்பம். ஒரு எல்லைவரை அதை ஆனந்தம் என்று மனிதன் தவறாகப் புரிந்துகொள்வான். ஆனால், அது ஆனந்தம் இல்லை என்பது காலம் கடந்து புரிகிறபோது வருத்தத்தில் ஆழந்துவிடுவான்.

எப்போது நிறைய அதிகாரமும் பொருளாதாரமும் மனிதனிடம் இருக்கிறதோ, அப்போது அவற்றை உரிய முறையில் கையாளுகிற முதிர்ச்சியை அவனுக்குத் தரவேண்டும். அத்தகைய முதிர்ச்சியை தருபவைதான் யோகா, தியானம் போன்றவை. அதனால்தான், சொன்னேன் உள்ள படியே அதிகாரமான சூழல் இருக்குமானால் அந்த சமூகத்தில்தான் ஆன்மீகத் தேடலுக்கான அவசியம் அதிகரிக்கிறது என்று.

அதிகாரங்களை மன முதிர்ச்சியோடு கையாளத்தெரியாத மனிதர்கள் தாங்களும் துன்பமடைந்து மற்றவர்களையும் துன்பத்திற்கு ஆளாக்குவார்கள்.

சமூகம் சார்ந்த பொறுப்புணர்வை தியானம் ஏற்படுத்துகிறது. செயல்களைக் கடந்து கண்மூடி அமைதியாக இருப்பதென்பது சோம்பேறித்தனத்தினால் அல்ல. அது அளவுகடந்த பொறுப்புணர்ச்சியின் அடையாளம்.

## சமூகம் சார்ந்த பொறுப்புணர்வின் அடையாளம் தான்- தியானம்



மற்றவர்கள்மேல், ஆதிக்கம் செலுத்துகிற சூழ்நிலையில் இருப்பவர்கள் மிக நிச்சயமாக தங்கள் உள்நிலையை சமச்சீராக வைத்துக்கொள்வது அவசியம். அதிகார போதையின் உச்சத்தில் இருந்த ஒரு மனிதரை நான் நினைவு படுத்த விரும்புகிறேன்.

முசோலினி பெரிய சர்வாதிகாரி. அவரது ஆட்சியில் ஒரு காரியம் செய்தார். அதனை சாதனை என்று அவர் கருதினார். இத்தாலியில் அப்போது ரயில்களெல்லாம் தாமதமாக வந்துகொண்டிருந்தன. இது முசோலினிக்குப் பிடிக்கவில்லை. எனவே, சில என்ஜின் ஓட்டுநர்களைப் பிடித்துச் சுட்டுக்கொன்று *தாமதமாக ரயில்கள் வந்தால் உங்களுக்கும் இதுதான் கதி* என்று எச்சரிக்கை விடுத்தார் முசோலினி. அன்று தொடங்கிய இத்தாலியில் ரயில்கள் சரியான நேரத்திற்கு ஓடத் தொடங்கின.

இது மாதிரியான சம்பவம் அதுவரை வரலாற்றில் நிகழ்ந்ததேயில்லை. ஆனால், அன்று அத்தகைய சூழ்நிலை ஏற்பட்டது. இதனை ஒரு பெரிய சாதனை என்று நம்பி, முசோலினி ஏகத்திற்கு மகிழ்ச்சியடைந்தார். அந்த சாதனையைக் கொண்டாடும் விதமாக தன் உருவத்தை ஒரு அஞ்சல் தலையாக வெளியிட முடிவு செய்தார். இத்தாலியில் ரயில்கள் சரியான நேரத்திற்கு ஓடுவதையொட்டி முசோலினியின் உருவத்தை ஒரு அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.

(தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# இலங்கையின் இறுதிப் போரின்போதான ஐ.நா.வின் தோல்வியை ஒப்புக்கொண்டுள்ள ஜோன் பெற்றியின் உள்ளக அறிக்கை

...இலங்கையின் இறுதிப்போரில் ஐக்கிய நாடுகள் சபை தமது நடவடிக்கைகளில் தோல்வி கண்டமை காரணமாக பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் இலங்கைப் படையினரால் கொல்லப்பட்டனர்.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் ஆராய ஐக்கிய நாடுகளின் செயலாளர் பான் கீ மூன், ஐக்கிய நாடுகளின் அதிகாரி ஜோன் பெற்றியின் தலைமையில் தனி ஆள் விசாரணைக் குழுவை அமைத்தார்.

பெற்றி தமது ஆராய்வின் முடிவில் இலங்கையின் இறுதிப்போரின்போது ஐக்கிய நாடுகள் சபை தமது கடமையில் இருந்து தவறிவிட்டதாக ஒப்புக்கொண்ட, அறிக்கையை பான் கீ மூனிடம் சமர்ப்பித்தார்.

இதனை பான் கீ மூன் ஆராய்ந்த பின்னர் உறுதிப்படுத்தப்பட்ட அறிக்கை ஒன்றை வெளியிட உத்தரவிட்டார். இதன்படி ஐக்கிய நாடுகளின் அதிகாரி ஹீட்டிங் இறுதி அறிக்கையை தயாரித்து முடித்துள்ளார்.

அறிக்கை உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவில்லை. எனினும் இன்னர் சிட்டி பிரஸ் இணையத்தளம் இந்த இறுதி அறிக்கையை தற்போது அதிரடியாக வெளியிட்டுள்ளது.

இலங்கையில் கற்றுக்கொண்ட பாடங்களின் ஊடாக நெருக்கடிகளில் இருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு ஐக்கிய நாடுகளின் பங்களிப்பை சக்திமயப்படுத்துவதற்கான செயற்பாட்டறிக்கை.

ஐக்கிய நாடுகளின் பொது செயலாளர் நியமித்த உள்ளக ஆய்வு குழுவினால் தயாரிக்கப்பட்ட ***இலங்கையின் இறுதி யுத்த காலப் பகுதியில் ஐக்கிய நாடுகளின் செயற்பாடு*** என்ற அறிக்கையின் பகுதி இங்கே:-



ஐக்கிய நாடுகள் அதிகாரி ஜோன் பெற்றி - அறிக்கையை ஐ.நா. செயலர் பான்கீ மூனிடம் கையளிக்கையில்

### அறிமுகம்

மனித உரிமைகளைப் பாதுகாப்பது, ஐக்கிய நாடுகளதும் அதனோடு இணைந்த ஒருங்கமைப்புகளதும் கடமை.

2009 ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் ஐக்கிய நாடுகளுக்கு ஒரு சோதனை. இதில் நாங்கள் தோற்றுவிட்டோம்.

இந்த நிலையிலேயே ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பின் தோல்வி தொடர்பில் உள்ளக அறிக்கை ஒன்றைத் தயாரிக்க தூண்டியது. எனினும் சவாலான விடயம் என்னவெனில், இலங்கை நமக்கு புதிய நாடு இல்லை. நீண்ட காலமாக இலங்கை எம்முடன் இணைந்திருக்கிறது. நெருக்கடி சூழ்நிலையில் ஏற்பட்ட இழப்புக்கள் குறித்த புள்ளிவிபரங்கள் தொடர்பிலான தொடர்பாடல் முறையாக இடம்பெறவில்லை.

இந்த நிலையில் இராஜதந்திர, சட்ட மற்றும் நடவடிக்கைகளை அமுலாக்கும் கொள்ளளவு போன்ற விடயங்களில் ஐக்கிய நாடுகள் சபை தோல்வி கண்டுள்ளது.

எமது அதிகாரிகளை மாறுபட்ட சூழ்நிலைகளில் ஒழுங்குபடுத்தவும் ஈடுபடுத்தவும் அபாயகரமான செயற்பாடுகளின்போது அவர்களுக்கு ஆதரவளிக்கவும் ஐக்கிய நாடுகள் தவறிவிட்டது.

தலைமையகத்தின் தெளிவான தலைமைத்துவம் இல்லாமை, இந்த விடயத்தில் மாறுபட்ட செய்திகளை அனுப்ப வழி செய்ததுடன், இதனால் நல்ல சந்தர்ப்பங்களும் இழக்கப்பட்டன. இந்த நிலையில் ஐக்கிய நாடுகளின் ஆறு விதமான பரிந்துரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பரிந்துரை- 1 -: ஐக்கிய நாடுகளின் அனைத்து அதிகாரிகளின் சாதாரண வாழ்க்கை வட்டத்தில் மனித உரிமைகளும் உள்ளடக்கப்பட வேண்டும்.

பரிந்துரை2 -: 99 ஆம் இயல்பு சரத்து ஒன்று உருவாக்கப்பட்டு, அதன் அடிப்படையில், ஐக்கிய நாடுகளின் அங்கம் வகிக்கும் நாடுகளின் பொறுப்புக்களை முறையாக மேற்கொள்ள வலியுறுத்தல்

பரிந்துரை 3-: மக்கள் நெருக்கடியான நிலையை எதிர்கொள்ளும் போது ஐக்கிய நாடுகள் சபை அரசியல், மனித உரிமைகள், மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி இயலுமைகளை உறுதியான நிலையில் அதிகரித்துக்கொள்வதற்கான வேலைத்திட்டம் ஒன்றை கொண்டிருத்தல்.

பரிந்துரை 4-: ஐக்கிய நாடுகளின் தலைமையகத்துக்கும் உறுப்பு நாடுகள் மற்றும் உறுப்பு நாடுகளின் தொழிற்படும் ஐக்கிய நாடுகள் சபையின் குழுக்களுக்கும் இடையில் அடிமட்டத்தில் இருந்து சிறந்த அணுகுமுறையை ஏற்படுத்திக்கொள்வதற்கான திட்டம் ஒன்று உருவாக்கப்படல். இதன் மூலம் அனர்த்த நிலைமைகளை முன்கூட்டியே சமாளிக்க முடியும்.

பரிந்துரை 5-: அதிக மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்ற பகுதிகளில் அதனை பாதுகாப்பதற்கான முன்னெடுப்பில் துரித முன்னேற்றத்தைக் காண்பதற்கான வேலைத் திட்டம். இதற்கு அதிக செயற்பாட்டு இயலுமை அவசியப்படுவதுடன் மனித உரிமைகள் ஆணையத்தின் ஒத்துழைப்பும் அவசியப்படுகிறது.

பரிந்துரை 6-: உண்மையான தகவல்களை மிக விரைவாக பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தல். இதன்மூலம் முன்கூட்டிய எச்சரிக்கைகளை வழங்குவதுடன் ஐக்கிய நாடுகளால் முற்கூட்டிய செயற்பாட்டினையும் முன்னெடுக்க முடியும்.

இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் அனைத்தும் ஏற்கனவே ஐக்கிய நாடுகளின் சாசனத்தில் கூறப்பட்டவை. அவை புதியவை இல்லை. எனினும் இலங்கையின் இறுதிப்போரின் போது இவை முழுமையாக அமுலாக்கப்படவில்லை.

இந்த நிலையில் இனிவரும் காலப்பகுதியில் இது கட்டாயமாக முழுமையாக அமுலாக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகளின் இலங்கையின் இறுதிக் கட்ட போர் தொடர்பான உள்ளக அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

இன்னர் சிட்டி பிரஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண தமிழராட்சியில் தமிழ்மக்கள் சுபீட்சமாக வாழலாம்

## த.தே.கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன்

(யாழ்ப்பாணம்)

**வடக்கில் சகல மக்களும் சுபீட்சமாக வாழக்கூடிய வகையில் வடக்கு மாகாண தமிழராட்சி அமையும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.**

யாழ்.பெரிய முஹறதீன் ஜிம்மா பள்ளிவாசலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வழிபாட்டையடுத்து உரையாற்றிய போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் நடைபெற்ற யுத்தம் காரணமாக வடக்கு-கிழக்கு மாகாணங்கள் மோசமாக பாதிக்கப்பட்டிருக்கின்றன.

யுத்தத்தின் பின்னர் கிழக்கு மாகாணம் இரண்டாவது தடவையாக மாகாணசபைத் தேர்தலை எதிர் நோக்கிய அதேவேளை, வடக்கு மாகாணம் முதலாவது மாகாண சபைத் தேர்தலையும் கண்டுள்ளது.


இவ்விரு மாகாணங்களும் தமது மாகாண சபை பணியில் ஒருமித்த கருத்துக்களைக் கூறிவருவதை அண்மித்த காலப்பகுதிகளில் காண முடிகின்றது.

மக்களின் பலத்த ஆதரவின் காரணமாகவும் வடக்கில் இடம் பெற்ற சம்பவங்கள் காரணமாகவும் முன்னெப்பொழுதும் இல்லாத வகையில் வடக்கு சர்வதேச மயமாக்கப்பட்டுள்ளது.

வடக்கில் இடம்பெறுகின்ற ஒவ்வொரு நடவடிக்கையையும் சர்வதேசம் உன்னிப்பாக அவதானித்து வருகின்றது.

எம்து அரசியல் பாதை இலகுவானதல்ல. இந்நாட்டில் ஒரு இன மக்கள் தமது உரிமையினைக் கோரியபோது அது தரப்படவில்லை.

உரிமை கிடைக்காத மக்களுக்கு தீர்வினை வழங்கக் கூடிய வகையில் திருப்பு முனையாக இம் மாகாண சபை அமைதல் வேண்டும்.



இந்நாட்டின் அரசியல் சரித்திரத்தில் ஓய்வு பெற்ற நீதியரசர் ஒருவர் அரசியலில் ஈடுபட்டு மாகாண முதலமைச்சராக தெரிவு செய்யப்பட்டுள்ளமை இதுவே முதல் தடவையாகும்.

சமீபகாலங்களில் வடக்கு மக்களுக்கு பல்வேறு அநீதிகளும் அச்சுறுத்தல்களும் இளைக்கப்பட்டு வந்துள்ளன.

இது தொடராமல் இருக்க வேண்டுமாயின் அநீதிகள் தொடர்பில் அனைவரும் சிந்திக்க வேண்டும். அவற்றைக் கண்டு மௌனமாக இருக்க முடியாது.

எம்மக்கள் இன, மத வேற்றுமையற்ற ஒற்றுமையினை உறுதிப்படுத்தி பலமடைந்து எமக்கு எதிராக நடைபெறுகின்ற அநீதிகளுக்கு எதிராக ஒருமித்த குரல் கொடுக்க வேண்டும்.

இச் செயற்பாட்டை எமது மாகாண சபை களங்கமில்லாது செயற்பட்டு முன்னெடுத்துச் செல்லும்.

தமிழ்-முஸ்லிம் உறவு பலமடைவதன் மூலம் எமக்கான தீர்வினை விரைவில் நாம் பெற்றுவிட முடியும் எனக் கூறிய சம்பந்தன் 1990 களில் முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டமை தவறான செயல் எனவும் கூறினார். (அ-4)

# மோட்டார்சைக்கிள் விபத்தில் யுவதிகாயம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை வீதி கோண்டாவில் பகுதியில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் யுவதி ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கடந்த 11 ஆம் திகதி பிற்பகல் 6.30 மணியளவில் இடம்பெற்ற இவ் வித்துச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவது,

காங்கேசன்துறை வீதியால் பயணித்த இந்த யுவதி கோண்டாவில் பகுதியில் வீதியைக்கடக்க முற்பட்ட நிலையில் தான்பயணித்த மோட்டார் சைக்கிளின் சமிக்ஞையை பாவித்த போதிலும் இவருக்கு பின்புறமாக மோட்டார்சைக்களில் வந்த இளைஞர் வேகக் கட்டுப்பாட்டை இழந்து யுவதியை மோதித்தள்ளியுள்ளார்.

இதனால் காலில் படுகாயமடைந்த யுவதி யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

இதையடுத்து சம்பவ இடத்திற்கு வந்தசுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட போதிலும் அங்கு விசாரணைக்கு வந்திருந்த இரு பொலிஸாருக்கும் தமிழ் தெரியாத காரணத்தால் மேலதிக விசாரணைகள் உடனடியாக மேற்கொள்ளப் டவில்லை.

இதேவேளை குறித்த விபத்தை நேரில் கண்ட அப்பகுதியை சேர்ந்த இருவர் பொலிஸாரின் விசாரணைகளுக்கு தாமாக்வே தகவல் வழங்க முன்வந்தமை அங்கு நின்றிருந்தவர்களுக்கு முன் மாதிரியாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-5)



செலிங்கோ ஆயுள் காப்புறுதி நிறுவனத்தின் நெல்லியடிக் கிளையின் வாடிக்கையாளர் ஒருவருக்கு இழப்பீட்டு தொகையாக 6 இலட்சம் ரூபா பெறுமதியான காசோலை வழங்கப்பட்டது. மந்திகை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர்.டி.வினோதன் காசோலையை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

## சீரடி சாயிபாபாவின் 95 ஆவது மஹாசமாதி தினம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சீரடி சாயி மந்திரினால் நடத்தப்படும் ஸ்ரீ சீரடி சாயிபாபாவின் 95 ஆவது மஹா சமாதி தின இறுதி நாள் நிகழ்வுகள் இன்று திங்கட் கிழமை பிற்பகல் 2.15 மணிக்கு ஆலயத்தில் நடைபெறவுள்ளன.

இதன் போது விசேட அபிஷேகம், பாத பூஜை, விசேட துனி பூசை என்பன இடம்பெறவுள்ளன.(அ-5)

## பதவியேற்பு வைபவம்

வடக்கு மாகாண சபையின் சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சராக ப. சத்தியலிங்கம் பதவியேற்கும் வைபவம் இன்று திங்கட்கிழமை காலை 11 மணிக்கு வடமாகாண சுகாதார அமைச்சில் நடைபெறவுள்ளது என வட மாகாண சுகாதார சுதேச வைத்தி யத்துறை அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அறிவித் துள்ளார். (அ-7)

# தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தில் யாழ்.மாநகர சபையின் செயற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு யாழ்.மாநகர சபையால் முன்னெடுக்கப்படும் நுளம்புக் கட்டுப்பாட்டு செயற்பாட்டின்போது, கடந்த 7 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரையில் 20 பாடசாலைகள், 21 அரச நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள் 4 ஆயிரத்து 756 வீடுகள், பொதுஇடங்கள், ஏனைய நிலையங்கள் என்பன சோதனை இடப்பட்டுள்ளதாக யாழ்.மாநகரசபையின் பிரதம பொது சுகாதார பரிசோதகர் ஆ.ஜீவநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இதன்போது 405 இடங்கள் நுளம்பு பெருக்கத்திற்கு ஏதுவாக அறியப்பட்டு அவை அழிக்கப்பட்டுள்ளன.

மேலும் நுளம்புக் குடம்பிகள் உள்ளனவென இனங்காணப்பட்ட இடங்கள் வடிகால்கள் என்பனவற்றிற்கு அபேற் கிற நியூல்ஸ் எனும் இரசாயனப் பதார்த்தத்தைப் பயன்படுத்தி நுளம்பு குடம்பிகளை அழித்து வருவதாகவும் ஈக்களை கட்டுப்படுத்தும் முகமாக கிருமி நாசினிகளை பயன்படுத்துவதோடு, விசேட முறையில் கழிவகற்றல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் 11 இடங்களுக்கு எதிராக எச்சரிக்கை அறிவித்தல் விடுக்கப்பட்டதுடன் ஒரு நிலையத்திற்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுமுள்ளது.

இதேவேளை பசார் I பகுதியில் பாடசாலை மாணவர்களுடன் ஒன்றிணைந்து சிரமதானமும் விழிப்புணர்வு ஊர்வலமும் நடத்தப்பட்டதுடன், நல்லூர் பொதுச் சுகாதார பிரிவில் இரண்டு சிரமதான நிகழ்வுகளும் மேற்கொள்ளப்பட்டன. அத்தோடு குறித்த பகுதிகளில் உள்ள நீர் நிலைகளில் நுளம்பு குடம்பிகளை அழிப்பதற்கென சில மீன் இனங்கள் விடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (அ-5)

## நாவன்மை மற்றும் பண்ணிசை போட்டி

(மானிப்பாய்)

சுதுமலை இந்து சமய விருத்திச் சங்கத்தினரின் ஏற்பாட்டில் நவராத்திரியை முன்னிட்டு, நாவன்மை மற்றும் பண்ணிசைப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு சுது மலை சிந்மய பாரதி வித்தியாசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கமைய நாவன்மைப் போட்டிகள் தரம் 1, 2 ஆரம்ப பிரிவு, தரம் 3- 5 வரை கீழ்ப் பிரிவு, தரம் 6-8 வரை மத்திய பிரிவு, தரம் 9- 11 வரை மேற்பிரிவு, தரம் 12, 13 அதி மேற்பிரிவுகளாகவும் நடைபெறும் பண்ணிசைப் போட்டிகளில் கீழ், மத்திய மேல், அதிமேற் பிரிவுகள் மட்டுமே பங்கு பெறவுள்ளன.

போட்டிகளில் பங்குபற்றுவதற்கு விண்ணப்பித்த மாணவர்கள் அனைவரையும் தவறாது குறித்த நேரத்திற்கு கலாசார உடையுடன் வருகை தருமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

அத்தோடு, மேலதிக தகவல்களை பெறவிரும்புவோர் 0771641413, 0772247419 ஆகிய தொலை பேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-9-23)

## பக்தி விஜயம் வெளியீடு

(யாழ்ப்பாணம்)



பக்தி விஜயம் சஞ்சிகையின் ஆனி-ஆடி மாதத்துக்கான வெளியீடு வெளிவந்துள்ளது.

நவராத்திரி சிறப்பு மலராக வெளிவந்துள்ள இவ் இதழ், புரட்டாதி சனி தோஷ பரிகாரங்கள், அமாவாசையில் உதித்த பௌர்ணமி நிலவு, உலகின் சிறந்த மாணவன், வெற்றியின் இரகசியம் விஜயதசமி, சிவன் மீது வீசிய கத்தி, ஒன்பது உயிர்களின் வாணி விழா பூசை எனும் சிறப்பு ஆக்கங்களுடன் இன்னும்பல ஆன்மீக அறிவியல்தகவல்களைத் தாங்கி வெளிவந்துள்ளது.

இச் சஞ்சிகையை பெற்றுக் கொள்ள இல.555, புதுத்தெரு, மன்னார் என்ற முகவரியுடனோ, 071-3861168, 0776649635 என்ற தொலைபேசி இலக்கங்களுடனோ தொடர்பு கொள்ளமுடியும். (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயநிர்ணய தீர்வொன்றை பெறுவதற்கு பொதுச் சிந்தனையை வளர்த்தெடுங்கள்

## த.தே.கூட்டமைப்பினரிடம் மன்னார் ஆயர் கோரிக்கை

(மன்னார்)

**அமைச்சர்களின் பதவிப்பிரமாண நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் ஒரு சிலர் கலந்து கொள்ளாமை கவலை தருவதும் கண்டிக்கத்தக்கதுமான விடயமாகும். மக்களின் நம்பிக்கைகளை வீணடிக்கும் முறையில் அவர்கள் நடந்து கொள்ளக்கூடாது என்று மன்னார் மறைமாவட்ட ஆயர் வணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகை தெரிவித்துள்ளார்.**

வடக்கு மாகாண அமைச்சர்கள் பதவிப் பிரமாண வைபவம் கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் சம்பிரதாயபூர்வமாக முதலமைச்சர் விக்கினேஸ்வரன் முன்னிலையில் நடைபெற்ற போது கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஒரு சில கட்சிகளும் அதன் உறுப்பினர்களும் மாகாண சபைக்கு தெரிவு செய்யப்பட்டவர்களும் கலந்து கொள்ளாமை பற்றி தனது கவலையைத் தெரிவித்த போதே ஆயர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து தனது கருத்தைத் தெரிவிக்கையில்,

வரலாற்றில் முதல் தடவையாக வடக்கின் அமைச்சர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களின் பதவிப் பிரமாணத்தைக் கண்டு களிக்க ஏராளமான பொதுமக்கள் பிரசன்னமாகியிருந்தமை கண்டு மிகுந்த மகிழ்சியடைந்தோம்.

அதேவேளை தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. அமைச்சுப் பதவி கிடைக்கவில்லை என்பதற்காக ஒரு சில கட்சிகளும் அதன் உறுப்பினர்களும் அந்நிகழ்வில் கலந்து கொள்ளாமை கவலை தருகின்ற ஒரு விடயமாகும். அதேவேளை கண்டிக்கத்தக்க விடயமுமாகும்.

மக்கள் எந்தக் குறிக்கோள்களோடும் அபிலாசைகளோடும் இவர்களைத் தெரிவு செய்தார்களோ அதைப் பாழாக்கும் முறையில் இவர்கள் நடந்து கொண்டுள்ளனர்.

முதலமைச்சர் விக்கினேஸ்வரன் ஜனாதிபதிக்கு முன்பாக பதவிப்பிரமாணம் செய்து கொண்டது பற்றி பல விதமான அபிப்பிராயங்கள் கூறப்பட்டன. முதலமைச்சர் தனது அனுபவத்தின் அடிப்படையில் இந்த தீர்மானத்தை மேற்கொண்டிருக்கலாம். அரசாங்கத்துடன் பேசுவதன் மூலமே தமிழ் மக்களுக்கான தீர்வைப் பெறமுடியும் என்பதை சிந்தித்தே அந்த முடிவை மேற்கொண்டிருந்தார்.

அ மாத்திரமின்றி இலங்கை அரசுடன் பேச வேண்டும். சர்வதேச சமூகத்துடன் பேச வேண்டும். உலக நாடுகளுடன் தொடர்பு கொள்ள வேண்டும். அப்போது தான் சமநிலையான ஒரு சூழ்நிலையை உருவாக்க முடியும்.

மேலும் தீர்வொன்றுக்கு வழிபிறக்க முடியும். அவரின் தீர்க்க தரிசன முடிவை நாம் எல்லோரும் ஆதரிக்க வேண்டும்.

முதலமைச்சரின் சத்தியப்பிரமாண வைபவத்துக்கும் கூட்டமைக்குள் பலர் சமுகமளிக்காமை கவலை தருகின்ற விடயமாகும்.

தேசியத் தன்மை வாய்ந்த சுயநிர்ணயத்துடன் கூடிய தீர்வொன்றை மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க வேண்டும். வடக்கு கிழக்கை இணைத்த முறையில் காத்திரமான தீர்வொன்றை அடைய வேண்டுமென்பதற்காகவே அவரின் செயற்பாடுகள் அமைந்து காணப்படுகின்றன.

வடக்கு கிழக்கு பிரிக்க முடியாத இணைவு கொண்டது. அந்தப் பிரதேசத்துக்கு தேசியத்தை ஏற்றுக் கொண்டு சுய நிர்ணய அடிப்படையிலான தீர்வொன்றை எங்களுக்கு பெற்றுத் தருவார்கள் என்ற கார ணமாகவே இந்த தேர்தலில் கூட்டமைப்புக்கு மக்கள் அமோக ஆதரவை வழங்கியிருக்கிறார்கள்.

மக்கள் அணிதிரண்டு தமிழ்த் தேசியத்துக்கு அளித்த ஆதரவும் நோக்கமும் தளர்ச்சி அடைந்து விடுமோ என நாம் இப்பொழுது அச்சம் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே மக்களுடைய நம்பிக்கையை நாம் யாரும் வீணடிக்கக் கூடாது. பாழாக்கக் கூடாது.

மொத்தத்தில் அமைச்சர் பதவிகள் நான்கு மட்டுமேயுண்டு. இதை வெற்றி பெற்ற 30 பேருக்கு பங்கிட முடியாது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

தகைமையுள்ளவர்களுக்கும் திறமையுள்ளவர்களுக்கும் மட்டுமே அத்தகைய பதவிகளை வழங்க முடியும். அனுபவத்தின் அடிப்படையிலும் மக்களின் நம்பிக்கைக்கு உரிய முறையிலும் இப்பதவிகள் முதலமைச்சரினால் வழங்கப்பட்டிருக்கக் கூடும் என்பதை நாம் மனம் கொள்ள வேண்டும்.

எனவே கூட்டமைப்புக்குள் இருக்கின்றவர்கள் பதவிக்காகவோ அதிகாரத்துக்காகவோ போட்டி போடுவதையம் ஒருவரையொருவர் விமர்சிப்பதையும் விட்டொழித்து எமது இலக்கையும் மக்களின் அபிலாஷைகளையும் நிறைவேற்ற ஒன்றுபட்டு நில்லுங்கள் என மக்கள் சார்பாக வேண்டிக் கொள்கின்றேன்.

இவ்வாறானதொரு சூழ்நிலையைத் தவிர்த்துக் கொள்வதற்காக கூட்டமைப்புக்குள் அங்கம் பெரும் ஐந்து கட்சிகளையும் ஒன்று சேர்த்த முறையில் பதிய வேண்டுமென்ற கனவைக் கண்டு கொண்டிருக்கிறோம். அதற்கு எல்லோரும் விட்டுக் கொடுத்து நடக்க வேண்டுமென்பதே எமது எதிர்பார்ப்பாகும். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை தான் ஒற்றுமையையும் தமிழர்களுக்கான உரிமையையும் தீர்வையும் பெற்றுத் தரமுடியும்.

எனவே தனித்துவ சிந்தனைகளை மறந்து பொதுச் சிந்தனையை வளர்க்க தனி தன்மையை விட்டு பொதுநன்மையை வென்றெடுக்க ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன் என்றார். (அ-2)

# பொதுநலவாய அமைப்புக்கு இலங்கை விவகாரத்தில் தோல்வி

## கனடா சுட்டிக்காட்டு

பொதுநலவாய நாடுகள் அமைப்பு இலங்கை விவகாரத்தில் தோல்வியடைந்துள்ளதாக கனடா தெரிவித்துள்ளது.


பொதுநலவாய நாடுகள் அமைப்பும் பொது நலவாய நாடுகள் அமைச்சர்கள் அமைப்பும் சந்தர்ப்பத்தை சரியான முறையில் பயன்படுத்தி இலங்கைக்கு அழுத்தங்களை கொடுக்கத் தவறியுள்ளதாக கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பயார்ட் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாற்றத்தை ஏற்படுத்துமாறு சர்வதேச சமூகம் விடுத்த கோரிக்கையை இலங்கை அரசாங்கம் உதாசீனம் செய்துள்ளதாகவும் இது குறித்து பொதுநலவாய நாடுகள் அமைப்பும் உரிய அழுத்தங்களைப் பிரயோகிக்கவில்லை எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பொதுநலவாய நாடுகள் கொள்கைகள், கோட்பாடுகளை அமுல்படுத்த வேண்டும் என்ற காரணத்தினாலேயே பிரதமர் ஸ்டீவன் ஹாபர் அமர்வுகளில் பங்கேற்பதனை நிராகரித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் அடிப்படை கொள்கைகள், கோட்பாடுகளை உதாசீனம் செய்யும் இலங்கைக்கு எவ்வாறு இரண்டாண்டுகள் அமைப்பின் தலைமைப் பொறுப்பை ஒப்படைப்பது?. இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருகிறது. அது ஜனநாயக கொள்கைகள் கோட்பாடுகளை மதிப்பதில்லை எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (அ-2)



யா/ நவாலி ஸ்தான அ.மி.த.க. பாடசாலையில் ஆசிரியர் தின விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அதிபர், ஆசிரியர்களையும் மாணவர்களையும் பெற்றோர்கள், பழைய மாணவர்கள் மாலையணிவித்து கௌரவித்ததைப் படத்தில் காணலாம்.

# சிறுவர் உரிமை விடயத்தில் இலங்கை முன்னேற்றம்

## யுனிசெப் புகழாரம்

(கொழும்பு)

சிறுவர் உரிமைகளை உறுதிப்படுத்துவதில் இலங்கையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் இணை நிறுவனமான யுனிசெப் தெரிவித்துள்ளது.

சிறுவர் நலன்களை மேம்படுத்த உதவிகள் தொடர்ச்சியாக வழங்கப்படும் என இந் நிறுவனத்தின் இலங்கைப் பிரதிநிதி உனா மெக்காலி தெரிவித்தார்.

குறிப்பாக மிகவும் பின்தள்ளப்பட்ட உதவிகள் தேவைப்படுகின்ற சிறுவர் சிறுமியரின் நலன்களை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். கடந்த சில தசாப்தங்களாக இலங்கையில் அவசர மனிதாபிமான உதவிகளை வழங்குவதிலேயே யுனிசெப் கூடுதல் கவனம் செலுத்தி வந்ததாக தெரிவித்துள்ள அவர் யுத்தத்தின் பின்னரான அபிவிருத்திப் பணிகளில் காத்திரமான பங்களிப்பினை தாம் வழங்கத் தயார் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# கொரிய மொழிப் பரீட்சையில் 20,536 பேர் தோற்றுவர்

(கொழும்பு)

கொரிய வேலைவாய்ப்புக்களைப் பெற்றுச் செல்வதற்கான கொரிய மொழிப் பரீட்சைகள் எதிர்வரும் 19,20 ஆம் திகதிகளில் கொழும்பில் ஆறு நிலையங்களில் நடைபெறவுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.

இம்முறை இப்பரீட்சைக்காக 20 ஆயிரத்து 536 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

பரீட்சை மண்டபம் மற்றும் சுட்டிலக்கங்கள் பரீட்சார்த்திகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்குரிய பெறுபேறுகள் எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி வெளியிடப்படும்.

www.slbfe.lk அல்லது www.eps.go.kr அல்லது www.brdkorea.or.kr என்ற இணையத்தளங்களின் ஊடாக பெறுபேறுகளை அறிந்து கொள்ள முடியும் என்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழ் மக்கள் கோரும் அரசியல் மாற்றத்தை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சாத்தியமாக்குமா?

**பத்திரிகைத்துறையில் சிறப்பான விருதுகளைப் பெற்றவரும் ஊடகவியலாளருமான ஜே.எஸ் .திசைநாயகம் *த டிப்லொமற்* என்ற ஊடகத்திற்கு எழுதியது**

அரசியற் தீர்வொன்றுக்கான அடிப்படையாக சுயநிர்ணய ஆட்சி மற்றும் இறையாண்மையை பகிர்ந்துகொள்ளுதல் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது மிகத் தீவிரமாகக் கோரிக்கை விடுத்துச் செயற்பட்டால், சிங்கள ஆளும் வர்க்கமும் இலங்கை அரசாங்கமும் இதனை முறியடிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட வேண்டியிருக்கும். இவ்வாறு *த டிப்லொ மற்றிக்* என்னும் ஊடகத்தில் *ஜே.எஸ். திசைநாயகம்* எழுதியுள்ள கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

தமது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டது போன்று, சுயநிர்ணய ஆட்சிக்கான கோரிக்கையை முன்வைக்கவுள்ளதாக, செப்ரெம்பர் 21 அன்று இலங்கையின் வடக்கு மாகாணத்தில் இடம்பெற்ற மாகாணசபைத் தேர்தலில் அமோக வெற்றியீட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

சுயநிர்ணய ஆட்சி என்பதை இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் நிராகரித்து வருகின்றது. ஆனால், தமிழ் மக்களுக்கு வாக்குறுதி அளித்த தற்கமைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது, வடக்கில் சுயநிர்ணய ஆட்சியை நிலைநிறுத்துவதற்கு என்ன செய்யவுள்ளது என்பதை அறிவது மிகவும் மூக்கியமானதாகும்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் 1987 இல் கைச்சாத்திடப்பட்ட இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம், மாகாணசபைகள் உருவாக்கப்படுவதற்கான வரைபு, அரசியல் யாப்பில் குறிப்பிடப்பட்ட போதிலும், இவ்வாண்டு செப்ரெம்பர் 21 இலேயே முதன் முதலாக வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் மேற் கொள்ளப்பட்டுள்ளது. அரசியல் யாப்பின் 13-வது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் மாகாணங் களுக்கும் அரசியல் அதிகாரப் பகிர்வுகள் வழங்கப்பட வேண்டும் என வரையறுக்கப்பட்டது.

மே, 2009 இல் தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப் பட்டதைத் தொடர்ந்து இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு மாகாணசபைகளின் ஊடக அரசியல் அதிகாரங்கள் பகிர்ந்து வழங்கப்பட வேண்டும் என சிங்கள ஆளும் அரசாங்கத்திடம் அனைத்துலக சமூகமும் இலங்கையர்களும் அழுத்தம் கொடுத்தனர். தமிழ் மக்களுக்கு எதிராக பல்வேறு மனித உரிமை மீறல்கள் மற்றும் புறக்கணிப்புக்கள் என்பன தொடர்ந்தும் இடம் பெறுகின்ற நிலையில், தமிழ் மக்களுக்கான உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன.

அரசியல், அதிகாரப் பகிர்வுக்கு மாகாண சபைகள் மட்டும் போதியதாகக் காணப்படவில்லை எனவும், இலங்கையில் இனப்பிரச்சினை தோன்றுவதற்கு ஒற்றையாட்சியின் கீழான அரசியல் யாப்பே காரணம் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறிவருகிறது.

ஒருங்கிணைந்த அரசியல் யாப்பு என்பது, மத்திய அரசாங்கம் நிறைவேற்று அதிகாரத்துடன், முழுமையான அதிகாரங்களையும் கட்டுப்படுத்துவதை அனுமதிப்பதாகவும் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாணத் தேர்தல் இடம்பெறுவதற்கு முன்னரே அதிகாரப்பகிர்வு மீது இலங்கையை ஆளும் தற்போதைய அரசாங்கமானது, மிகவும் இறுக்கமான கட்டுப்பாட்டை மேற்கொள்ளத் தொடங்கியமையானது, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கூற்றை மேலும் வலுப்படுத்துகிறது.

மாகாணங்களுக்கு ஏற்கனவே, வழங்கப்பட்ட காணி மற்றும் காவற்றுறை அதிகாரங்களை, இலங்கையின் மத்திய அரசாங்கமானது, முழுமையாகத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கான முயற்சியை மேற்கொள்கின்றமை முதலாவது விடயமாகும்.


இரண்டாவதாக, இலங்கையின் மத்திய அரசாங்கமானது அரசியல் யாப்பை மீறிச் செயற்பட முனைகிறது. அதாவது, மாகாண சபைகளுக்கு காணி மற்றும் காவற்றுறை அதிகாரங்கள் வழங்கப்படமாட்டாது என்ற தீர்மானத்தை எல்லா மாகாண சபைகளின் அனுமதியுமின்றி, இலங்கை அரசாங்கமானது, அரசியல் யாப்பில் மாற்றத்தைக் கொண்டுவர முயற்சிக்கிறது.

இலங்கை அரசாங்கமானது, காணி மற்றும் காவல்துறை அதிகரங்களை முற்றுமுழுதாக தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு முயற்சி செய்து வரும் நிலையில், இது தொடர்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறான நடவடிக்கையை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளது. என யூலை 17 அன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான வேட்பாளராகப் போட்டியிட்ட சி.வி.விக்னேஸ்வரனிடம் டெய்லி மிறர் ஊடகம் வினவியது.

இதுவரையில் வடக்கு மாகாண சபைக்கென ஜனநாயக ரீதியில் எந்தவொரு நிறுவகமும் தெரிவு செய்யப்படவில்லை. இந்நிலையில், 13-வது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் தேர்தல் மூலம் நாங்கள் வடக்கு மாகா ணத்தில் ஒரு ஜனநாயக ரீதியான நிறுவகம் ஒன்றை அமைக்க எம்மை அனுமதிக்க வேண்டும். இதற்குப் பின்னர், நாங்கள் ஒலிவர் ருவிஸ்ற் போன்று சற்றுக் கூடுதலானவற்றை கேட்க முடியும். என சி.வி.விக்னேஸ் வரன் பதிலளித்திருந்தார்.

சற்றுக் கூடுதலானவற்றைக் கேட்க முடியும் என விக்னேஸ்வரன் தனது நேர்காணலில் குறிப்பிட்ட- நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமிருந்து குறிப்பாக, வடக்கு மாகாணத் தமிழர்கள் மற்றும் பொதுவாக எல்லாத் தமிழர்களும் எதனை எதிர்பார்க்கிறார்கள் என்பதே இங்கு வினாவாகும்.

யூலை 17 இல் விக்னேஸ்வரன் குறிப்பிட்ட- இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலான உறவா



னது, தற்போது, மேலும் கவனத்திற் கொள்ளப்படுகின்ற, முனைப்புப் பெற்ற ஒன்றாக மாறியுள்ளது.

எடுத்துக்காட்டாக, காணி தொடர்பான அனைத்துத் தீர்மானங்களையும் மத்திய அரசாங்கமே, எடுக்கமுடியும் எனவும் மாகாணசபைகளுக்கு எவ்வித அதிகாரமும் இல்லை எனவும், இலங்கையில் உச்சநீதிமன்றம் செப்ரெம்பர் 27 அன்று தீர்ப்பு வழங்கியிருந்தது.

இலங்கை அரசாங்கம் வடக்கில் எவ்வித பொறுப்புணர்வு மில்லாத தனியாருக்குச் சொந்தமான காணிகளை அபகரித்து வரும் நிலையில் உச்சநீதிமன்றின் இத்தீர்மானமானது, அரசாங்கத்தின் நடவடிக்கையை மேலும் ஊக்கு விப்பதாகவுள்ளது.

அதாவது, வடக்கின் மாகாணசபையானது, காணிகள் தொடர்பான தீர்மானத்தை எடுக்க முடியும் என்பது நடை முறையிலிருந்தால், இதன் மூலம் இலங்கை அரசாங்கத்தின் நில அபகரிப்பானது தடைப்பட்டு விடும் என்பதைக் கருத்திற் கொண்டே இலங்கை உச்ச நீதிமன்றம். இத்தீர்ப்பை வழங்கியுள்ளது.

ஒற்றயைாட்சி அரசியல் யாப்பின் கீழ் கொழும்புடன் இணைந்து அதிகாரப் பகிர்வின் மூலம் வடக்கு மாகாணத்தில் ஆட்சியை நடாத்துவதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது தேர்தல் அறிக்கை மூலம் தெளிவு படுத்தியிருந்தது. ஆனால், இது போதுமானதல்ல. தமிழ் மக்களின் பிரச்சினையானது, இறையாண்மை மற்றும் சமஸ்டி நிர்வாகக் கட்டமைப்புகளை உள்ளடக்கிய- அவற்றைப் பகிர்ந்துகொள்வதை அடிப்படையாகக் கொண்டதாகும். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கை அங்கீகரிக்கப்படும் போதே தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அடிப்படைத் தீர்வுகாணமுடியும்.


முன்றாவதாக, இலங்கையின் வடக்கில் தமிழ்மக்களின் மீது அரசியல் அடக்குமுறை கட்டவிழத்து விடப்பட்டுள்ளது. இங்கு ஆயுதப்போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட போதிலும், இலங்கை இராணுவத்தினர், தமிழ் மக்களின் மீது வன்முறைகளைக் கட்டவிழத்து விடுகின்றனர். தமிழ்மக்கள் தற்போது பொறுமையிழந்துள்ளனர். அவர்கள், மீதான அடக்கு முறைகள் தொடர்கின்றன. அண்மையில் அதாவது, ஆகஸ்டில் இலங்கையின் வடக்குக்கு வருகை தந்திருந்த ஐ.நா. மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் நவநீதம்பிள்ளையை காணாமற்போன உறவுகளின் குடும்பத்தவர்கள் சந்திப்பதற்குத் தடை விதிக்கப்பட்டது.

தம்மீதான இலங்கை இராணுவத்தினதும், இலங்கை அரசாங்க அதிகாரிகளினதும் அடக்குமுறைகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என தமிழ் மக்கள் தாம் தேர்ந்தெடுத்த கூட்டமைப்பின் பிரதிநிதிகளிடம் கோரிக்கை விடுப்பார்கள். இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பனது நம்பகமான பதிலை வழங்க வேண்டியிருக்கும்.

இதேவேளையில் அரசியற் தீர்வொன்றுக்கான அடிப்படையாக, சுயநிர்ணய ஆட்சி மற்றும் இறையாண்மையை பகிர்ந்துகொள்ளுதல் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது, மிகத் தீவிரமாகக் கோரிக்கை விடுத்துச் செயற்பட்டால், சிங்கள ஆளும் வர்க்கமும் இலங்கை அரசாங்கமும் இதனை முறியடிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட வேண்டியிருக்கும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது, தனது கோரிக்கையை வலுப்படுத்துவதற்கு ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள், அமைதிவழிப் போராட்டங்கள் போன்றவற்றில் பொது மக்களை ஈடுபடுத்த வேண்டியிருக்கும். இதற்கு தமிழ் மக்களின் ஆதரவைப் பெறும் அதே வேளையில், கூட்டமைப்பானது, அனைத்துலக சமூகத்தின் ஆதரவையும் இந்தியாவின் தமிழ் நாட்டிலுள்ள அரசியற் கட்சிகளின் ஒத்துழைப்பையம் புலம்பெயர் தமிழ் சமூகத்தின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் பெற வேண்டிய தேவையுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தேர்தலில் வெற்றி கொள்ளவைப்பதன் மூலம் தமக்கான மாற்றம் ஏற்படும் என்பதையும் இதற்கான காலம் தற்போது கனிந்துவிட்டது



என்பதையும், வாக்காளர்கள் வடக்கு மாகாணசபைத் தேர்தல் மூலம் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

இவ்வாறான சக்திகளின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் மிகவும் பயனுள்ள வினைத்திறனுள்ள வகையில் பயன்படுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது, தமிழ் மக்களின் விடிவிற்கான தலைமைத்துவத்தை வழங்கமுடியுமா அல்லது இல்லையா என்பதே, தற்போதுள்ள கேள்வியாகும். இதற்கு ஒலிவர் ருவிஸ்ரை விட *மிக அதிகம்* கோர வேண்டும் என்பதே உண்மையான நிலைப்பாடாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு பாராளுமன்றை அவமதித்துவிட்டது

## விஜயதாச எம்.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

**பதினாறு கொடுக்கல் வாங்கல்களில் இடம்பெற்றுள்ள மோசடி தொடர்பில் 2007 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட கோப் (பொது நிறுவனங்கள் பற்றிய பாராளுமன்றக் குழு) அறிக்கை தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு பாராளுமன்றத்தினூடாக அறிவிக்கப் பட்டிருக்கின்ற போதிலும் குறித்த ஆணைக்குழு அது சம்பந்தமாக எந்தவொரு நடவடிக்கையையும் இதுவரையில் மேற்கொள்ளாதிருப்பதன் மூலம் பாராளுமன்றத்தை அவமதித்து விட்டதாக ஐக்கிய தேசிய கட்சியின் கொழும்பு மாவட்ட எம்.பி.யான ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் கடந்த 11 ஆம் திகதி இடம்பெற்ற அமர்வின் போது கோப் அறிக்கை தொடர்பான இரண்டாம் நாள் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தின் போது ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை முன்வைத்தே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அப்போது விஜயதாச ராஜபக்ஷ எம்.பி.யின் கருத்தினை செவிமடுத்த சபாநாயகர் சமல் ராஜபக்ஷ இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 16 விடயங்கள் தொடர்பிலான முன்னேற்றங்கள் குறித்து ஆராய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்டார். தொடர்ந்து ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாச ராஜபக்ஷ பேசுகையில்,

பதினாறு கொடுக்கல் வாங்கல்களில் இடம்பெற்றிருக்கும் ஊழல் மோசடிகள் தொடர்பில் 2007 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி கோப் அறிக்கை ஊடாக பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தேன்.

இது தொடர்பில் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு ஊடாக விசாரணைகளை மேற்கொள்வதென பாராளுமன்றத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் இவ் விடயங்கள் தொடர்பில் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

அத்துடன் நின்றுவிடாது மேற்படி விடயங்கள் தொடர்பில் முன்வைக்கப்படுகின்ற நடவடிக்கைகள், விசாரணைகள் சம்பந்தமாக இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை பாராளுமன்றத்துக்கு அறிவிக்க வேண்டுமென அப்போதிருந்த சபாநாயகர் வி.ஜே.மு.லொக்கு பண்டாரவினால் உத்தரவும் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இதன் பிரகாரம் ஆரம்பகால கட்டத்தில் இரு வாரங்களுக்கு ஒருமுறை முன்னேற்ற அறிக்கை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டு வந்த போதிலும் பின்னர் அந்த நடவடிக்கை நிறுத்தப்பட்டுவிட்டது.

சுமார் 300 பில்லியன் மோசடி சம்பந்தப்பட்ட விடயங்கள் எந்தவொரு விசாரணையுமின்றி கிடக்கின்றன. இதன்மூலம் பாராளுமன்றத்தின் உத்தரவு மதிப்பிழக்கப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவானது பாராளுமன்றத்தை மதிக்காது செயற்பட்டிருக்கின்றது. இது குறித்து நான் தங்களுக்கு எழுத்து மூலம் அறிவித்திருக் கின்றேன். பாராளுமன்றத்தை மதிக்காத ஒரு ஆணைக்குழு இருப்பதன் பயன் தான் என்ன? எனக் கேட்டார்.

இதற்கு பதிலளித்த சபாநாயகர் விசாரணை தொடர்பான அறிக்கை எதுவும் கிடைக்கவில்லை. எனவே இது குறித்து பாராளுமன்ற செயலாளர் நாயகத்தினூடாக நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் முன்னேற்ற அறிக்கை தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும் என்றார். (அ-2)

# மாவீரர் தினத்தை முன்னிட்டு தபால் முத்திரை வெளியீடு



மாவீரர் தினத்தை முன்னிட்டு ஜேர்மனியில் கார்த்திகை பூ வடிவத்தில் தபால் முத்திரை ஒன்று பாவனைக்கு வெளியிடப்பட்டுள்ளது.

மாவீரர்களை,அவர்களின் தியாகத்தை, தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை, ஈழத் தமிழினத்தை அடையாளப்படுத்தும் வகையில் மீண்டும் காத்திகை பூ வடிவத்தோடு ஆயிரக்கணக்கான தபால் முத்திரைகள் வெளியிடப்பட்டுள்ளன.

கடந்த வருடம் ஜேர்மனி உட்பட பல்வேறு நாடுகளில் தேசியத் தலைவர், தேசியக் கொடி, தமிழீழம், தேசியச் சின்னங்கள் பொறித்த தபால் முத்திரைகள் வெளியிடப்பட்டன.

ஜேர்மன் தபால் அமைச்சின் விதிமுறைகளுக்கு அமைய, கடந்த வருட தேசியச் சின்னங்கள் பொறித்த முத்திரை வெளியீட்டை தொடர்ந்து இலங்கை தூதரகம் கடும் சீற்றம் கொண்டு ஜேர்மன் வெளிவிவகார அமைச்சிடம் தனது கண்டனத்தை வெளிட்டதாக தெரிய வருகிறது. (அ-2)

# கொழும்பில் போராட்டங்களை நடத்த தடைவிதிக்கவில்லை

## ஊடக மத்திய நிலைய பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பில் போராட்டங்களை நடத்த தடை விதிக்கப்படவில்லை என தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஸ்மன் ஹுலுகல்ல தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகரில் போராட்டங்களையோ ஆர்ப்பாட்டங்களையோ நடத்தக் கூடாது என பாதுகாப்பு அமைச்சோ அல்லது சட்டம் ஒழுங்கு தொடர்பான அமைச்சோ உத்தரவிடவில்லை.

பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாடு மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வகையிலேயே ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இம் மாநாட்டில் பங்கேற்கும் அரச தலைவர்கள் மற்றும் அதிகாரிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டிய பாரிய பொறுப்பு அரசாங்கத்திற்கு காணப்படுகின்றது.

மாநாடும் அது தொடர்பான நிகழ்வுகளும் ஒரு சில நகரங்களிலேயே நடைபெறவுள்ளன.

எனவே பொது மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய நடவடிக்கைகள் எடுக்கப்படமாட்டாது.

பொது நலவாய நாடுகளின் உச்சிமாநாடு நடைபெறவுள்ள கொழும்பிலும் ஏனைய அமைவிடங்களிலும் ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்துவதற்கு தடை விதிக்கும் பொருட்டு அரசாங்கத்தினால் எடுக்கப்படவுள்ள நடவடிக்கையானது, மனித உரிமை மீறல்களை மூடி மறைக்கும் முயற்சி என சர்வதேச மன்னிப்புச் சபை குற்றச்சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)



யாழ். மாநகர சபையும் பெரியபுலம் மகா வித்தியாலயமும் இணைந்து கடந்த வெள்ளிக்கிழமை டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு நடைபவனியில் ஈடுபட்டதை படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமாரி)

# செஞ்சிலுவைச் சங்க பணிப்பாளர் அமைச்சர் பசிலுடன் சந்திப்பு

(கொழும்பு)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், செம்பிறைச்சங்கம் ஆகியவற்றின் ஆசியாவுக்கான பணிப்பாளர் ஜகத் வெம்பேன் தலைமையிலான தூதுக்குழுவினர் அண்மையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவைச் சந்தித்துள்ளனர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், செம்பிறைச் சங்கங்களின் சர்வதேச சமூக மாநாட்டின் பொதுச் சபைக் கூட்டம், வடமாகாண மீள்குடியேற்றம், இடம்பெயர்ந்த மக்களின் நலனுக்காக செஞ்சிலுவைச் சங்கம் ஆரம்பித்துள்ள புதிய உதவித் திட்டங்கள் என்பன தொடர்பாக இச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டது.

மேலும் வடக்கில் மீள்குடியேற்றப்படும் மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவது தொடர்பாகவும் இச் சந்திப்பில் கூடிய கவனம் செலுத்தப்பட்டது.

செஞ்சிலுவைச் சங்கம், செம்பிறைச் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதி டிகோ டிம்ட்ரி உக் இலங்கை செஞ்சிலுவைச் சங்கப் பணிப்பாளர் நாயகம் திஸ்ஸ அபேவிக்கிரம ஆகியோரும் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க பொருளாதாரம் முடங்கும் அபாயம்

## ஜனாதிபதி பராக் ஒபாமா எச்சரிக்கை


**(வோஷிங்டன்)**

**கடன் உச்ச வரம்பை உயர்த்தாவிட்டாலும் நிதிச் செலவீனங்களுக்கு ஒப்புதல் அளிக்காவிட்டாலும் அமெரிக்காவின் பொருளாதாரம் முடங்கும் நிலை ஏற்படும் என்று அந்நாட்டு ஜனாதிபதி பராக் ஒபாமா எச்சரித்துள்ளார்.**

நிதி நெருக்கடியால் அமெரிக்காவில் தொடர்ந்து 12ஆவது நாளாக அரசு நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன.

இந்நிலையில் அந்நாட்டு மக்களுக்கு ஒபாமா ஆற்றிய உரையில் கூறியிருப்பதாவது, "இந்த நிலைமையைக் கண்டு நீங்கள் அனைவரும் வருத்தம் அடைந்திருப்பீர்கள். சாதாரண நிலையில் நாடு இல்லை. 17 ஆண்டுகளுக்கு பின்னர் அமெரிக்க அரசு முடங்கியுள்ளது. இது அனைவரையும் பாதிக்கும்.

இதற்கு குடியரசுக் கட்சியினர் தான் காரணம். அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு அவர்கள் ஒத்துழைப்பு அளிப்பதில்லை. இந்த நிலை நீடித்தால் அமெரிக்கப் பங்குச்சந்தைகளில் பாதிப்பு ஏற்படும், வர்த்தகம் தடைப்படும், வேலை வாய்ப்பின்மை அதிகரிக்கும்,



பணியில் உள்ளவர்களுக்கு சம்பளம் கிடைக்காது. அவர்கள் அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்களைச் செலுத்த முடியாது. இதனால அரசு செலுத்த வேண்டிய தவணைத் தொகையைச் செலுத்த முடியாமல் கடன் மீதி வைத்திருப்போர் பட்டியலில் அமெரிக்காவும் இடம்பெறும். இதன் மூலம் நாடடின் நம்பகத்தன்மை குலைந்து விடும்.

முதலில் அமெரிக்க வரவு செலவு திட்டத்துக்கு நாடாளுமன்றத்தில் ஒபபுதல் அளிக்கப்பட வேண்டும். கடன் உச்சவரம்பை அதிகரிக்க அனுமதி அளிக்க வேண்டும். இல்லையேல் நாட்டின் பொருளாதாரம் முடங்கும் என்றார்.

இந்நிலையில் இன்னும் சில நாட்களில் அமெரிக்க பொருளாதாரம் பெரும் ஆபத்தை சந்திக்க வாய்ப்புள்ளதாக உலக வங்கி தலைவர் ஜிம் யெங் கிங் கூறியுள்ளார்.

அபாயத்தை தடுக்க அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களுக்குள் ஒன்றுகூடி விவாதித்து ஏதாவது ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்றும் கிம் கூறியுள்ளார்.

கடன் வரம்பு பிரச்சினைக்கு அமெரிக்கா தீர்வுகாணாத பட்சத்தில், அது வளரும் நாடுகளை கடுமையாக பாதிக்கும என்றும் உலக வங்கித் தலைவர் எச்சரித்துள்ளார். (2)

# கார்க்குண்டு வெடிப்பில் சிக்கி 20பேர் பலி; 13பேர் படுகாயம்


ஈராக்கில் கடை வீதியில் பயங்கரவாதிகள் நிகழ்த்திய கார் குண்டு வெடிப்பில் 12 பேர் கொல்லப்பட்டனர். 13 பேர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் சமரா நகரப்பகுதியிலுள்ள கடை வீதியில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்கு நேற்று முன்தினம் ஏராளமானோர் கூடினர்.

அப்போது பயங்கரவாதிகள் காரில் மறைத்து வைத்திருந்த



வெடிகுண்டை பயங்கர சத்தத்துடன் வெடிக்கவைத்தனர்.

இந்தத் தாக்குதலில் 12 பேர் உயிரிழந்தனர், 13 பேர் படுகாயமடைந்ததாக பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

படுகாயமடைந்த அனைவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டனர். (2)



**மூன்று நாட்கள் அரசுமுறைப் பயணமாக தாய்லாந்து சென்றுள்ள சீன பிரதமர் லீ கெகியாங் தலைநகர் பாங்கொக்கில் வைத்து அந்நாட்டு பிரதமர் யிங்லக் சினவத்ராவை சந்தித்துப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதைப் படத்தில் காணலாம்.**

# பாக்.உடன் பேச்சை ஆரம்பிக்க சாதகமான சூழல் ஏற்படவில்லை

## சல்மான் குர்ஷித் தெரிவிப்பு

பாகிஸ்தானுடன் மீண்டும் பேச்சுவார்த்தையைத் தொடங்குவதற்கான சாதகமான சூழல் ஏற்படவில்லை என்று இந்திய வெளியு றவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார்.

இந்தோனேசியாவின் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு, நேற்று முன்தினம் பிரதமர் மன்மோகன் சிங்குடன் சிறப்பு விமானத்தில் டில்லி திரும்புகையில் செய்தியாளர்களுக்கு சல்மான் குர்ஷித் பேட்டியளித்தார். அப்போது அவர் கூறுகையில்,

இந்தியாவுக்கும், பாகிஸ் தானுக்கும் இடையிலான எல்லைக் கட்டுப்பாடு கோட்டுப் பகுதியில் அண்மையில் நிகழ்ந்த சம்பவங்கள் நிலைமையை மோசமாக்கியுள்ளன. இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் இயல்பு நிலைக்குத் திரும்புவதற்கான சாதகமான சூழல் உருவாகவில்லை.

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையிலான ஒருங்கிணை ந்த பேச்சுவார்த்தை இரு தரப்பு உறவுகளும் மோசமடைந்ததை யடுத்து நிறுத்திவைக்கப்பட்டது. இதையடுத்து, நிறுத்தப்பட்ட அந்த ஒருங்கிணைந்த பேச்சுவார்த்தையை எப்படித் தொடரலாம் என்பது குறித்து விவாதிக்கப்பட்டது.

இதுதொடர்பாக இரு நாட்டுப் பிரதமர்களும் கடந்த மாதம் நியூயோர்க்கில் சந்தித்த போது கருத்துகளைப் பரிமாறிக் கொண்டனர். இதுவிடயத்தில் இன்னும் அரசியல் ரீதியான தெளிவான முடிவு எதுவும் எட்டப்படவில்லை.

ஆனால், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் சீரடைவதற்கான சாதகமான சூழல் உள்ளதா என்பதை என்னால் அறுதியிட்டுக் கூற இயலாது. எல்லையில் நிகழ்ந்த சம்பவங்கள், இரு நாடுக ளிடையே உறவுகளை மேம்படுத்த மேற்கொளளப்பட்ட முயற்சிகளுக்கு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளன.

எல்லைப் பகுதியில் விரும்பத்தகாத சம்பவங்கள் நிகழ்வதைத் தடுத்தால்தான் இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகள் சீரடையும். இந்தியாவுடனான உறவுகளை மேம்படுத்த விரும்புவதாக பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் மீண்டும், மீண்டும் கூறி வருகிறார்.

இது வரவேற்கத்தக்கதே. எனினும், மீண்டும் ஒருங்கிணைந்த பேச்சுவார்த்தையைத் தொடங்குவதற்கான திகதி இடம் குறித்து என்னால் தற்போது அறுதியிட்டுக் கூற இயலாது.

**சீனாவுடனான உறவுகள்**

இந்தியா- சீனா இடையிலான உறவுகளைப் பொருத்தவரை, எல்லை பிரச்சினை தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே கருத்து வேறுபாடு நிலவுகிறது. இதனால் தான், அருணாசலப் பிரதேசததைச் சேர்ந்த வில்வித்தை வீரர்கள் இருவருக்கு சீனா வெள்ளைத் தாளில் விசா அளித்தது போன்ற சர்ச்சைக்கிடமான சம்பவங்கள் நிகழகின்றன. ஆனால், இது போன்ற சம்பவங்கள், பிறதுறைகளில் இரு நாடுகளுக்குமிடையிலான ஒத்துழைப்



பில் எந்தவிதமான தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

இரு நாடுகளுக்குமிடையிலான எல்லைப் பகுதியில் தொடர்ந்து அமைதி நிலவ வேண்டும் என்பதையே நாம் விரும்புகிறோம். இதன்மூலம், எல்லை பிரச்சினைக்கு இறுதியான தீர்வை நோக்கி இரு நாடுகளும் அடியெடுத்து வைக்க வேண்டும் என இந்தியா விரும்புகிறது என்றார். (2)

# இந்திய காவல்படையால் அமெ.கப்பல் சுற்றிவளைப்பு



இந்திய கடல் பகுதிக்குள் அத்துமீறி, நவீன ஆயுதங்களுடன் உள்நுழைந்த வெளி நாட்டுக்கப்பலை கடலோரக் காவல்படையின் தூததுக்குடிப் பிரிவினர் நேற்றுமுன்தினம் அதிகாலை சுற்றி வளைத்துள்ளனர்.

இந்திய கடலோரக் காவல் படையின் தூத்துக்குடி பிரிவுக்குச் சொந்தமான "நாயக்தேவி" என்ற ரோந்துக் கப்பலில் வீரர்கள் தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து 30 கடல்மைல் தொலைவு பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, நவீன ஆயுதங்களுடன் வெளிநாட்டுக் கப்பல் ஒன்று செல்வதாக கடலோரக் காவல்படையினருக்குத் தகவல் கிடைத்தது. இந்திய கடல் பகுதியில் அனுமதியின்றி நுழைந்த அந்தக் கப்பலை காவல் படையினர் சுற்றி வளைத் தனர்.

விசாரணையில், "சீமேன் கார்டு" என்ற பெயர் கொண்ட அந் தக்கப்பல் அமெரிக்காவிலுள்ள "அட் வன் போர்ட்" என்ற தனியார் நிறுவனத்துக்குச் சொந்தமானது என்பதும், கப்பலில் 10 மாலுமிகள், 25 படைவீரர்கள், 35 நவீன ரக துப்பாக்கிகள் இருப்பதும் தெரிய வந்தது.

தூத்துக்குடி கடலோரக் காவல் படையினரும், கிழக்கு பிராந்திய கடற்படை உயர் அதிகாரிகளும் கப்பலுக்குச் சென்று விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணையின் போது சர்வதேச கடல் எல்லைப் பகுதியில் சென்றபோது போதுமான எரிபொருள், உணவு இல்லாத காரணத்தால் தூத்துக்குடி துறைமுகத்துக்கு வந்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய கப்பலில் இருந்தவர்கள் முடிவு செய்திருக்கின்றன ரெனவும் இந்திய கடல் பகுதிக்குள் திடீரென அனுமதியின்றி அக்கப் பல் நுழைந்த தால் சந்தேகத்தின்பேரில் அந்தக் கப்பலைச் சுற்றி வளைத் ததாகவும் கடலோரக் காவல் படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும், தொடர்ந்து விசாரணை நடைபெறுவதாகவும், அவர்களுக்குத் தேவையான உணவு, எரி பொருடகளை யார் மூலம் வழங் குவது என்பது குறித்து ஆலோசிப் பதாகவும் கடலோரக் காவல்படை அதிகாரிகள் தெரிவித்தனர். (2)

# பிலிப்பைன்ஸை தாக்கியது நாரி புயல்

பிலிப்பைன்ஸ் நாட்டைத் தாக்கிய நாரி புயலால் 13 பேர் உயிரிழந்ததாகவும், இலட்சக் கணக்கான மக்கள் மின்சாரம் இன்றித் தவிப்பதாகவும் பேரிடர் மேலாண்மை அதிகாரி எக்ஸன் எகார்க் தெரிவித்துள்ளார்.

நாரி புயல் தாக்கியபோது அங்குள்ள கடற்பகுதிகளில் மணிக்கு 185 கி.மீ வேகத்தில் பலத்த காற்று வீசியது. கனமழை காரணமாக நிலச்சரிவுகளும், வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டுள்ளன. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 2500 பேர் கடற்புற கிராமங்களிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளதாக பேரிடர் மேலாண்மை அதிகாரி தெரிவித்துள்ளார்.

மின்சார வயர் அறுந்து விழுந்ததில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்தார். பலத்த காற்று காரணமாக மரங்கள் வேரோடு சாய்ந்தன. இதில் மீனவர் ஒருவர் உயிரிழந்தார என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன் வீடொன்றின்மீது மரம் விழுந்ததில் 3 பேர் உயிரி ழந்தனர். அதிர்ச்சி காரணமாக மாரடைப்பில் ஒருவர் உயிரிழந்தார். 20 கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. 10ஆயிரம் ஹெக்டேயர் விளை நிலங்கள் நீரில் மூழ்கியுள ளன என்று அந்த மாகாணத்தின் ஆளுநர் ஆரேலியோ உமாலி தெரிவித்தார்

மீட்புப் பணிகள் நடைபெற்று வருவதாகவும் 2 நாட்களில் வீதிகள் சீர்படுத்தப்படும் என்றும், புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு மின்சாரம் வழங்கப்படும் என்றும் அந்தப் பகுதிக்கான பேரிடர் மேலாண்மை அதிகாரி நிகெல் லோன்டோக் தெரிவித்தார்.

இந்தப் புயலின் காரணமாக சுமார் 20 இலட்சம் மக்கள் மின்சாரம் இன்றி தவிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமன் பக்தனைக் கொன்றவன் முருகன் எதிரியை ஆட்கொண்டவன்

தமிழில் **வி** என்ற எழுத்துக்கு தனி மதிப்புண்டு. மனித மொழிகளில் சொற்கள் உயர்வானவையாக இருப்பது வழமை. ஆனால் தமிழ் மொழியில் தனி எழுத்து உயர்வானதாக இருப்பது அதிசயமானதே. அவ்வகையில் தமிழில் வரும் **வி** என்ற தனி எழுத்து பெற்றிருக்கும் உயர்வை நாம் அறிந்து கொள்ளாதிருப்பது அழகல்ல.

**வி** என்றால் மேலானது என்று பொருள். விநாயகன் என்றால் தனக்கு மேல் நாயகன் இல்லாதவன் என்று பொருள் உரைப்பதே சரியானது என தமிழியலாளர்கள் கூறுவர்.

**விநாயகன்** என்றால் பிள்ளையார் என்றும் **வினாயகன்** என்றால் இராமர் என்றும் பொருள் படும் என்பதை அறிந்திருப்பார் அதிகமில்லை.

விநாயகன் என்றால் தனக்கு மேல் தலைவன் இல்லாதவன் என்றும் வினாயகன் என்றால் வில்லுக்குத் தலைவனாக இருப்பவன் என்றும் விளக்கம் கொடுக்கலாம். ஆக, **வி** என்ற எழுத்து மகிமையானது என்பதை இனிமேல் நீங்கள் யாரும் மறுத்து விடமாட்டீர்கள்.

இன்று விஜயதசமி. விஜய என்பது வெற்றியைக் குறிக்கும். விஜய என்ற சொல் வெற்றியைக் குறிப்பதென்பது பொருள்படு தன்மையால் ஏற்பட்டதல்ல. அது செயற்படு தன்மையால் ஏற்பட்டதாகும்.

அதாவது துரியோதனின் வஞ்சனையால் வனவாசம் செல்ல வேண்டிய பாண்டவர்கள் தாம் வைத்திருந்த ஆயுதங்களை வன்னி மரத்தின் கீழ் மறைத்து வைத்து விட்டு வனவாசம் சென்றனர்.

14 ஆண்டுகள் வனவாசம் முடிபுற்றதும் வன்னி மரத்தின் கீழ் மறைத்து வைத்திருந்த ஆயுதங்களை எடுத்து அதற்கு ஆயுத பூசை செய்தனர்.

வில்லுக்கு விஜயனாக இருக்கக் கூடிய அருச்சுனனே ஆயுத பூசையை செய்ததன் காரணமாகவும் அன்று தசமியாக இருந்தமையாலும் அந்நாள் விஜயதசமி என்றாயிற்று என்பது இதிகாசக் கதை.

விஜயதசமி என்பதற்கு வேறுபாடுடைய புராணக்கதைகளும் உண்டு என்பதை நாம் மறுதலிக்கவில்லை.

விஜயதசமி நாளில் ஆயுத பூசை செய்து பாண்டவர்கள் ஆயுதங்களைக் கையில் எடுத்தமையால், கௌரவர் சேனை அழிந்தது. அதாவது அதர்மம் அழிந்து தர்மம் வெற்றி வாகை சூடியது. எனவேதான் விஜயதசமி என்பது வெற்றிக்குரியதாயிற்று எனலாம்.


எதுவாயினும் வடக்கு மாகாண தமிழ் அரசு நவராத்திரி காலத்தில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டமையும் அதன் முதலமைச்சர் விக்னேஸ்வரன் **வி** என்ற மேலான எழுத்தை த்ன் நாமத்தின் முதலெழுத்தாகக் கொண்டிருப்பதும் தனக்கு மேலான முதலமைச்சர் எவரும் இல்லை என்பதை அவர் நிரூபிக்க வேண்டும் என்பது தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட வடக்கின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு ஜனாதிபதி விநாயகர் சிலை ஒன்றைக் கொடுத்திருந்தார்.

விநாயகன், ஞானஅறிவின் வடிவினன் என்பதால் தமிழர்கள் தங்கள் உரிமைப் போராட்டத்தின் ஆயுதமாக அறிவைப் பிரயோகிக்க வேண்டும் என்ற பொருள்பட இவ்விடத்தில் முன்னர் பிரஸ்தாபித்திருந்தோம்.

இப்போது கடந்த 11.10.2013 இல் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களும் அமைச்சர்களும் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

இவ்வாறு சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட போது முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு மகுடம் தரித்து வேலாயுதத்தை மக்கள் கையில் கொடுத்தனர். தெற்கில் பிள்ளையார் சிலையைக் கொடுக்க, வடக்கில் வேல் கொடுக்கப் பட்டது.



இதன் தத்துவம் என்ன என்று பார்ப்பது இங்கு பொருத்துடையதாகும்.

வேல் ஆழ்ந்து அகன்ற கூரிய வடிவம் உடையது. ஒருவனுடைய அறிவு எங்ஙனம் இருக்க வேண்டுமெனில் வேல் போல் ஆழமாகவும் அகன்றும் கூர்மையாகவும் இருத்தல் வேண்டும்.

வேலும் வில்லும் வி என்ற எழுத்து வரிக்குட்பட்டதாயினும் வேலுக்கும் வில்லுக்கும் வித்தியாசம் உண்டு.

வேலுக்கும் வில்லுக்கும் இருக்கக்கூடிய வித்தியாசம் என்ன என்று நீங்கள் கேட்டால், முருகனுக்கும் இராமனுக்கும் உள்ள வித்தியாசத்தைத் தெரிந்து கொள்வது அவசியம்.

இராமன் தனது பக்தனை கொன்றவன். வாலி இராம பக்தன். எனினும் தன் பக்தன் என்றும் பாராது மறைந்து நின்று வில் நாண் தொடுத்து வாலியைக் கொன்றான்.

ஆனால், முருகன் தன் எதிரியையும் ஆட்கொண்டவன். தன்னை எதிர்த்துப் போரிட்டவன் என்றும் பாராது சூரனையும் தன் வேல் கொண்டு ஆட்கொண்டவன் முருகன்.

ஆக, இராமன் தன் பக்தனைக் கொல்ல, முருகனோ! தன் எதிரியையும் ஆட்கொண்டான்.

இப்போது வில், வேல் இரண்டையும் நோக்கின் வில் ஆட்கொல்லும் வேல் ஆட் கொள்ளும் தன்மை உடையவை.

எனவே, ஆட்கொல்லுதல் என்ற போராட்ட நடைமுறை சமகாலத்து உலகமயமாதல் என்ற சூழமைவுக்கு பொருத்துடையதல்ல. இப்போது ஆட்கொள்ளுதலே பொருத்துடையதாகும்.

ஆட்கொள்ளல் என்பது எதிரியின் வலிமையை அடக்கி, அவன் நம்மைத் தாங்குபவனாக, நமக்குப் பணி செய்பவனாக ஆக்குதலாகும்.

எனவே, வடக்கின் முதலமைச்சருக்கு தமிழ் மக்கள் வேலாயுதத்தைக் கொடுத்ததன் தத்துவம் எதிரிகளை ஆட்கொள்ளுங்கள் என்பதாகும்.

## வேலுக்கும் வில்லுக்கும் வித்தியாசம் காண்மினே!

எதிரியை ஆட்கொள்வதற்கு வேல் போன்ற அறிவுடைய தமிழர்களை தேர்ந்தெடுத்து அவர்களை ஒன்று திரட்டி, அதன் மூலம் எதிரிகளைப் பலமிழக்கச் செய்யும் வேல்வியூகம் அமைக்க வேண்டும்.

இந்த வேற்படைக்கு அண்டை நாட்டு ஆதரவும் சர்வதேச பலமும் அவசியம். இந்தப் பலத்தோடு சூரன் உடலற, வாரி சுவரிட வேலை வீசுங்கள். எங்கள் வினை அறும்.

விதுரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்டாங்கண்டல் கிராமத்தில் உள்ள 54 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் இல்லை

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்ட மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவின் நட்டாங்கண்டல் கிராம சேவையாளர் பிரிவில் 54 குடும்பங்கள் நிரந்தர வீடுகள் இன்றி தற்காலிக கொட்டகைகளில் மழையிலும் வெயிலிலும் அல்லலுறுவதாக பாதிக்கப்பட்ட குடும்ப அங்கத்தவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு உறவினர்கள், நண்பர்கள் வீடுகளிலும் மற்றும் முகாம்களில் இருந்தும் பல குடும்பங்கள் மேற்குறித்த கிராமத்தில் மீள் குடியேற்றம் செய்யப்பட்டன.

இவ்வாறு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட வர்களில் 54 குடும்பங்களுக்கு நிரந்தர வீட்டுத் திட்டம் வழங்கப்படவில்லை.

இக்கிராமத்தில் 150 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில் 60 குடும்பங்களுக்கு இந்திய வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

20 குடும்பங்களுக்கு யு.என் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டது. போரால் சேதமடைந்த 16 வீடுகள் யு.என் நிறுவனத்தால் புனரமைத்து கொடுக்கப்பட்டது.



ஏனைய 54 குடும்பங்களுக்கு மீள் குடியே ற்றம் செய்யப்பட்டு நான்கு வருடங்கள் கடந்த நிலையிலும் இன்னமும் நிரந்தர வீட்டுத் திட்டம் வழங்கப்படவில்லை.

ஒருவரை அங்கத்தவராக கொண்ட குடும் பத்திற்கும், அதற்கு மேற்பட்ட எண்ணிக்கை யுடைய குடும்பங்களுக்கும் இவ்வீட்டுத்திட்டம் கொடுக்கப்படவில்லை. இக்குடும்பங்களில் வறுமைக் கோட்டிற்கு உட்பட்டவையாகவும் சிறு பிள்ளைகளை அங்கத்தவராக கொண்ட தாகவும் உள்ளன. ஆதலால் இக்குடும்பங்கள் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றன.

எனவே உரிய தரப்பினர் இப்பிரச்சினை களை கருத்திற் கொண்டு இக்குடும்பங்க ளுக்கு நிரந்தர வீட்டுத்திட்டம் கிடைக்க ஆவன செய்யுமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளனர். (ம-267)





# முல்லை.மாவட்டத்தில் 612 பேர் காணாமற்போயுள்ளனர்

(முல்லைத்தீவு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணாமற் போனவர்கள் பற்றிய முறைப்பாடு களை விசாரணை செய் யும் ஜனாதிபதியின் ஆணைக்குழு முல்லை மாவட்ட அரச அதிபர், கிராம சேவையாளர் ஆகியோரை கடந்த வெள்ளிக்கிழமை முல்லை மாவட்ட செயலகத் தில் சந்தித்து காணாமற் போன வர்கள் பற்றி கலந்துரையாடியுள்ளனர்.

இதில் முல்லை. மாவட்டத்தில் கரைதுறைப் பற்று பிரதேச செயலர் பிரிவில் 175, புதுக் குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 173, ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 122, துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 90, மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 50, மணலாறு (வெலிஓயா) பிரதேச செயலர் பிரிவில் 2 பேருமாக மொத்தமாக 612 பேர் காணாமற் போயுள்ளதாக கிராம சேவையாளர் கள் தெரிவித்தனர்.

இவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்பதற்



கான பதிலை தமக்கு விரைவில் தர வேண்டு மென காணாமற் போனவர்களின் உறவினர் கள் தம்மிடம் கேட்பதாக கிராம சேவையாளர் கள் ஆணைக்குழுவிடம் தெரிவித்தனர்.

1987 ஆம் ஆண்டு கால போரின் போதும் காணாமற் போனவர்களின் நிலைமையும் என்ன என தம்மிடம் மக்கள் கேட்பதாக கிராம சேவை யாளர்கள் ஆணைக்குழுவிடம் தெரிவித்தனர்.

எனவே கிராம சேவையாளர்களிடம் படிவ ங்களை வழங்கி அதில் காணாமற் போன வர்களின் விபரங்களை சேகரித்து தருமாறும் தாம் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளுக் கும் வருகை தந்து காணாமற் போனவர்க ளின் உறவினர்களை சந்தித்து விசாரிக்க விரும்புவதாகவும் ஆணைக்குழுவினர் தெரிவித்தனர். (ம-267)

## வீதி புனரமைக்கப்படவில்லை

(முல்லைத்தீவு)

அளம்பில் கடற்கரை வீதி புனரமைக்கப் படாமையால் பயணிப்போர் பெரும் சிரமங் களை எதிர் கொள்கின்றனர்.

ஒரு கிலோ மீற்றர் நீளம் கொண்ட இவ்வீதி குன்றும் குழியுமாக காணப்படுவதால் விபத்துக்கள் பல இடம் பெறும் சூழ்நிலை காணப்படுகிறது.

எனவே, துறைசார்ந்த அதிகாரிகள் இவ் வீதியை புனரமைத்துத் தர வேண்டுமென பயணிகள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர்.

(ம-267)

## ஏடு தொடக்கும் நிகழ்வு

(பூந்தோட்டம்)

வவுனியா சுத்தானந்த இந்து இளை ஞர் சங்கத்தில் இன்று விஜய தசமி அன்று ஏடு தொடக்கும் நிகழ்வு இடம் பெறவுள்ள தாக சங்கத்தின் துணை செயலாளர் சி. நாகராசா தெரிவித்தார்.

இதேவேளை சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் இடம்பெற்று வரும் நவராத்திரி விழாவின் போது பல்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெறவிருப்பதாக தெரிவித்தார்.

இன்று மாலை 5 மணிக்கு திருமதி சூரியாழினி வீரசிங்கத்தின் நிருத்திய நிகேதன மாணவிகளின் கலை நிகழ்வு களும் இம்பெறவுள்ளதாகவும் தெரிவித் தார். (ம-266)

# தேநீர்ச்சாலை இயங்காமையால் நோயாளர்கள் பெரும் அவதி


(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை வளாகத்தில் உள்ள தேநீர்ச்சாலை இயங்கா மையால் நோயாளர்கள் 300 மீ. தூரம் சென்று சிற்றுண்டிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை உள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு மீள்குடியேற் றத்துடன் இயங்கி வரும் இவ் வைத்தியசாலை யில் தினமும் 50க்கும் மேற்பட்ட உள்ளக நோயாளர்களும் 300இற்கு மேற்பட்ட வெளி நோயாளர்களும் சிகிச்சை பெற்று வருகின் றனர்.

இந்நிலையில் வைத்தியசாலை வளாகத்தில் இயங்கி வந்த தேநீர்ச்சாலை கடந்தமுதலாம் திகதியிலிருந்து இயங்காத நிலையில் உள்ளது.

இதனால் [illegible] வருவோரும் [illegible] தேநீரும்



சிற்றுண்டிகளும் கிடைக்காது சிரமப்படுகின் றனர்.

300மீ தூரத்துக்கப்பால் வேறு இடங்களு க்கு சென்றாலும் அங்கு உள்ள தேநீர்ச்சாலை [illegible] நோயாளர்களுக்குரிய உணவு வகைகள் இல்லாத நிலை காணப்படுகின்றது.

எனவே நோயாளர்களின் நலனைக் கருத்திற் கொண்டு இத் தேநீர்சாலையை இயங்க வைக்க வைத்தியசாலை வட்டாரங் கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென நோயாளர்கள் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளனர். (ம-267)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவன் புத்திசாலியா, முட்டாளா என்று கண்டுபிடிக்க அவனை ஐந்து நிமிடம் பேச விடு.
~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நீங்கள் பால்காவடி எடுத்தால் நாங்கள் துலாக்காவடி எடுப்போம்

வடக்கு மாகாண அரசின் உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் கடந்த 11ஆம் திகதி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களும் வேறு சிலருமே சத்தியப்பிரமாணம் செய்து கொண்டவர்களாவர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகளின் உறுப்பினர்களில் ஒன்பது பேர் இன்னமும் சத்தியப்பிரமாணம் செய்யவில்லை.

அமைச்சரவைப் பங்கீட்டில் ஏற்பட்ட இழுபறி நிலையால் கடந்த 11ஆம் திகதி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த சத்தியப்பிரமாண நிகழ்வில் ரெலோவின் தலைவர் தவிர்ந்த ஏனைய கட்சித் தலைவர்கள் பங்கேற்கவில்லை.

இவர்கள் பங்கேற்க மாட்டார்கள் என்பதை தமிழரசுக் கட்சியும் வடக்கின் முதலமைச்சரும் நன்கு அறிந்திருந்தனர் என்பதை வடக்கு மாகாண சபை முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்களின் உரை உறுதி செய்திருந்தது.

அதாவது சத்தியப்பிரமாண நிகழ்வில் முதலமைச்சர் ஆற்றிய உரை ஏற்கெனவே மிக நிதானமாகத் தயார் செய்யப்பட்டதாகும். அந்த உரையில், கூட்டமைப்புக்குள் இருக்கக்கூடிய ஒற்றுமையீனங்கள் வெளிப்படையாகச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இந்த வெளிப்படுத்தல், வடக்கின் முதலமைச்சர் என்ற வகையில் அமைந்ததல்ல. மாறாக அவர் ஒரு நீதியரசராக இருந்ததன் அடிப்படையில் தனக்கெது பிழையாகத் தெரிந்ததோ! அதை அவர் அப்படியே கொட்டித் தள்ளிவிட்டார்.

முதலமைச்சரின் உரைக்கு தமிழ் மக்கள் பலத்த ஆதரவைத் தெரிவித்துள்ளனர். அது மட்டுமன்றி அரசியல் பண்பாட்டில் மூழ்கி, எதையும் நேரடியாகச் சொல்லமுடியாமல் தத்தளித்த தமிழரசுக் கட்சியின் முக்கிய புள்ளிகளுக்கும் முதலமைச்சர் விக்னேஸ்வரனின் உரை பலத்த ஆறுதலைக் கொடுத்திருக்கும். எதுவாயினும் முதல்வரின் குற்றச்சாட்டுக்களின் குறிவைப்புகள் தமிழரசுக் கட்சியை நோக்கியதாகவும் இருக்கும் என்பதை இப்போது மன ஆறுதல் அடைபவர்கள் உணர்ந்து கொண்டு, தமது பாதையை செம்மைப்படுத்திக் கொள்ளது நன்மை தரும்.

இங்கு நாம் கூறவந்த விடயம், யாழ்ப்பாண வீரசிங்கம் மண்டபத்தில் சத்தியப்பிரமாணம் செய்யாத வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், இறுதிப் போர் நடந்த முள்ளிவாய்க்காலில் சத்தியப்பிரமாணம் செய்வதாகத் தீர்மானித்துக் கொண்டுள்ளனர்.

இந்தத் தீர்மானம் சரியானதா? என்பதற்கு அப்பால், எடுக்கப்பட்ட இத்தீர்மானம் தமிழரசுக் கட்சிக்கும் வடக்கின் முதலமைச்சருக்கும் தலையிடி கொடுக்கக்கூடியது என்பது மட்டும் உண்மை.

முள்ளிவாய்க்காலில் சத்தியப்பிரமாணம் செய்வது என்ற தீர்மானத்தை எந்தப் புண்ணியவான் கொண்டு வந்தாரோ! தெரியவில்லை.

ஆனால், அவர் கொண்டுவந்த தீர்மானம் தமிழரசுக் கட்சியைப் பார்த்து, நீங்கள் யாழ்ப்பாணத்தில் பால்காவடி எடுத்தீர்கள். இதோ! நாங்கள் முள்ளிவாய்க்காலில் துலாக்காவடி எடுத்துக் காட்டுகிறோம் பார் என்பதாக இருக்கிறது.

வடக்கு மாகாண அரசில் சத்தியப் பிரமாணம் என்ற விவகாரம் பால்காவடி, துலாக்காவடி என்பதாக ஏறி இறங்க; நல்ல காலத்திற்கு மன்னார் ஆயர் தலையிட்டு காவடிகள் வேண்டாம். நாம் உங்கள் அனைவருக்கும் பாவ மன்னிப்புத் தருகிறோம் என்று கூற, முள்ளிவாய்க்காலில் சத்தியப்பிரமாணம் செய்வது என்ற முடிவில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்ற செய்தி மட்டுமே இப்போதைக்கு உண்மைத் தகவலாகும்.

# முள்ளிவாய்க்கால் சென்று சத்தியப்பிரமாணம் செய்வதா?

## அரியம் எம்.பி. சாடல்

முள்ளிவாய்க்காலில் சத்தியப்பிரமாணம் எடுப்பவர்கள் கீரோக்களாகவோ அல்லது ஏனைய இடங்களில் சத்தியப்பிரமாணம் எடுத்தவர்கள் முட்டாள்கள் என்றோ யாரும் கருதிவிட முடியாது. எமது மாவீரர்கள் எந்த இலட்சியத்திற்காக மரணித்தார்களோ அந்த இலட்சியத்தை கொச்சைப்படுத்தும் அளவிற்கு யாரும் செயற்பட முனையக்கூடாது என த.தே.கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

த.தே.கூட்டமைப்பின் கட்டம் கட்டமான சத்தியப்பிரமாணம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

த.தே.கூட்டமைப்பு தமது கொள்கையில் இருந்து சற்றும் விலகிச் செயற்பட முனையாது அந்தக்கொள்கையில் இருந்து கொண்டுதான் எமது மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயலும் என்பதில் யாருக்கும் எந்தச் சந்தேகமும் இருக்கக்கூடாது.

வடமாகாண சபைத்தேர்தலின் சத்தியப்பிரமாண நிகழ்வானது மூன்று கட்டங்களாக நடைபெற்றன. முதலாவது நிகழ்வு ஜனாதிபதியின் முன்னிலையில் அலரிமாளிகையிலும், இரண்டாவது நிகழ்வு யாழ்ப்பாணத்தில் வீரசிங்கம் மண்டபத்திலும், மூன்றாவது நிகழ்வு எதிர்வரும் நாட்களில் முள்ளிவாய்க்காலிலும் இடம்பெற இருக்கின்றது.

எந்த இடத்தில் சத்தியப்பிரமாணம் எடுக்கின்றோம் என்பது முக்கியமல்ல. அதில் எழுதப்பட்டிருக்கும் வசனங்கள் அனைத்தும் ஒரே விடயம் தான் என்பதனை மாத்திரம் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது இலங்கை நாட்டின் ஜனநாயக சோசலிச குடியரசின் இறைமையை பேணிப் பாதுகாப்போம் என்று தான் சத்தியப்பிரமாணம் எடுக்கின்றோம். இந்த வசனங்கள் எங்கும் மாற்றப்படுவதில்லை என்பதனை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

முள்ளிவாய்க்காலில்தான் இறுதிக் கட்டபோர் இடம்பெற்றது. இந்த இடத்திலே வகைதொகையின்றி எமது மக்களும், போராளிகளும் தாங்களது உயிர்களை மாய்த்தார்கள். எனவே இப்பிரதேசம் ஒரு புனிதப்பிரதேசமாகவே பார்க்கப்பட வேண்டியதொன்றாகும். இதனை விடுத்து இங்கு சத்தியப்பிரமாணம் செய்வதென்பது வேதனைக்கும் வேடிக்கைக்கும் உரிய ஒன்றாகவே பார்க்கப்படுகின்றது.

முள்ளிவாய்க்காலில் சத்தியப்பிரமாணம் எடுப்பவர்கள் கீரோக்களாகவோ அல்லது ஏனைய இடங்களில் சத்தியப்பிரமாணம் எடுத்தவர்கள் முட்டாள்களாகவோ யாரும் கருதிவிடமுடியாது. எமது மாவீரர்கள் எந்த இலட்சியத்திற்காக மரணித்தார்களோ அந்த இலட்சியத்தை கொச்சைப் படுத்தும் அளவிற்கு யாரும் செயற்பட முனையக்கூடாது.

இறுதிக்கட்டப் போராட்டத்தில் இலட்சக்கணக்கான தமிழ் மக்களை கொன்று குவித்த அரசாங்கத்திற்கு தமக்குள்ள ஒரே ஆயுதமாகவுள்ள ஜனநாயக ரீதியான வாக்குச்சீட்டு மூலமே தமிழ் மக்கள் பாரிய பதில் அடியைக் கொடுத்தார்கள்.

சிலர் அமைச்சுப் பதவிகளுக்காகவும், சலுகைகளுக்காகவும் கட்சிக்குள்ளே முட்டி மோதிக்கொண்டிருப்பதும் ஊடக மாநாடுகளை வைத்து ஊடகங்களில் ஏட்டிக்கு போட்டியான அறிக்கைகளை விடுவதும் ஒட்டு மொத்த விடுதலைப் போராட்டத்தையும் கொச்சைப்படுத்துவதும், மலினப்படுத்துவதுமான செயற்பாடாகவே பார்க்க வேண்டியுள்ளது எனவும் அவர் கூறினார். (எ-8)

## புதையல் தோண்டிய ஒன்பது பேர் கைது

புதையல் தோண்டிய நான்கு படைச் சிப்பாய்கள் உள்ளிட்ட 9 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

உடுதும்பர நக்கல்ஸ் வனப்பிரதேசத்தில் புதையல் அகழ்வில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போதே இவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்தே 9 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களில் இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்ற இரு சிப்பாய்கள் ஓய்வு பெற்ற ஒரு இராணுவ சிப்பாய், சேவையில் இருந்து விலக்கப்பட்ட ஒரு சிப்பாய் ஆகியோர் அடங்குவதாக தெரியவந்துள்ளது. (அ-2)

## ரிசானா குடும்பத்துக்கு வீடு கையளிப்பு

சவூதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்ட ரிசானா நபீக்கின் குடும்பத்தினருக்காக நிர்மாணிக்கப்பட்ட வீடு உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழக சமூகம் மற்றும் இலங்கை இராணுவம் ஆகியன இணைந்து கட்டிய இந்த வீடு நேற்றைய தினம் ரிசானாவின் குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

ரிசானா நபீக்கிற்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதன் பின்னர் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் அவரது குடும்பத்தினருக்கு வீடொன்றை அமைத்துக் கொடுப்பதாக பலர் வாக்குறுதியளித்திருந்தனர். எனினும் அவர்களில் எவரும் முன்வராத நிலையில் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழக சமூகம் மற்றும் இலங்கை இராணுவம் ஆகியன இணைந்து வீடொன்றை அமைத்துக் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-2)

## ஜனாதிபதி வேட்பாளராக சஜித்தை நியமிக்கத்திட்டம்

சஜித் பிரேமதாசவை ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்க திட்டமிடப்பட்டுள்ளது. கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

தற்போது அமுலில் உள்ள நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்க இணங்கினால் மட்டுமே ஜனாதிபதி வேட்பாளராக சஜித்தை நியமிக்க முடியும் என கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஜே.ஆர். ஜயவர்தனவைத் தவிர்ந்த ஏனைய அனைத்து ஜனாதிபதிகளும் தாங்கள் கட்சித் தலைவர்களாக இல்லாத காலத்திலேயே ஜனாதிபதி வேட்பாளர்களாக போட்டியிட்டுள்ளனர்.

அதேபோன்று சஜித் பிரேமதாசவிற்கும் சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டுமென கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்,

ரணில் கட்சித் தலைமைப் பதவியை வகிக்கின்ற போது, சஜித் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவதில் சிக்கல்கள் கிடையாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-2)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### பூஜ்யமும் பூஜ்யரும்



பூஜ்யம். முழு எண் ஒன்று இருக்குமானால் அது பூஜ்யம் ஒன்றுதான். ஏன் என்றால் மற்ற எண்ணெல்லாம் ஒரு பக்கம் ஆரம்பிக்கும். ஒரு பக்கம் முடியும். உருவம் கோணல் மாணலாக இருக்கும். *1* என்ற எண்ணை எடுத்துக் கொண்டீர்களானால், அதற்கு மேல்முனை, கீழ் முனை என்று இரண்டு இருக்கின்றன. *2* என்ற எண்ணை எடுத்துக் கொண்டீர்களானால், முன் முனை இருக்கிறது. பின் முனை இருக்கிறது. மற்ற எண்கள் இந்தப் பக்கம் அந்தப் பக்கம் வளைகின்றன. 3,4,5,6,7,8,9 என்று எல்லா எண்களும் கோணல் மாணலாக இருக்கின்றன. ஆனால் பூஜ்ஜியத்தை எடுத்துப் பாருங்கள் *0* அது எங்கே தொடங்குகின்றதோ, அங்கே போய்த்தான் முடிகிறது.

பூஜ்யம்தான் முழுமையான எண். மற்ற எண்களுக்கு மதிப்பு வைத்திருக்கிறோம். பூஜ்யத்திற்கு மதிப்பு ஒன்றுமில்லை என நினைக்கிறோம். ஆனால், அதுவா ஒன்றுமில்லை? *1* என்ற எண்ணிணை எடுத்துக் கொள்ளுங்கள். பூஜ்யத்திற்குப் பின்னால் இந்த *1* ஐ வையுங்கள். இப்போது அதன் மதிப்பு 10. பூஜ்ஜியமோ ஒன்றுமில்லை. ஒன்றுமில்லாததை மதித்து அதற்கு பின்னால் *1* ஐவைத்தால் அதன் மதிப்பு பத்தாகி விட்டது. பூஜ்ஜியத்திற்கு ஒன்றுமேயில்லாத போதும் பூஜ்யத்தை அலட்சியப் படுத்தி *1* ஐ முன்னால் போட்டால் 1இன் மதிப்பு பத்தில் ஒன்று (0.1).

அது போன்று இறைவன் நிறைவானவன். தனக்கென்று தனி மதிப்பு இல்லாதவன். யார் அவனைச் சேர்ந்தார்களோ, அவர்களுடைய மதிப்பை உயர்த்தக் கூடியவன்.யார் அவனை அலட்சியம் செய்து ஒதுங்கி இருக்கிறார்களோ, அவர்கள் பத்தில் ஒன்றாக ஆகி விடுவார்கள். இறை நிலையை மதிப்பவர்கள் அந்த இறைநிலை அளவுக்கு உயர்வார்கள். இறைநிலையை உணர்ந்து அதை மதிப்பவர்களை பூஜ்யர் என்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை வசதிகளின்றி ரஞ்சன் முன்பள்ளி

(முல்லைத்தீவு)

**முல்லை மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவின் வற்றாப்பளை கிராம சேவையாளர் பிரிவில் உள்ள ரஞ்சன் முன்பள்ளி அடிப்படை வசதிகள் இன்றி உள்ளதால் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக மாணவர்களின் பெற்றோர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

கடந்த 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்துடன் ஆரம்பமாகிய இந்த முன்பள்ளியில் 26 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

மீள் எழுச்சித்திட்டத்தின் மூலம் இம்முன்பள்ளி கட்டடம் அமைத்துக் கொடுக்கப்பட்ட போதிலும் அடிப்படை வசதிகள் எதுவும் இங்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

குறிப்பாக மின்சார வசதி செய்து கொடுக்கப்படவில்லை .இதனால் மின்சாரம் சம்பந்தமான செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

மேலும் கணனி வசதிகளும் இல்லை.

அத்துடன் குடிநீர் வசதி இன்மையால் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள் கின்றனர்.

மேலும் விளையாட்டு உபகரணங்கள், கற்றல் உபகரணங்கள் போன்றவையும் வழங்கப்படவில்லை.

மாணவர்கள் தமது விளையாட்டுத் திறனை வளர்த்துக் கொள்ள முடியாத நிலையில் உள்ளதோடு விளையாடுவதற்கான முற்ற வசதியும்,குறுகியதாக உள்ளது.

கற்றல் உபகரணங்கள் இன்மையால் கற்றல் செயற்பாடுகளும் முன்னேற்றமற்றே காணப்படுகின்றது.

எனவே அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கு உதவ வேண்டுமென மாணவர்களின் பெற்றோர் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-267)

## புனரமைப்பு வேலை பூர்த்தியாக்கப்படவில்லை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட அக்கராயன் பிரதேச யூனியன் குள பாலம் புனரமைப்பு வேலைகள் முழுமையாக பூர்த்தியாக்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இப் பாலம் கிரவல் பரவப்பட்டு போக்குவரத்து செய்யக்கூடிய நிலையில் உள்ள போதிலும் மழை காலத்தில் கிரவல் அரித்து செல்லப்பட வாய்ப்புள்ளது.

எனவே பாலப் புனரமைப்பு வேலையை முழுமையாக பூர்த்தி செய்துதர வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-254)




## தமிழ் இலக்கிய எழுத்துத்தேர்வில் வெற்றிபெற்றோர் விபரம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட தமிழ் இலக்கிய எழுத்து தேர்வுகளின் முடிவுகள் தமிழ் சங்க செயலாளர் வே.இறைபிள்ளையால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு .

பிரிவு - அ (தரம் - 12, 13)

செல்வராஜா சிந்துஜா (உருத்திரபுரம்.ம.வி), மகேந்திரன் சுபானுஜா (உருத்திரபுரம் ம.வி), சிவலிங்கம் லக்ஷனா (கிளிநொச்சி இந்துக் கல்லூரி), தவராசா ஜனனி (உருத்திரபுரம் ம.வி)

பிரிவு - ஆ (தரம் - 10,11)

கேதீஸ்வரன் திவாரகா (பளை மத்திய கல்லூரி), விஜயகுமார் அருளினி (கிளிநொச்சி இந்துக் கல்லூரி), சிவகுமாரன் திதுசா (கிளிநொச்சி இந்துக் கல்லூரி)

பிரிவு - இ (தரம் - 8,9)

செல்வகாந்தன் துவாரகா (கிளிநொச்சி இந்துக்கல்லூரி), சுரேந்திரன் அக்ஷனா (கிளிநொச்சி இந்துக்கல்லூரி), உமாசங்கர் சஞ்சித் (கிளிநொச்சி இந்துக்கல்லூரி), தர்மகுலசூரியர் திலக்சனா (கிளிநொச்சி இந்துக் கல்லூரி) , சிவலிங்கம் கஜானி (கிளிநொச்சி இந்துக்கல்லூரி), நகுலகுமார் அபிராமி (திருவையாறு ம.வி) ( தொடரும்...)

## கடற்றொழில் உபகரணங்களை வழங்கி வாழ்வாதாரத்திற்கு உதவுக


(முல்லைத்தீவு)

முல்லை மாவட்ட கரைப்பற்று பிரதேச செயலர் பிரிவின் கருநாட்டுக்கேணி கிராம சேவையாளர் பிரிவில் உள்ள 188 மீனவ குடும்பங்களுக்கு கடற்தொழில் உபகரணங்கள் வழங்கப்படாமையால் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுக்க முடியாதுள்ளதாக கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த 1984 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்து 27 வருடங்களின் பின் 2011 ஆம் ஆண்டு மீள் குடியேற்றம் செய்யப்பட்ட 224 குடும்பங்கள் இக்கிராமத்தில் வாழ்ந்து வருகின்றன.

இவர்களில் 30 குடும்பங்களுக்கு 30 குல்லாவும் 9 வலைத் தொகுதிகளும், 6 குடும்பங்களுக்கு 6 படகும் 6இயந்திரங்களும் வழங்கப்பட்டன.

ஏனைய 188 குடும்பங்களுக்கு எவ்வித



கடற்றொழில் உபகரணங்களும் வழங்கப்படாமையால் தொழில் இன்றி வாழ்வாதாரத்தை முன்னெடுக்க முடியாமல் அல்லலுறுகின்றனர்.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-267)

## ஒன்றுபட்ட சமூகத்தை கட்டியெழுப்புவோம் என வலியுறுத்தி மோட்டார்வாகன பவனி



சேகுவேராவின் நினைவுகளைச் சுமந்து அவரின் கொள்கையுடன் ஒன்றுபட்ட மக்களாக இந்த தேசத்தை கட்டியெழுப்புவோம் எனும் தொனிப் பொருளில் ஜே.வி.பி இன் சோஷலிச இளைஞர் சங்கத்தால் மோட்டார் வாகனப் பவனி ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஆர்ஜென்டீனாவில் பிறந்த சேகுவேரா உலகின் சகல இடங்களிலும் வாழும் ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்களுக்கு இனம், மதம், மொழி, சாதி வேற்றுமைகளற்ற சிறந்ததோர் சமுதாயத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் பெற்றுக் கொடுப்பதற்காக உயிர் தியாகத்துடன் போராடி பொலிவியாவில் கொலை செய்யப்பட்டவராவார்.

இவர் கியூபா, பொலிவியா, கொங்கோ ஆகிய நாடுகளின் மக்களின் விடிவுக்காக போராடினார்.

சகோதரத்துவ கொள்கையுடன் சமாதானமான வாழ்வுக்காக போராடிய சேகுவேராவின் நினைவுகளைச் சுமந்து அவரின் வழியில் சகோதரத்துவத்திற்கான வாழ்க்கைப பயணத்தைக் கட்டியெழுப்பும் முகமாக ஜே.வி.பி இன் சோஷலிச இளைஞர் சங்கத்தால் இம் மோட்டர் வாகனப் பேரணி மேற்கொள்ளப்பட்டது.

கடந்த 8 ஆம் திகதி இருநூறுக்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்களில் 400 பேரளவில் இந்த பேரணியை ஆரம்பித்து காலி, அம்பாந்தோட்டை, மிகிந்தலை, பதுளை, அனுராதபுரம் என பவனி வந்து நேற்று முன்தினம் வவுனியாவை வந்தடைந்தது.

வவுனியாவில் இருந்து மீண்டும் அனுராதபுரம் சென்று அங்கு இடம்பெறவுள்ள மாபெரும் கூட்டத்தில் இப் பேரணி இணையவுள்ளது. (ம-250)

## கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் காணி பகுதிநாள் கூட்டம்


(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட சில கிராமங்களில் காணி பகுதி நாள் கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

இக் கூட்டங்கள் திருவையாறு மேற்கில் நாளை செவ்வாய்க்கிழமையும், தொண்டமான் நகரில் 24ஆம் திகதி, அம்பாள் கிராமத்தில் 29ஆம் திகதி ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளன.

மேலும் ஆனைவிழுந்தான்குள கிராமத்தில் எதிர்வரும் நவம்பர் மாதம் 5ஆம் திகதியும் சிவநகர் கிராமத்தில் நவம்பர் 14ஆம் திகதியும் கனகாம்பிகை குள கிராமத்தில் நவம்பர் 19 ஆம் திகதி, கிளி. நகரத்தில் நவம்பர் 26ஆம் திகதி ஆகிய தினங்களிலும் நடைபெறவுள்ளன.

இதனைத் தொடர்ந்து கிருஷ்ணபுரம் கிராமத்தில் எதிர்வரும் டிசம்பர் மாதம் 3ஆம்




திகதி, வட்டக்கச்சி கிராமத்தில் டிசம்பர் 10ஆம் திகதி, மாயவனூர் கிராமத்தில் டிசம்பர் 19ஆம் திகதி , புதுமுறிப்பு கிராமத்தில் டிசம்பர் 24ஆம் திகதி ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளன.


இக்காணிக்கான பகுதிநாள் கூட்டங்களில் அந்தந்த கிராமத்து மக்கள் தவறாது பங்கு பற்றி தங்கள் காணிக்குரிய பதிவுகளையும், பிணக்குகளையும் தீர்த்து கொள்ளலாம் என கரைச்சி பிரதேச செயலர் தே.நாகேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ம-254)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 72 ஓட்டங்கள் வித்தியாசத்தில்

# இந்தியாவை வீழ்த்தியது ஆஸி





[பெ]ய்லி தலைமையிலான அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

இரு அணிகள் இடையேயான ஒரே ஒரு இருபது-20 போட்டியில் இந்தியா 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்நிலையில் இந்தியா-அவுஸ்திரேலியா அணிகள் இடையேயான 7 ஒருநாள் போட்டித் தொடரில் முதல் ஆட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை புனேயில் நடந்தது.


மேற்படி அவுஸ்திரேலியாவுக்கெதிரான முதல் ஒரு நாள் போட்டியில் இந்திய அணி 72 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலியா அணி முதலில் துடுப்பெடுத்தாடி 50 ஓவரில் 8 விக்கெட் இழப்பிற்கு 304 ஓட்டங்கள் எடுத்தது.

பிலிப் ஹியுஸ் 47 ஓட்டங்களும், ஆரோன் பின்ச் 72 ஓட்டங்களும், மேக்ஸ்வெல் 31 ஓட்டங்களும், அணித்தலைவர் பெய்லி 85 ஓட்டங்களும், பால்க்னர் 27 ஓட்டங்களும் எடுத்தனர்.

கடின இலக்கை துரத்திய இந்திய அணிக்கு தொடக்க வீரர் தவான் 7 ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றினார். மற்றொரு தொடக்க வீரர் ரோகித் சர்மா 42 ஓட்டங்கள் எடுத்து ஓரளவு கைகொடுத்தார்.பின் வந்த ஹோலி அரைசதம் கடந்து 61 ஓட்டங்களும், ரெய்னா 39 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

பின்னர் வந்த அணித் தலைவர் தோனி 19 ஓட்டங்களும், ஜடேஜா, வினய் குமார் தலா 11 ஓட்டங்களும் புவனேஷ்வர் 18 ஓட்டங்களும் எடுத்து ஏமாற்ற இந்திய அணி 50 ஓவரில் 232 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 72 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.



இதன்மூலம் 7 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் அவுஸ்திரேலிய அணி 1-0 என முன்னிலை பெற்றது.

இரு அணிகளுக்கும் இடையிலான 2-வது ஒரு நாள் போடடி நாளை மறுதினம் பிற்பகல் 1.30 மணிக்கு ஜெய்பூரில் இடம்பெறவுள்ளது.

## உலக கோப்பை கால்பந்து

# கொலம்பியா தகுதி



32 அணிகள் பங்கேற்கும் 20-வது உலக கோப்பை கால்பந்து போட்டி பிரேசிலில் அடுத்த ஆண்டு நடக்கிறது. இதற்கான தகுதி சுற்று ஆட்டங்கள்கண்டங்கள்வாரியாகநடந்துவருகிறது.

இதில் ஒருங்கிணைந்த ஐரோப்பிய கண்ட அணிகளுக்கான தகுதி சுற்று போட்டியில 'ஏ' பிரிவில் குரோஷி யாவில் நடந்த லீக் ஆட்டம் ஒன்றில் பெல்ஜியம் அணி 2-1 என்ற கோல் கணக்கில் குரோஷியாவை வீழ்த்தியது. இதன் மூலம் 9 ஆட்டத்தில் விளையாடி 8 வெற்றி, ஒரு சமனிலையுடன் 25 புள்ளிகள் பெற்ற பெல்ஜியம் அணி தனது பிரிவில் முதலிடத்தை பிடித்து 12 ஆண்டுகளுக்கு பிறகு உலக கோப்பை போட்டிக்கு தகுதி பெற்றது.

இதன் சி பிரிவில் ஜெர்மனியும், இ பிரிவில் சுவிட்சர்லாந்தும் உலக கோப்பை வாய்ப்பை உறுதி செய்தன. இதே போல் தென் அமெரிக்க கண்ட அணிகளுக்கான தகுதி சுற்று போட்டியில் 9 அணிகள் பங்கேற்றுள்ளன.

இதில் கொலம்பியா-சிலி அணிகள் மோதிய ஆட்டம் 3-3 என்ற கணக்கில் சமனிலையில் முடிந்தது. இந்த பிரிவில் இதுவரை 15 ஆட்டத்தில் விளையாடி இருக்கும் கொலம்பியா அணி 8 வெற்றி, 3 சமனிலை, 4 தோல்வியுடன் 27 புள்ளிகள் பெற்று 1998-ம் ஆண்டுக்கு பிறகு முதல் முறையாக உலக கோப்பை போட்டியில் விளையாடும் வாய்ப்பபை பெற்றது. உலக கோப்பைக்கு இதுவரை மொத்தம் 14 அணிகள் தகுதி பெற்றுள்ளன.

## ஷாங்காய் மாஸ்டர்ஸ் டென்னிஸ்;

# இறுதியில் ஜோகோவிச்



(ஷாங்காய்) ஷாங்காய் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் விளையாட நட்சத்திர வீரர் நோவாக் ஜோவிச் (செர்பியா, 2வது ரேங்க்) தகுதி பெற்றார்.அரை இறுதியில் பிரான்ஸ் வீரர் ஜோ வில்பிரைடு சோங்காவுடன் நேற்றுமுன்தினம் மோதிய ஜோகோவிச், 6-2 என்ற கணக்கில் முதல் செட்டை மிக எளிதாகக் கைப்பற்றி முன்னிலை பெற்றார்.

இரண்டாவது செட்டில் சோங்கா கடும் நெருக்கடி கொடுத்ததால் ஆட்டம் இழுபறியாக நீடித்தது. இந்த செட்டின்போது ஜோகோவிச் அடித்த ஒரு ஷாட்டை நடுவர் அவுட் என அறிவித்தார். இந்த முடிவால் கடும் அதிருப்தி அடைந்த ஜோகோவிச் நடுவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். இதனால் களத்தில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது. பின்னர் தொடர்ந்த ஆட்டத்தில் ஜோகோவிச் 6-2, 7-5 என்ற நேர் செட்களில் வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். மற்றொரு அரை இறுதியில் ஆர்ஜென்டினாவின் ஜுவன் மார்ட்டின் டெல் போட்ரோவுடன் (6வது ரேங்க்) மோதிய நம்பர் 1 வீரர் ரபேல் நடால் 2-6, 4-6 என்ற நேர் செட்களில் அதிர்ச்சி தோல்வி அடைந்து வெளியேறினார்

# டெண்டுல்கருடன் யாரையும் ஒப்பிட முடியாது -அப்ரிடி

டெண்டுல்கருடன் யாரையும் ஒப்பிட இயலாது என்று பாகிஸ்தான் சகலதுறை வீரர் அப்ரிடி கூறியுள்ளார். இதுகுறித்து அவர் கூறியதாவது,

டெண்டுல்கர் எப்போதுமே தனது விருப்பபடியே விளையாடுவார். அவருடன் யாரையும் ஒப்பிட இயலாது. அவருடன் நான் அதிகமான போட்டியில் விளையாடி இருக்கிறேன். இந்த பூமியில் பிறந்த அற்புதமான வீரர். பழகுவதற்கு எளிமையானவர். உண்மையிலேயே டெண்டுல்கர் தான் தொழில் ரீதியான கிரிக்கெட் வீரர் ஆவார்.

ரசிகர்களை மிகப்பெரிய அளவில் கவர்ந்து இழுக்கக்கூடிய ஆற்றல் அவரிடம் இன்னும் இருக்கிறது. அவரது கிரிக்கெட் அர்ப்பணிப்பு பற்றி பல ஆண்டு காலம் பேசலாம். அவரது சாதனைகளை முறியடிக்க இயலாது. நீண்ட காலம் ஆகலாம்.இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

இதேபோல முன்னாள் அணித் தலைவர் ரஷித் லத்தீப் முன்னாள் பயிற்சியாளர் மோசின்கான் ஆகியோரும் டெண்டுல்கரை வெகுவாக பாராட்டி உள்ளனர்.

# தென்கொரியாவை வீழ்த்தியது பிரேசில்




தென் கொரியா அணிக்கெதிரான நட்பு கால்பந்து போடடியில் பிரேசில் அணி வெற்றி பெற்றது.

தென் கொரியா சென்ற பிரேசில் அணி நட்பு கால்பந்து போட்டியில் பங்கேற்றது.

சியோலில் நடந்த இப்போட்டியின் முதல் பாதியின் 44வது நிமிடத்தில் பிரேசில் அணியின் நெய்மர் ஒரு கோல் அடித்தார்.

தொடர்ந்து அசத்திய பிரேசில் அணிக்கு ஆஸ்கர் 49வது நிமிடத்தில் ஒரு கோல் அடித்து கைகொடுத்தார். இதற்கு எதிரணியால் பதிலடி தர முடியவில்லை. முடிவில் பிரேசில் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

# ஜப்பான் பார்முலா 1; வெப்பர் முதலிடம்



சுசூகா: ஜப்பான் கிராண்ட் பிரீ பார்முலா 1 கார் பந்தயத்தின் பிரதான சுற்று இன்று நடைபெற உள்ளது.இந்த போட்டியில் வீரர்கள் பங்கேற்கும் வரிசையை தீர்மானிப பதற்கான தகுதிச் சுற்று நேற்று நடந்தது. இதில் ரெட் புல் ரேசிங் ரூ ரெனால்ட் அணி வீரர் மார்க் வெப்பர் முதலிடம் பிடித்தார். அதே அணியை சேர்ந்த நடப்பு சம்பியன் செபாஸ்டியன் வெட்டல் 2-வது இடமும், மெர்சிடிஸ் அணீ வீரர் லூயிஸ் ஹாமில்டன் 3-வது இடமும் பிடித்தனர். நட்சத்திர வீரர் பெர்னாண்டோ அலான்சோ 8-வதாக வந்து ஏமாற்றமளித்தார். நடப்பு சீசனில் இதுவரை நடந்துள்ள 14 போட்டிகளின் முடிவில், செபாஸ்டியன் வெட்டல் 272 புள்ளிகளுடன் தொடர்ந்து முதல் இடத்தில் நீடிக்கிறார். அலான்சோ (195) 2-வது இடத்தில் உள்ளார். அடுத்த பந்தயமாக இந்தியன் கிராண்ட் பிரீ டெல்லி, கிரேட்டர் நொய்டாவில் உள்ள புத்தா சர்வதேச பந்தயக் களத்தில் எதிர்வரும் 25-27 திகதிகளில் நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சத்தியப்பிரமாண...

மைப்பின்மேல் நாங்கள் வைத்துள்ள நம்பிக்கையை வெளிப்படுத்தும்படி கேட்டிருந்தார்.

அவரது கோரிக்கை தொடர்பாக கூட்டமைப் பின் அங்கத்துவக் கட்சிகளைச்சேர்ந்த சித்தார்த்த னுட னும் சிவாஜிலிங்கத் துட னும்கலந்துரையாடப் பட்டது.

அதுமட்டுமன்றி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்கால நடவடிக்கைகள் மற்றும் அதனை உறுதியான அமைப்பாக ஒருகட்சியாகப் பதிவு செய்து அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லல் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் தான் சகல கட்சிகளையும அழைத்து மிகவிரைவாகப் பேசவிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இவற்றைச்சரியான முறையில் முன்னெடுத்துச்செல்வதற்கு ஏதுவாக அவரது கருத்தை ஏற்று இன்று நடைபெறவிருந்த பதவிப்பிரமாண வைபவத்தை நாங்கள் ஒத்திவைக்க முடிவு செய்துள்ளோம்.

இதனை சபையின ஆரம்ப நிகழ்வின போதோ அல்லது அதற்கு முன்னதாக இன்னொரு திகதியிலோ நடத்த எண்ணியுள்ளோம் என்பதைக்கூறிக்கொள்ள விரும்பு கின்றேன் இவ வாறு அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-8)

**யாழ்ப்பாண விவசாயிக்களுக்கு நற்செய்தி**

எமக்கு தரமான தக்காளி (100 கிலோ) மற்றும் கத்தரிக்காய் (50 கிலோ) தினமும் பகல் 12.00 மணிக்கு கிளிநொச்சி பஸ்தரிப்பு நிலையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். கொடுப்பனவு ஆர்டிபி வங்கி ஊடாக 24 மணித்தியாலத்திற்குள் செலுத்தப்படும்.

உங்களுக்கு ஆர்வம் இருப்பின், தயவு செய்து **077-7377813** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். ஆரம்பத்தில் ஆங்கிலத்தில் அல்லது சிங்களத்தில் உரையாடவும்.

(4150)

Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம் (4128)

WESTERN UNION MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம் தொடர்புகளுக்கு - 0212224040 / 0772931062

## இலங்கை...

ஆதாரங்களை வெளியிட்டுவிடுமோ என இலங்கை அரசாங்கம் அச்சம் கொண்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது இலங்கை படைத்தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சனல் 4 தொலைககாட்சி வெளியிட்ட மூன்று ஆவணப் படங்களும் சர்வதேச ரீதியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-8)

## மாகாண...

முல்லைத்தீவுக்கு மேற்கொண்டிருந்தார்.

இந்த விஜயத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன், எஸ்.வினோநோகராதலிங்கம், முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினர்கள் மரியம் பிள்ளை அன்ரனி ஜெயநாதன், ஆறுமுகம் சினனத்துரை, துரைராசா ரவிகரன், வீரபாகு கனக சுந்தரசுவாமி, திருமதி மேரி கமலா குணசீலன் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ-4)

## இணைந்து செயற்படு...

பின்னர் தமிழர்களுக்கு ஒரு தீர்வு கிடைக்குமானால் கூட்டமைப்பின் இந்தத் தீர்மானத்தை நிச்சயமாக ஏற்றுக்கொள்ளவே வேண்டும்.

ஆனால், அரசுடன் இணங்கிப் போவது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சற்று நிதானத்துடனும், கவனத்துடனும் செயறபடுவது மிக அவசியமானதாகும். காரணம் மகிந்த அரசு கடுமையான இனவாதத் தன்மை கொண்ட ஓர் அரசாகும்.

கடந்த வியாழக்கிழமை அரச தரப்பின் ஒன்பது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பிரதியமைச்சுபதவிகள் வழங்கப்பட்டன. இதில் தமிழர் என ஒருவர் கூட இருக்கவில்லை. அரசு தனது தரப்பில் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரைத் தேவைகளுக்கு மட்டும் பயன்படுத்திவிட்டு தற்போது தூக்கி எறிந்துள்ளது. இந்த நிலைமை நாளை தமிழ்த தேசியக் கூட்டமைப்புக்கும் ஏற்படலாம்.

இந்தியாவின் திட்டங்கள், சம்பூர் அனல் மின் நிலையம் என ஏதாவது ஒன்றை உள்நோக்காகக் கொண்டே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஒன்றிணைந்து செயற் பட இந்த மகிந்த அரசு முன்வருகிறது. இதனைக் கூட்டமைப்பும் உணர்ந்து கொள்ள வேண்டும.

மகிந்த அரசுடன் இணைவதற்கு முன்பாக தமிழ் மக்களைப் பற்றியும் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

எக்காரணம் கொண்டும் அரசின் கபட நாடகத்துக்கு ஏமா றவே கூடாது. ஏதாவது ஒரு சிறந்த, நிரந்தரத் தீர்வு எட்டப்படுமாக இருந்தால் மட்டுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் இணங்கி செயற்பட வேண்டும் என பதையும் வலியு றுத்த விரும்புகிறோம் என்று தெரிவித்தார் விக்கிரமபாகு. (எ-8)

## யாழ்தேவி மோ...

முன் பாய்ந்துள்ளார் இதன்போது தாயும் ஒரு மகளும் புகையிரதத்தில் மோதி உயிரிழந்த நிலையில் ஒரு மகள் தப்பித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் வெயங்கொட, கீனவல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

உயிரிழந்த இருவரின் சடலமும் வத்துபிட்டிவல வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் வெயங்கொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-8)

மற்றுமோர் கிளை நிறுவனம்

எமது வாடிக்கையாளர்களின் நன்மை கருதியும், பிறிண்டிங் வேலைகளை துரிதப்படுத்தி மேலும் எமது சேவையை விரிவுபடுத்தும் நோக்குடனும் எமது பல்வேறுபட்ட பிறிண்டிங் துறைகளில் ஒன்றான ஓவ்செற் பிறிண்டிங் பகுதியை தனியாக வேறுபடுத்தி புதிய பரிணாமத்தில்

**அன்றா பதிப்பகம்**

எனும் மற்றுமோர் கிளை நிறுவனத்தினூடாக

**356A, லக்சன் பிளாசா, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்** (எமது தலைமை அலுவலகம் அருகாமையில்)

என்னும் புதிய முகவரியில் இன்றிலிருந்து தனித்துவமான முறையில் ஆரம்பித்துள்ளோம் என்பதனை மிக மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

**வடக்கின் 10 வருட அனுபவம் வாய்ந்த**

**தனித்துவமான அச்சுப்பதிப்பின் முன்னோடி நிறுவனம்**

(C-5176)

Tel: 0212219979, 0776622981

அழகிய வடிவமைப்புக்களுடன் கூடிய

- புத்தக வெளியீடுகள்
- மாணவர் கையேடுகள்
- கல்வெட்டுப் புத்தகங்கள்
- துண்டுப் பிரசுரங்கள்
- போஸ்டர்கள், லேபல்கள்
- கலண்டர்கள், விசிற்றிங்காட்

மற்றும் சகலவிதமான அச்சுவேலைகளையும் உயர் தரத்தில் குறைந்த விலையில் எம்மிடம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

ANDRA PRINTERS

மற்றும்

- டிஜிற்றல் பனர்கள்
- பெயர் பலகைகள்
- வாகன ஸ்ரிக்கர்கள்

**திருமண அழைப்பிதழ்கள்**

என்பவற்றை வழமை போல் எமது தலைமை அலுவலகத்தில் செய்து பெற்றுக் பெற்றுக்கொள்ளலாம்

379, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் Tel: 021 2228929, 0772607614, 0777481696

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை [illegible] யாழ்ப்பாணம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.10.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.